# உத்தமன்

( ஷேக்ஸ்பியரின் ஒத்தல்லோ )

★

கவிஞர். அ. கு. ஆதித்தர்.

# ஆக்கியோன் முன்னுரை

வான்பெருங்கவி ஷேக்ஸ்பியரை வணங்கி இம்முகவுரையை எழுதுகின்றேன். பெருங்கவிஞர் எழுதிய நூல்கள் நாற்பதுக்கு மேல். அவற்றுள் வீனஸ் ஆண்ட் அடானிஸ், ரேப் ஆவ் லுக்ரீஸ் இரண்டும் அவர்தம் கவித்துவம் கற்பனு சக்திகளைக் காட்டுகின்ற இரு சிறந்த காவியங்கள் என உரையாசிரியர் பலரும் ஒருமுகமாகக்கூறுவர். இவற்றுள் ரேப் ஆவ் லுக்ரீஷியாவைக் "கற்புக்கனல்" என்னும் பெயரால் மூவாண்டுகட்கு முன் மொழி பெயர்த்தேன். அதனை முதனூலுக்கு ஏற்ற முறையே சிறப்புடன் அமைந்ததாகத் தமிழுலகம் பாராட்டி நின்றது.

பெருங்கவிஞரின் நாடகங்களுள் சிறந்தனவாகப் பலராலும் கருதப்படுவன நான்கு. அவை மக்பத், கிங் லீர், ஹாம்லத், ஒத்தல்லோ என்பனவாம். இந்நான்கில் ஒத்தல்லோ சாலச் சிறந்ததாகக் கருதப்படும். காரணம்: அக்கதையின் இயற்கை நவிற்சியே. அசம்பாவிதமான நடப்புகள், அற்புதங்கள் அங்குத் தோன்ரு; கதை முழுவதும் ஒன்றிரண்டு நாட்களின் நடப்பாகக் காட்டப் பட்டிருக்கின்றது; மக்கள் உள்ளம் நன்கு சித்திரமாக்கப் பெற்று உலகுக்கு உலகியலை விளக்குகின்றது; ஆண் பெண் இயல்புகளின் அறிவும் அறியாமையும் அதிக விளக்கமாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன.

இக்கதையை ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகட்கு முன்னர் எம் அன்பர் T. N. சேஷாசல ஐயர் மொழி பெயர்க்கத் துணிந்து தமது கலாநிலயம்மூலம் ஒரு சிறு பகுதியை வெளியிட்டார். அவ்வப்போது அதனைப்படித்து அதன் நுட்பங்களில் இன்புற்ற யான் அதனை இலக்கியமாக்க அன்று எண்ணினேன்: அவ்வெண்ணம் இன்று நிறைவேறிற்று. இறைவன் திருவருள் இது.

கற்புக்கனல் மேலைக்கவிஞரின் வாக்குடன் எமது கைவரிசையும் நிறையப் பெற்றது. உத்தமனே பெயர்களும் உவமைகளும் தமிழ்உருப் பெற்றனவேயன்றி, ஏனைய உள்ளீடு முழுவதும் அங்குள்ளபடியே இங்கும் அமைக்கப் பெற்று நெறிவிலகாது செல்கிறது.

நால்வகைப் பாக்களுங்கொண்டு நாடககாப்பியமாக "உத்தமன்" விளங்கினும் அப்பாக்களை யாப்பியல் நெறியிற்கொண்டேனல்லேன். நாடக நெறியின் உரை நடையாகவே கருதிச் செய்யுட்கள் பலவும் யாக்கப் பெற்றுள்ளன. எதுகை, தளை, கட்டளை கருதி இடைச் சொற்களையும் அடைமொழிகளையும் பிணைத்துப் பொருளை மறைக்காமல் இன எதுகை, இயற்றமிழ் நடைகொண்டு உணர்ச்சியளவில் பாக்களுக்கு உருக்கொடுத்துள்ளேன். அக்காரணத்தால் அடுத்தடுத்துள்ள பாட்டுகளும் பல்வேறு அளவில் தோன்றலாயின. மூவடிகள், தனி அடிகள், உரைநடை, இசை முதலிய பலவும் விரவி நாடக மயமாய்ப் பாக்கள் அமைந்து நின்றலின் இவற்றை 'நாடகச் செய்யுள்' என்பதே சாலப்பொருத்தமாகும். நாடகத்தில் ஒரே நடை தொடர்ந்து கையாளமுடியாதன்றே! வீரம், எள்ளல், வியப்பு இத்தகைய சுவைகள் அடிக்கடி இடையிடையே விரவலின் அவற்றுக்கு ஏற்ற நடைகொள்வதே இயைபு ஆகும். அம்முறையில் பெரும்புலவரின் தலைசிறந்த நாடகத்தை அவரை அறியும் அறிவும் ஆற்றலும் மிகக் குறைந்த யான் அவர்தம் அருள்துணையை நம்பித் தொழுது துணிந்து எழுதி வெளியிட்டுள்ளேன். தமிழ் உலகம் இதனைத் தாங்கவேண்டுகின்றேன். நல்லேன்.

**கவிஞர் அ. கு. ஆதித்தர்**

# உத்தமன் கதை

சேரநாட்டின் தலைநகரம் வஞ்சிமாநகர். நாட்டின் ஆட்சிமன்றத்தில் **அம்பலவாணர்** என்பார் சிறப்புடைய ஒருவர். அவர் திருமகளின் பெயர் **திலகவதி**. அழகிலும் குணத்திலும் மிக்கவளாகத் திலகவதி திகழ்ந்தாள். அரண்மனைச் சேவகத்தில் படைத்தலைமை தாங்கிய **உத்தமன்** என்பான் மிலேச்சர் குடியைச் சேர்ந்தவன். ஆண்மை மிக்கவன், நெஞ்ச நேர்மையன். இவன் தனது வீரச் செயல்களை விளக்கும் சொல்வன்மையால் திலகவதியின் உள்ளத்தைக் கவர்ந்தான். வஞ்சிமா நகரில் ருத்திரகோட்டி என்னும் செல்வந்தன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன் திலகவதியாள் மீது மையல் கொண்டான். இவனது பித்துற்ற நிலையைக் கண்ட **ராகு** என்பான் அவளை இவனுடன் சேர்த்து வைப்பதாக நயம்படப் பேசிப் பொருள்பறித்து உண்டு வாழ்ந்தான்.

சேரநாட்டைச் சேர்ந்த பெருந் துறைமுகம் முசிறி. முசிறிப் பட்டினத்தின்மீது கடற்கொள்ளைக்காரர்கள் திரண்டு படைஎடுத்து வருவதாக மன்னன் அறிந்து இரவில் சபைகூட்டி ஆலோசனை செய்தான். ஆற்றல் மிக்க உத்தமனைப் படையுடன் ஆங்கு அனுப்புவதாகத் தீர்மானித்து ஏற்பாடுகள் ஆயின. இதனை உத்தமனுக்கு அறிவிக்கத் தூதர் சென்றனர்.

உத்தமன் அவ்விரவில் திலகவதியைக் கடத்திச் சென்று ஒரு தனித்த இடத்தில் திருமணம் நடத்திக்கொண்டான். வம்பு செய்வதே தனது பிறவிக் குணமாகக் கொண்ட வஞ்சக ராகு தன் சகாக்களுடன் நள்ளிரவில் அம்பலவாணரை எழுப்பி, திலகவதி கடந்ததைப்பற்றிச்சொல்ல, அவர் படுக்கையைவிட்டெழுந்து, தம் மகளைக் காணாது உள்ளம்பதைத்துச் சில அன்பர்களுடன் தேடப் புறப்பட்டார்.

## களம் 1. காட்சி 2.

தூதுவர் வந்து உத்தமனிடம் அரசாங்க நடப்புகளைக் கூறி அரண்மனைக்கு அழைத்து நிற்க, அதே சமயத்தில் அம்பலவாணரும் தமது சகாக்களுடன் ஆங்குற்றனர். பின்னர் இருதிறத்தாரும் தம் வழக்கினைப் பேச அரண்மனையை அடைந்தனர்.

## களம் 1. காட்சி 3.

கடற் கடம்பர் முசிறியைக் கொள்ளையடிக்கத் துணிந்ததைக் குறித்து அவையினர் கூடிப் பேசுகின்றனர். அச்சமயம் அம்பல

வாணர் ஆங்குற்று நடந்ததைக் கூறி, உத்தமன்மீது குற்றம் சாட்டினர். திலகவதி தன் விருப்பத்தால் அவனை மணந்ததாய்க் கூறவே, திருமணம் இன்னும் உறுதியானது. சபையினர் உத்தமனை உடனே முசிறிக்குச் செல்ல வேண்டினர். அவன் தன் மனைவி திலகவதியை ராகுவுடன் மறு கப்பலில் வர ஏற்பாடுகள் செய்து துணைப்பதியான கச்சிதனுடன் முசிறிக்குப் புறப்பட்டான். வஞ்சக ராகு ருத்திரகோட்டியின் பணத்தைப் பறிக்கத் தனக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்ததாக எண்ணி, அவனையும் பொய்த்தாடி, மீசைகளுடன் முசிறிக்கு வரும்படி தூண்டினன்.

## களம் 2. காட்சி 1.

கப்பல்கள் எல்லாம் முசிறியை அடைந்தன. கடலில் எழுந்த புயலால் பகைவரின் கலங்கள் உடைந்து சிதறிப் பாழாயின. உத்தமனும் திலகவதியும் முசிறி அரண்மனையிற் குடிபுகுந்தனர்.

வம்பனாகிய ராகு உத்தமன்மீது பொறாமை கொண்டான்; காரணம்-உத்தமன் அவனுக்கு அடுத்த துணைப்பதியாகத் தன்னைத் தெரிந்தெடுக்காமல் கச்சிதனைத் தெரிந்தெடுத்ததே. அஃதன்றித் தன் மனைவி விமலாவுக்கும் உத்தமனுக்கும் தொடர்பு இருக்குமோ என்றும் ஐயுற்றான். இயற்கையிலே பொல்லா உள்ளம்படைத்த ராகு கச்சிதனைத் துன்புறுத்தவும் எண்ணினன். கச்சிதன் திலகவதியிடம் காதல் கொண்டிருப்பதாக அறிவித்தால் ருத்திரகோட்டி கச்சிதன்மீது மூண்டெழுவான் என்று தீர்மானித்து; அவ்வாறே செய்தான். இரவு காவற்கூடத்தில் கச்சிதனைத் தாக்கும்படி ருத்திரகோட்டியிடம் வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். இம்மட்டோ! கச்சிதனுக்கும் திலகவதிக்கும் மெய்யுறவு உண்டென்று உத்தமனிடம் ஓதி நிற்கவும் உள்ளங் கொண்டான்.

## களம் 2. காட்சி 2.

கடற் பகைவரின் அழிவு, உத்தமனின் திருமணம் இவ்விரு காரணங்களுக்காகவும் ஒரு விருந்து நடத்த ஏற்பாடானது.

## களம் 2. காட்சி 3.

ராகு வஞ்சகமாகப் பேசிக் கச்சிதனை மதுபானத்தில் மூழ்க வைத்தான். காவற்கூடத்தில் வெறித்து நின்ற கச்சிதனுக்கும் ருத்திரனுக்கும் பெருங் கலகம் நடந்தது. இரவில் அமைதி கலையும்படி நடந்துகொண்ட குற்றத்திற்காகக் கச்சிதன் உத்தமனால் வேலையினின்றும் நீக்கப்பட்டான். ராகுவோ தான் மிக நல்லவன் போல் கச்சிதன் மன மிரங்கப் பேசி அவன் திலகவதியின் பரிவு கொண்டு உத்தமனிடம் இழந்த பதவியை மீண்டும் எய்தமுடியும் என்று கூறினன். திலகவதி கச்சிதனுக்குப் பரிவு காட்டுவதன்

மூலம், உத்தமனை அவள்மீது ஐயுறவுகொள்ள வைக்கலாம் என்பது அத்தீயவன் எண்ணம்.

## களம் 3. காட்சி 1.

ராகுவின் மனைவியான விமலா திலகவதியின் பாங்கியாவாள். கச்சிதன் அடுத்தநாள் காலையில் அரண்மனையை அடைந்து விமலாவிடம் தான் திலகவதியுடன் சிறிது நேரம் பேச ஏற்பாடு செய்து தரும்படி வேண்டினன். ராகுவும் தன் எண்ணம் ஈடேற இதுவழியாகும் எனக் கருதி, விமலா அது செய்யத் தானும் வேண்டிக் கொண்டான்.

## களம் 3. காட்சி 2.

காவல் காரியமாக உத்தமன் வெளிச் சென்றிருந்ததால் கச்சிதன் திலகவதியுடன் தெளிவாகப் பேச அன்று நல்ல வசதியாயிற்று.

## களம் 3. காட்சி 3.

திலகவதியும் கச்சிதனும் அரண்மனைப் பூங்காவில் பேசிக் கொண்டிருக்கும் சமயம் வஞ்சக ராகு உத்தமனை அழைத்து வந்தான். உத்தமனைக் காண அஞ்சியும், வெட்கியும் கச்சிதன் உடனே அவ்விடம் விட்டகன்ருன். இதுவே தக்க சமயம் எனக் கொண்டு, பாவி ராகு சில குறிப்புமொழிகளால் உத்தமன் மனத்தில் களங்கம் ஏற்படச் செய்தான்.

கானவன், களங்கமற்றவன். ஆனல் களங்கம் ஏற்பட்டாலோ இரண்டில் ஒன்றுதான்! ஆங்காங்கு ராகு பேசிய வஞ்சமொழிகளால் உத்தமன் ஐயுறவு வளர்ந்து உள்ளம் கொதித்தது.

தனது களவியற் காதலில் உத்தமன் திலகவதிக்கு ஒரு கைக்குட்டை நல்கியிருந்தான். ஒருநாள் திலகவதி தன் கணவனுடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அது கைநழுவிக் கீழே விழுந்தது. இதனைக்கண்ட விமலா அதைத் தன்கையில் எடுத்துக்கொண்டாள். எடுத்தது மட்டுமன்று; தன் கணவன் ராகு பன்னளாக அக்குட்டை வேண்டுமென்று மன்ருடியதால், அவன் கைச் சேர்த்தாள். ராகு அது கச்சிதன் கையில் ஏறும்வண்ணம் அவன் மனையிற்கொண்டு போட்டான்.

உத்தமன் பித்துற்றவனுய் ராகுவிடம் "திலகவதி கச்சிதன் உறவை நீ மெய்ப்பிக்க முடியுமா?" என்று கேட்க; அதற்குப் பதிலாக ராகு "கச்சிதன் திலகவதியின் கைக்குட்டையை வைத்துப் போற்றுகிருன்; மேலும் உறக்கத்தில் அவளைப்பற்றியே பிதற்றுகி

றான்'' என்றான். உத்தமன் வெறிகொண்டான்; ராகு தூபம் போட்டான்; பின்னர் இருவருமாக அவளைக் கொன்று பழி தீர்ப்பதாக முடிவு கட்டினார்கள்.

## களம் 3. காட்சி 4.

வஞ்சம் அறியாத் திலகவதி கச்சிதனுக்காகக் கணவனிடம் மன்றாடினாள்; கணவனின் உள்ளம் கனன்று எரிந்தது: நான் தந்த கைக்குட்டையை எங்கே?' என்றான் உத்தமன். அதனைப்பற்றி யாதும் அறியா அவள் விழித்தாள்; அவன் கொதித்தான்.

தன் நாயகனின் கடுஞ்சினத்தைக் கண்ட மங்கை அஞ்சி ராகுவிடம் அதன் காரணம் அறிய அவாவினாள்; கச்சிதனைச் சிலநாள் பொறுக்கும்படி தேறுதல் கூறி அனுப்பினாள். கச்சிதன் தன்மனைச் சென்றதும் ஆங்குக் கிடந்த கைக்குட்டையை எடுத்தான். அது மிக்க வேலைப்பாடு கொண்டாதாயிருந்தது. அதனைத் தனது நட்புக்குரிய ரம்பை என்பாளிடம் கொடுத்து, அதுபோல் பூ வேலையுடைய குட்டை ஒன்று செய்யும்படி கச்சிதன் வேண்டினான்.

## களம் 4. காட்சி 1.

வம்பன் ராகு ஆங்காங்கு தீங்கான மொழிகளை உத்தமன் காதில் ஓதினான். கச்சிதன் ரம்பையைப்பற்றி அவள் பொது மகள், நடை கெட்டவள்' என்று பேசவைத்து, அதனை உத்தமன் திலகவதியைப் பற்றிப் பேசுவதாகப் பிறழஉணர வைத்தான். அதேசமயத்தில் ரம்பை முந்திய கைத்துணியைக் கச்சிதனிடம் கொண்டு சேர்க்க, அதனைக் கண்டனன் உத்தமன். ஐயுறவெல்லாம் நன்கு உறுதியாகவே, அவன் தன்மனையாளை அன்றே கொன்றுவிடுவதென முடிவு கட்டினான். அத்தருணத்தில் வஞ்சி அரசரிடமுமிருந்து உத்தமன் உடனே திரும்பவேண்டுமென்றும், கச்சிதனே முசிறியைக் காவல் செய்யவேண்டுமென்றும் அரச திருமுகம் வந்தது; அதனால் யாவற்றையும் உடனடியாக முடிக்கத் துணிந்தான் உத்தமன்.

## களம் 4. காட்சி 2.

உத்தமன் திலகவதியுடன் பேசி, அவள் கற்பைப்பற்றித்தான் ஐயுறுவதாக வெளியிட்டான். இதனை அறிந்த திலகவதி நெஞ்சங் கலங்கினாள்: தன்னைத் தாங்க ஆற்றாதவளானாள். தனக்கும் தன் நாயகருக்கும் நல்லுறவு ஏற்படுத்த வஞ்சக ராகுவை வேண்டினாள்.

ருத்திரகோட்டி தன்பணத்தை எல்லாம் இழந்தும் காதலில் வெற்றிபெறாமையால் பொறுமையை இழந்தான்; ராகுவைப் பழித்தான். ராகு இடங்கண்டவன்! அன்று இரவு கச்சிதனைக்

கொன்று, பின் காரியசித்தி பெறலாம் என நயம்படப் பேசி, ருத்திரனையே கச்சிதனைக் கொல்ல நியமித்தான்.

திலகவதி தன் கணவன் கட்டளைப்படி படுக்கையிலிருந்தாள். உத்தமன் விருந்தினரை வழியனுப்ப வெளிச்சென்று திரும்பி வந்தான்.

## களம் 5 காட்சி 1

ராகுவும் ருத்திரனும் பதுங்கியிருந்த வழியில் இரவில் கச்சிதன் வந்து கொண்டிருந்தான். ருத்திரன் கச்சிதனைத் தாக்கினான்: கச்சிதன் எதிர் தாக்கினன் ருத்திரன் வீழ்ச்சியுற்றான்; மெய்ம்மறந்தான். அச்சமயம் ராகு கச்சிதனைக் குதிங்காலில் வெட்டி மறைந்தான். அவ்வழியே வந்த பிரபுக்களாலும், வெளிச்சென்று வந்தவன்போல் நடித்துக் கொண்ட ராகுவாலும் அவர்கள் அவ்விடத்தைவிட்டு அகற்றப்பட்டனர்.

இவ்வாரவாரத்தைக்கேட்டு அங்கு ரம்பை வந்தாள். ராகு அவளே இத்தீமைகட்குக் காரணம் என்று பழியை அவள்மேல் சுமத்தி அச்சுறுத்தினன். உடனே தன் மனைவி விமலாவை அரண்மனைக்கனுப்பி உத்தமனிடம் நடப்பை எல்லாம் அறிவிக்கச்சொன்னன். இச்சமயத்தில் அவ்வழியாக வந்துகொண்டிருந்த உத்தமன் கச்சிதன் புலம்பல் கேட்டு "நமது தீர்மானப்படி ராகு அவனைத் தொலைத்துவிட்டான்; இனி யான்சென்று அவளைத் தொலைப்பேன்" என்று உள்ளம் பொங்கியவனாய் அரண்மனை நோக்கிச் சென்றான்.

## களம் 5 காட்சி 2

உத்தமன் தன் மனைக்குவந்து உறக்கத்திலிருந்த அவளை விழிப்படையச் செய்தான்: இருவருக்குள்ளும் வார்த்தைகள் பரிமாறப்பட்டன. பின் அவன் அவள் கழுத்தை இறுக்கிக் கொன்றான். குற்றுயிராக இருக்கும் சமயத்தில் ராகுவால் அனுப்பப்பட்ட விமலா அரண்மனையை அடைந்தாள். ருத்திரன், கச்சன் இருவரின் வதைபற்றி அறிவித்தாள்; ஆங்கே திலகவதி குற்றுயிராகக் கிடப்பதைக் கண்டாள். திலகவதியோ தன்னை வேறு யாரும் கொல்லவில்லை என்றும், தான் அநியாயமாகச் சாகிறதாகவும் கூறி உயிர்நீத்தாள். அச்சமயம் உண்மை வீரனாக உத்தமன் தானே அவளைக் கொன்றதாக அறிவித்தான். இதனைக்கேட்ட விமலா கூக்குரலிட, யாவரும் வந்து கூடினார்கள்.

ருத்திரன் சட்டைப்பையில் இருந்த கடிதங்களாலும், கைக்குட்டை பற்றி விமலா அறிவித்த வரலாற்றாலும் கைதவ ராகு

செய்த சூழ்ச்சியே இத்தனையும்என வெளியானது. சினத்தீ பொங்கிய உத்தமன் இராகுவைக் குத்தி வீழ்த்தினன்; தன் வஞ்சத்தை வெளிப்படுத்திய விமலாவை ராகு குத்திக் கொன்றான். கூடியுள்ள பெரியோர் கானவனை உத்தமனைப்பற்றி வஞ்சிமாநகர் கொண்டுசெல்லத் துணிந்தனர். அவன் தனது வரலாற்றை அவர்கட்கு அறிவிப்பதாகக் கதையை நெடுகக் கூறி வருகையில், உரைநடுவே நெடுங்கத்தியால் தன்னைக்குத்தி மாய்த்துத் திலகவதிமேல் சாய்ந்தான்

## கதை உறுப்பினர்

| | |
|---|---|
| Duke | சேரமன்னர் |
| Othello | உத்தமன் |
| Cassio | கச்சிதன் |
| Iago | ராகு |
| Brabantio | அம்பலவாணர் |
| Gratiano | கருணைகரர் |
| Roderigo | ருத்திரகோட்டி |
| Montano | மாதேவன் |
| Desdemona | திலகவதி |
| Emilia | விமலா |
| Bianca | ரம்பை |
| Venice | வஞ்சி |
| Cyprus | முசிறி |

# உத்தமன்

## கடவுள் வணக்கம்

ஞான நாயகன் ஞால நாயகன்
மோன நாயகன் முக்தி நாயகன்
கான நாயகன் கல்வி நாயகன்
மான நாயகன் மனநற் கோயிலான்

பலபல இடத்தில் மக்கள் பலபல விதமாய்க் காணப்
பலபல ஆற்றி; முற்றும் யாரும்பார்த் தறியாவண்ணம்
பலமுடன் மெலிவு யாக்கைக் தழிவுநல் லாக்கம் நல்கி
உலகெலாம் உணா நிற்கும் ஒன்றினைக் கருத்தில் வைப்பாம்

## வழிபடு கடவுள்

சீர்தனை ஓதிநற் சிறப்புத் தந்தவன்
நீர் இறங் கேல்எனத் தடுத்து நின்றவன்
நேர்வன கனவில் காட்டும் நீர்மையன்
வாரண முகன்என் வாழ்வுத்துணையே

ஆனை முகத்துப் பெருமான் அடியேற்குத்
தானே துணைபுரி வான்.

## காந்தி அடிகள்

சாந்த மேஉரு வாகத்தாம் கொண்டவர்
நாந்த ழைக்கச்சு தந்தரம் கண்டவர்

காந்தி மாம காத்துமா தெய்வமாய்
மாந்த ரானவர் மனத்தில் நிலைப்பரே

## வழிதரு பெரியோர்

பெற்ற மேலோர்; பெருநெறி காட்டிய
முத்து ஞானியர்: முத்தமிழ்க் குழைத்த
உத்தம தான புரத்தையர்; மேலே
வைத்திய சாமர்வெல் வாழ்வுக் கிலக்கே.

## திரு. வி. க.

எழுத்து சொல் உழைப்பால் இயக்கம் பலவால்
விழுப்பமார் நெறியால் வியன்பே ரறிவால்
செழுந்தமிழ் நாட்டுத் தனிப்பெருந் தலைவர்
தொழுதகை திரு. வி. க, எனும் தூயர்

## குரு வணக்கம்

கம்மாழ் வார்வழிப்
பெம்மான், மாணவர்
'நம்ஜ யா' எனும்
நன்மாண் புடையார்

மற்புய மரபார்
சொற்றவ ருதார்
சற்குணச் சான்றூர்
எற்பெருங் குருவே

எண்ணநல் லெழுச்சி
கண்ணுறிற் களிப்பு
சொன்முறை அறிவு
அன்னவர் கொடையே

## ஊக்கினேர்.

சோம சுந்தர பாரதி யார்,சொல்லின் செல்வர்
நாம சேதுப்பிள் ளை,கலை நலம்பல மிளிரும்
மீன அட்சிசுந் தரரும்,கோ தண்டபா ணியரும்
யான ருங்கவி புனைவதா யூக்கினர் வாழ்வார்

ஊக்கி நின்றவர்க் கொருபெரு நன்றியான் கூறி,
தாக்கு வாருள ராயினும் அவரையும் தாங்கி;
வாக்கி னலவர் வீழ்வினுக் கிரங்குவன் மற்று
ஆக்க வேலையா யாற்றுவென் கவிபுனை பணியே.

## அவை யடக்கம்

இமய மால்வரை சேர்வுறு கங்கையை நீளக்
குமரித் தண்டுறை பாய்வுறக் கால்எடுத் தென்ன
இமிழு மேல்கடல் ஆங்கில நாட்டுமா புலவன்
அமுத வாக்கினைத் தமிழ்மொழி ஆக்கும்என் ஆர்வம்

மண்ணில் வாழுநர் மதிவளர் ஞானவன் மையினால்
விண்ணுலாந் திங்கள் உலகினைச் சேர்வுற விழைவார்
அன்ன ஓர்முறை ஆங்கில மாகவி நலனைப்
பன்னு தீந்தமிழ் மொழியுறப் பாவகை புனைவேன்.

கான முயலை எய்து ;குறி
தப்பா துற்றுக் களிப்பதினும்
யானைஎய்த வேல்ஏந்தல்
இனிதே என்றார் வள்ளுவனார்
மேனாட் டுற்ற மாகவிஞன்
மொழிந்த கதையில் பெரிதொன்றைத்
தேனார் தமிழில் உரைக்கின்றேன்
தெரிந்தோர் குற்றம் பொறுப்பாரே.
உள்ளுவ தெல்லாம் உயர்வுள்க,
அதுதான் வெற்றி தாராதே
தள்ளினும் தள்ளா நீர்மைத்தே
என்றார் தேவர் அம்முறையே
தெள்ளுதீந் தமிழில் ஷேக்ஸ்பியரின்
கவிதைத் திறனைத் தருகின்றேன்
கொள்ளுவீர் ஆங்காங் குறைகின்ற
குற்றம் பொறுப்பீர் குணம் விரிப்பீர்

## ஆசிரியர் வரலாறு

கற்புக் கனலில்என் கதையைக் காட்டினேன்
சொற்றி லாதன இங்குயான் கூறுவேன்
மொத்தம் யாங்கள்ஓர் ஐவர்,அவர்தம்முள்
மற்பு யத்தவர் மூவர்,பெண் இருவர்.

உற்ற மக்கள் எனக்கொரு மூவரே
நற்பெயர் அவ்வை, கோதை,புனிதையே,

பெற்றெடுத்தார்பேர் பாபுசுந் தரம்மே,
கற்றுள் ளார் B. A.; L. T. நற் கலையே.

கற்பியல் சொல்லும் கடுநெறி எல்லாம்
தப்பி லாதவர் தாங்கிநிற் பாரே.
எட்டு நல்லாண்டு இல்லறம் ஓம்பிப்
பிற்பட்டு வானப் பிரஸ்தநி லையே.

ஆறு. ஏழு,நாற் பத்தாறும் நாளிலே
தாரத் தைஅடி யோடுதாய் ஆக்கினேன்.
பாரத் தைஅவர் தம்தலை தாங்கவே
யாருங் கண்டிலா வீடுபெற் றுய்கிறேன்.

## இயற்றிய நூல்கள்

கற்புக் கனல்நற் பெயராலே காவியம் ஒன்று
நாட்டியுள்ளேன்
கற்றூர் கல்லா தார்உணரக் காந்தியம் மாலை
பாடியுள்ளேன்
நற்றமிழ் வளர நாடகமாய்ச் சகுந்தலா, திருவள்
ளுவர் என்றே
சொற்றேன் ஒழுக ஓரிரண்டு யாத்தேன், படித்துச்
சுவைதெரிவீர்.

ஒன்பதாம் மாதம், நாற்பத்
தொன்பதாம் ஆண்டில் யாப்புச்
செந்தமிழ் உத்த மன்அச்
சங்குரார்ப் பணமே யாகும்.

# உத்தமன்

## களம் 1. காட்சி 1.

1

ருத்திர கோட்டி : பொருளெல்லாம் உந்தன்
பொறுப்பினில் வைப்பேன் :
உறவை மறந்தாய்
களவு புரிந்தாய்.*

2

ராகு "களவுயான் புரிந்தேன் !"
இறைவர்தம் செயலே !
உரைப்பதைக் கேள். பின்
முறைப்படி ஒறுத்தி.

3

எள்ளத் தனை அதை
உள்ளம் அறியினும்
'கள்ளன் இவன்' எனத்
தள்ளுக புறமே !

4

ருத் சரி, சரி அவரைத்
தெரிவதாய் ; மேலும்
வெறுப்பதாய், முன்னர்
உரைத்தனை யன்றோ

5

ரா உரைத்தனென் ; இன்றும்
உரைக்கிறேன் : உண்மை.
இருப்பதைச் சொல்வேன்
மறைப்பிதில் இல்லை—

---

* அவன் அவளைக் கடத்தியதை நீ மறைத்தாய்.

6

நகர் உறை பெரியோர் மூவர் தளபதி தன்னை நண்ணி
மிகமிகப் பணிந்தே எற்கா வேண்டினர்: மேலும் கேள்நீ
சகத்துறு உயிர்கள் தம்மைப் பேணியே வாழும். யானும்
தகுதியு முடையேன், கொள்ளும் துணைப்பதி தொழிலை ஆற்ற

7

பெருமையும் பொறுப்புந் தந்த பிணிப்பினுள் நின்றான் போல—
பொருதொழில் ஆண்மை ஆற்றல் முறைசில புனைந்து ரைத்து,
அருகதை இன்மை கூறி, அவர்தம்மை அனுப்புங்காலை
ஒருவரைத் தேர்ந்து கொண்டதாகவும் உரைத்து நின்றான்.

8

மற்றவன் யாவன் சொல்வேன். மாபெருங் கணிதம் வல்லான்
பொற்புறு மனைவி யேவல் போற்றியே பணிந்து நிற்பான்
நற்பெருங் கன்னி வாழ்க்கை நடைமுறை எனலாம். நன்கு
கற்றதே அன்றி என்றும் போர்க்களம் கண்டானல்லன்.

9

படிப்பினைத் தவிர யாதும் பழக்கத்தில் இல்லா னுக்குக்
கொடுப்பின், நம் ஆட்சி மன்றுள் குழுமிய நாவல் லோர்கள்
அடித்துரைத் ததிகம் பேச ஆற்றலும் உடையர் அன்றோ?
எடுத்துரைப் பதுவே அன்றி இயற்றலும் இவன்பா லுண்டோ?

10

நாட்டினில் வெளியில் என்றன் போர்த்திறல் நேரில் கண்டும்
கூட்டலும் கழித்த லும்தேர் கச்சனைத் தெரிந்து, என்னைப்
பாட்டணி சுருதிக் காரர் பான்மையில் வைத்தான். ஐயா,
வாட்படை யறியிலா நன்றே துணைப்பதி யாக வாழ்க.

11

அந்நிய நாட்டான் கச்சன் அருகதை ஆனான்! வீரன்!
என்றும்நேர் கட்டியஞ் சொல் பதவியோ எனது வாழ்வு!
தன்பெருந் துணையாக் கொள்வான் என்றுயான் தலைவ ணங்கி
நின்றதை நினைந்தா னில்லை! இறைவனே கேட்க நீதி!!

12

ருத் “குறுநிலக் கானவன்
சிரத்தையான் கொய்யவோ?”

ரா ஒருபழி அன்றி நேர்
வருபயன் உள்ளதோ !

13

முறைதவ றாமல் மேற்செல் கடிகையின் முள்ளைப்போல,
அரசியல் பதவி ஏற்றம் நியதியுள் அமைந்த தன்று.
பரவிமேல் விருப்பு, மற்றைப் பெரியவர் பரிவுபெற்றோர்
விரைவினில் உயர்வார் மற்றோர் விழலுக்கே இறைத்தோர் ஆவர்.

14

ருத் ருத்தி ரன்இது
பெற்ற னன் எனின்
அத்தி னத்திலே
விட்டொழிப் பான்காண் !

15

ரா

புவிவயின் பொறுமை மிக்க பெரியதாய்ப் புகன்றோர் மேலோர் ;
அரியஓர் வாய்ப்பு காண அவனடி உழைத்து நிற்பேன்.
உயிரினத் தலைவ ராக யாவரும் உறுதற் குண்டோ !
பெரியவர் ரானோர் எல்லாம் பெரியவர் ஆவார் கொல்லோ

16

தொண்டுசெய் கின்ற பல்லோர் தூநெறி கருதார் : நெஞ்சில்
நன்றுதீ தெண்ணார், என்றும் நமக்கிது கடமை என்பார்
தந்துணைக் காங்கு விப்பார் தாழ்ந்தடி பணிந்து வாழ்ந்து
உண்டியால் மானங்குன்றி வாழ்வினை ஒறுத்தே நிற்பார்

17

உரம்பெறு கால மெல்லாம் உழைப்பர் : பின் முதுமை தோன்ற
புறந்தள்ளப் படுவார் இன்னார் பூமியில் வாழ்வ தேனோ ?
கறவையின் கதியே கண்டார் கருத்திலார் என்ப தன்றி
அறநெறி நின்ற தொண்டர் அடைந்த நற் பயனும் யாதோ

18

உழைத்துழைத் துயிரைத் தேய்க்கும்உணர் விலாப் பேதையாரைக்
களைப் பிரம்பதனால் வல்ல கசையடி கொடுக்க வேண்டும்.
தலைவர் முன் உற்ற போது தாம்மிக உழைத்துக் காட்டி,
விலகியே அன்னார் செல்லத் தாங்களும் வறிதே நின்றே—

19

யாவும் யாம் கண்டோம் என்றும், இதற்குமேல் இல்லை என்றும்
பாவனை காட்டிப் பேசித் தாம்பெறு பயனை எண்ணி
ஆவனசெய்து, தேடி ; அதிபொருள் சேர்ந்த காலம்
'யாவரின் தயவும் வேண்டாம்' எனப் பிரிந்தெதிர்த்து வாழ்க

20

ஊடுறு செங்கல்தன்னை உருவித்தன் வாழ்வைப் பேணும்
ஆடவர்தாமே என்றும் ஆற்றலில் மிக்கோர் என்பேன்
கேடுறு வகையில் தம்மைக் காத்தலே கடமை யாக
நாடுநர் கூட்டத் தாருள் யானுமே ஒருவன் காண்டி.

21

சத்திய மாகச் சொல்வேன் தளபதி பதவி இங்கு
ஒட்டிய தாயின் ராகு ராகுவாய் உலாவு வானோ?
விட்டகலாது பற்றி வாழ்தலும், வாய்ப்பு நேரப்
பெற்றதைச் சுருட்டி ஓடிப் பெரியதோர் வாழ்வு காண!

22

சிரம் ஒரு பாரம் என்று கொய்ததைக் கரத்தில் ஏந்தி
முறைசெயும் காலம் ஒன்று உண்டெனில், எனது வாழ்வில்
அறம் அன்பு அமைதிகூறி அந்நெறி நிற்பதுண்டாம்.
திறம் இது எனவே கொள்வேன் தெய்வமே சான்றாய்ச்
சொன்னேன்.

23

யானிந்த ராகு, தோற்றத் திராகு என் றெண்ணேல் ஐய,
கானவன் நினைத்தவாறே காரியம் முடித்தே, இன்று
மாணுற நின்றான் என்றால், மற்று நாம் வாழ்ந்து என்னே
(ரா)ஏனிந்தக் கவலை ஐயா, ஏற்றநல் லுபாயஞ் சொல்வேன்

24

ரா நம்பெரு நங்கையை
இம்பர்அ ளித்தநல்
அம்பல வாணர்
உம்பர் உறங்குவர்

25

சத்தமிட் டவரை எழுப்புவாய்
உத்தமன் செய்த தோதுவாய்

பற்றியே தொடரப் பண்ணுவாய்
கத்தியே ஊர் அலர் ஆக்குவாய்.

26

இனத்தின ருக்கிதை இயம்புவோம்,
மனத்தினில் கொதிப்பெழ மூட்டுவோம்.
கனதனப் பெருமிதக் கானவன்
சினமுறச் சிறுவினை ஆற்றுவோம்

27

காவினுள் விரிந்த
பூவெடுப் பவன்முன்
நீவுதற் கானமுள்
ஆகுவம் யாமே!

28

களிக்கும் அவன் மனம்
புளிக்கு மாறுநாம்
இழைக்கு வம்வினை
சலிப்பு றுமலே.

29

ருத் கண்முன் உள இது
கன்னியின் மனையாம்
உன்னியான் கூவுவன்.
ரா நன்று, நன் றதுபுரி.

30

இரவில் நகர்ப்பெரு மக்கள்
உறக்கப் பொழுதினில் மிக்க
நெருப்புக் கண்டவன் போல
உரக்கக் கூவுக நீயே.

31

ருத் ஐயா அம்பல வானர்!
ஐயா அம்பல வானர்!
ஐயா (ரா) ஐயா திருடன்
ஐயா திருடன்! எழுங்கள்

32

ஐயா மனையை, மகளை,
அரிய பொருளைப் பாரும்!
ஐயா திருடர், திருடர்,
அசதி இன்னும் ஏனோ?

(அம்பலவாணர் மேன்மாடிச் சன்னல் வழியாக நோக்குகிறார்)

33

அம்: ஏனோ இந்தக் கூச்சல்?
யாது நடந்தது ஈண்டு!
ருத் ஆமாம் யாவரும் உளரோ?
அடைபட் டுளவோ கதவம்?

34

அம்: இவ்வா றுசாவல் ஏனோ?
ரா: எல்லாம் இழந்தீர் ஐயா
செம்மை யாய்மே லாடை
தரித்தே கீழே வாரும்.

35

உரிமைப் பொருளை இழந்தீர்,
உயிரை இழந்தீர் ஐயா
விரைவா யெழுவீர் வருவீர்
வேண்டா இனித்தா மதமே.

36

சோரம் தருபழிப் பேர்தாம்
சேரா திருக்க, உடன்நீர்
நேரே மணியை ஒலித்தே
நகரின் மக்களை எழுப்பும்!

37

அம்: நீவிர் யாவரும் பித்துற் றீரோ?
ருத் கூவும் என்குரல் இனம்அறி யீரோ!

38

அம்: அறியேன், அறியேன் யாவ னோநீ—
ருத் அறிவிப் பேன்யான்: ருத்திர கோட்டி.

39

அம் :
எத்தனை முறையோ உன்னை என்மனை வாயி லுற்ற
திக்கையும் நோக்க வேண்டா என்றுயான் தெரிவித்துள்ளேன்
புத்திரி உனக்கு அல்லள் என்று யான் புகன்ற பின்னும்
நித்திரை கெடநீ இந்த நள்ளிரா வந்த தேனே.

40

பேருண வுண்டு மிக்க பெருங்குடி மாந்தி மக்கட்
சீர்முறை மறந்து புன்மைச் செருக்கினுல் சிந்தை கெட்டு
யார்ஒரு வரும்விழிப்புக் கொள்கிலா இரவுச் சாமம்
மாறுறு நெறியில் நில்லேல் ; மற்று நீ செல்தி ஒல்லை.

41

ருத் : ஐயா ஐயா அம்பல வாணரே,
அம் 'ஐயா அம்பல வாணரே' என்பாய் :
மெய்வலி யுறஉனை நையப் புடைத்தலே
செய்யத் தக்கதாம் ; தகுதி உணர்கிலை

42

ருத் : சற்றே என்சொல் செவியில் சார்த்தி.
அம் குற்றக் களவு கூறவோ ? இஃது
கொற்றவர் வாழும் வஞ்சிமா நகராம்!
கட்டிலாக் காட்டு மடம்என எண்ணேல்

43

ருத் : பெருந்தகை, பெரியீர், பிழைபா டில்லேன்.
நெருங்கிய உறவு நேயமே இங்கு
வரும்படி செய்தது வேறொன் றில்லை
ரா : அருங்குண வானே அறிவீர் ஒன்று.

44

தீயர்தாம் சொன்னர் என்று தூயதைத் தள்ள லாமோ ?
ஆய நம் பெருமை காக்க எண்ணியே அருகு போந்தோம்
காய்ந்தெரி சினத்தால் எம்மைக் கடிகின்றீர் கருமம் காணீர்
சேயிழை திலகத் தைநீர் சிற்றினப் படுத்து வீர்போன்ம்!

45

அம். வாய் திமிறிப் பேசுகின்றாய் வம்பனடா நீ
ரா. நேய மகள் கானவனோ டன்பு கொண்டாள் கேள்.

46

அம். பெருஞ் சும்பன்! பூரியன்!

ரா. ஊர் அம்பலச் சிரியர்!!

47

அம். ருத்திர நீயே எனது
ஒறுத்தலுக் குரியன் ஆவாய்.

ருத். ஒறுத்தலுக் குரியன் ஆவேன்
உற்றிலா ஒன்று சொன்னால்.

48

நள்ளிராப் பொழுது காவல் மக்கள்கண் ணயரும் காலம்
தெள்ள முதாகும் தங்கள் திலகம் நெஞ் சரண் அழித்து
வெள்ளப் புன் படகு ஒட்டும் விடலையே துணையாய்க் கொண்டு
கள்ளத்தால் சேர்க்கை இன்பம் கானவ னோடு கண்டாள்

49

தாமிது அறிவீரேனும், தக்கதென் றியைவீரேனும்
யாம் பெருந் தீங்கால் நும்மை இடர்புரிந் தவரே ஆவோம்
ஆம்; சிறி தறிவீர் இஃதை என்பதெம் கருத்து மாகும்!
ஏன்? இதை அறியீராயின் சினந்ததும் இழுக்கே என்பேம்

50

பெருமித மறிவேன்; நும்பால் பலபலபேசி மானச்
சிறுமைகள் காட்டி நிற்பேன் என்றுநீர் சிந்தை கொள்ளீர்
அறிகிலீர் நீவிர் என்னின், நும்மகள் அறம் அடக்கம்
நிறைகுணம் குடிப்பிறப்பு நீத்தவ ளானாள் என்பேன்.

51

இன்றொரு இடத்தில், நாளை மற்றொரு இடமாய்ச் சுற்றும்
புன்றொழிற் புலையன் சேர்க்கை பொருந்துமோ குலத்துள் [ளோர்க்கு
நன்றெனச் சொன்னேன் நீவிர் நாடியே உண்மை காண்பீர்.
கன்னியின் அறையை நோக்கும் கடிமனை யாண்டும் நோக்கும்.

52

இல்லாத சொன்னேன் என்னின் யான்இன்று புரிந்து நின்ற
பொல்லாப்புக் காக என்னை ஒறுத்தலும் பொருத்தமாகும்.

எல்லாருங் காணு முன்னர் பழியினை மூடி வீழ்த்தி
நல்லார்போல் நிற்பார் என்றும் நாகரி கத்தார் என்போர்.

53

அம் ஏ, யார் அங்கே ஏற்றுக விளக்கு
இங்கே ஒன்று கொண்டுவா எனக்கு
ஏ ஏ எல்லார் தலையும் எழுப்பு
இதுதான் என்னவோ ? பெரிய சுழக்கு

54

கனவில்லை, இது ஏதோ நடப்பு,
கவலை: கவலைஇக் காரிய நினைப்பு.
என ? என ? எங்கே, எங்கே விளக்கு ?
ஏ ஏ விளக்கை ஏற்றுக சுருக்கு (அகல்கிறார்)

55

வெண்பா

ராகு: சென்று வருவேன்யான் செல்லாதே இங்கருப்பின்
என்றன் பதவிக் கிடையூறும். இன்னுங் கேள்
இப்ருபின்யான் காடற் கெதிர்பகரச் சான்றாய்
நிறுத்தப் படுவனன் றோ !

56

இங்நிலை என்னிலைக் கின்னல் மிகஅளிக்கும்
என்ன முறையிலென்றோ கேள்—

57

கானவனை ஒத்த கடுவீரர் ஆண்டில்லை
சேனை நடத்துஞ் சிறப்புடையோன்—ஆனை
முசிறித் துறைப்போரில் மூள்மல்லர் தம்மை
விசிறி அடிக்குமவன் வீறு

58

இக்கா ரணத்தால் இவனைத் தளபதியாய்
மிக்கார் தெரிந்தெடுத்தார்: மேலவனே ; தக்கோனே ;
எக்கா ரணத்தும் இனிமேல் விலக்கார்.யான்
சிக்கா திருப்பதே சீர்.

## 59

வேப்பங்கா யாக விருந்தும், வெளிமயக்காய்
ஆர்ப்பேன் இருது, அடிபணிவேன். பார்ப்பின்
பொருளில் புலவன் பொருளீந்தார் மேற்சொல்
பொருளிலாப் புன்கூற்று போன்ம்.

## 60

காலத்தைத் தள்ள ; கடிந்தும் கட்டியஞ் சொல்
கோலத்தைப் பூண்டேன். கொடுவினையே, மேலவரே,
எல்லா ருடனும் விரைந்து வழி நடந்து
"வில்வீரன் இல்லம்"சேர் வீர்.

## 61

வந்தால் அவற் காண்பீர் ; யானு முடனிருப்பேன் :
சென்று வருகின்றேன் யான்.

## 62

அம் : உற்றது தீங்கு! உண்மை! உண்மை!
கடந்தனள் என்மகள், திலகம் கடந்தனள்
எஞ்சிய நாளெலாம் இன்னலின் நாளே.
ருத்திரா' அவளை யாண்டுகண் டனை, நீ?
பேதாய், பெண்ணே, யாதும் அறியாக்
கானவ னுடனே காதல்!! ஐயோ!
பெண்மக வுற,இனி எண்ணுவார் யாவர்?
மங்கையர் தந்தையர் மங்காக் கவலையர்!
ஐய,

அவளை நன்கினம் அறிந்தனை கொல்லோ?
ஒன்று நினைக்க மற்றொன் றாகி
எண்ணம் எல்லாம் மண்ணா யிற்றே!
ஐய,

ஏதும் நின்னிடம் ஓதிய துண்டோ?
இன்னும் சிலவிளக் கேற்றி வாருங்கள்
உறவினர் உற்றார் பலரையும் எழுப்பு.
மற்றவர் இருவரும் மணம்புரிந் துளரோ?

ருத் : புரிந்துளார் என்றே அறிகின் றேன்யான்

அம் : தெய்வமே, அவள்தான் சென்றதெவ் வாறு
ஆ!-குலநலங் கெடுத்த கொடியள்! தந்தையீர்
பெண்ணின் நடப்பால் பேதை |இவள் என

ஏமாந் திடாதீர்! ஏமாந் திடாதீர்!
மங்கையர் இளமை எழில்நலம் இவற்றைத்
தம்கரப் படுத்தும் வசியமை மந்திரம்
உளவோ? இத்துறை உணர்வாய் சொல்லோ?

ருத்: ஆமாம். ஒருசிறி துணர்வேன் அத்துறை.

அம்: கருணா கரன்என் தம்பியைக் கூப்பிடு.
நின்னையே னும்அவள் நேரலா காதோ?
இவ்வழி—செல்வீர் சில்லோர்
அவ்வழி—செல்வீர் சில்லோர்
கானவ னும்அக் கன்னியும் இருக்கும்
தானம் நீயும் அறிவாய் கொல்லோ?

63

ருத்

தக்கமெய்க் காவல்கொண்டு தாங்கள்என் னுடனே வந்தால்
புக்கிலம் காணலாகும் (அம்) புண்ணியம் நின்னைச் சேர்க:
மிக்கது சொன்னாய் யானே மனைதோறும் விளித்து நிற்பேன்
இக்கடி நகர்க்கா வலருள் சிலரையும் எழுப்பிக் கொள்வோம்.

உழைப்பவர் ஒருநாள் ஊதியம் காண்பார்.

## களம் 1. காட்சி 2.

(வஞ்சி மாநகரின் மறுவீதி. உத்தமனும் ராகுவும் நிற்கின்றனர்.
ஊழியர் விளக்கேந்தி வருகின்றனர்.)

64

ராகு.

போர்க்கள முற்ற போது அறிகுவன் கொலை என்றாலும்
ஊர்முறை வாழ்வில் நெஞ்சில் ஒருசிறு கொலைக்கும் ஒவ்வேன்
யார்ஒரு வரையும் வீழ்த்தி யான்பெரு வாழ்வு காண
நேர்கிலன்; அதனால் எந்தன் நிலைமையின் னிட்டதென்பேன்

65

கிட்டத் தட்டஒரு
பத்துத் தரம்அவரைக்
குத்த எண்ணினன்யான்,

உத்: குற்றம்: அது புரியேல்.

66

ராகு: தங்க ளுக்குறு தகைமையை யாண்டும்
பங்கப் படுத்த எண்ணியே பழிப்பர்!
எங்கும் பிதற்றி இழிமொழி பேசுவர்!
எங்ஙனம் இதையே என்மனம் சகிக்கும்.

67

துடுக்கு மொழிகளைக் கேட்டவர், தம்மை
அடக்கி யிருப்பதும் அரிதே! அரிதே!
அடக்கமும் உள்ளத் தூய்மையும் என்னைத்
தடுத்து நிற்பன. அவன்நற் காலம்!

68

ஐயா, திருமணம் ஆயிற்றன்றே?
மெய்யாய் ஒன்று சொல்லுவன்: மேலவர்*
வையத் தியாவரும் போற்ற வாழ்பவர்
எல்லா விதச்செல் வாக்கும் மிக்கவர்.

69

மன்னவ ரளவு வன்மையு முடையவர்
இன்னல்கள் புரிவர் என்பதை உன்னுதி.
கன்னி கடந்தாள் என்னமா னத்தால்
பண்ணுவார் பற்பல ஊறுகள் என்பேன்!

70

காக்கும் மன்முறை அறத்தால்
நீக்கும் பதவியி னின்றும்:
சேர்க்கும் பலர்பலர் துணை; கை
பார்க்கும் எட்டிய மட்டும்,

71

உத்

என்னதான் அவர்சொன்னாலும் யான்புரி ஊழியத்தை
எண்ணுவார் ஆட்சி மன்றில்; எதிர்த்தொன்றும் எடுபடாது.
என்திறம் யாருங்காணு திருப்பினும் வாழ்வுப் போரில்
தன்புகழ் காட்டவேண்டும் தருணத்தில் அவிழ்த்து வைப்பேன்.

---

* அம்பலவாணர்

## 72

அரசரில் பிறந்து கல்வி கேள்வியோ டாசநீதி
முறைதவறாமல் பெற்றேன்: முன்னணி அமர்வேன். யார்க்கும்
சிரங்குனிந் தயலே சாரும் சிற்றினத் தவன்யா னல்லன்
வருபெரும் பதவிக்கேற்ற வன்மையும் அறிவும் கொள்வேன்.

## 73

மற்றொன்று கேட்பாய் ராகு! மணவினைக் காளாகாமல்
கட்டுபுன் காவலின்றிக் கற்புடைக் காளை யாக
எட்டுதிக்கெல்லாம் வெற்றி கொட்டவே விரும்புவேனைக்
கொட்டிலுள் ஈர்த்து நின்ற தொருபசுங்கொடியே என்பேன்.

## 74

கடல்வளம் தந்தாரேனும் கட்டினுள் அடங்கேன். மென்மை
மடவரல் திலகம் தூய மலர்முகக் கட்டில் வீழ்ந்தேன்.
கடிமண வாழ்வு; கொண்ட தளபதி கடன்; இரண்டும்
நடைபெறும். ஓ! அஃதென்ன! விளக்குடன் வருவார் சில்லோர்.

## 75

ரா. மங்கையின் தந்தையும் நண்பரும் வருவார்
இங்குநீர் சற்றே ஏகுவீர் உள்ளே

உத். என்பெருந் தகுதி பதவிநற் றூய்மை
நன்கவர் உணர இங்குதான் நிற்பேன்.

## 76

யார்? அவர்கள் தாமே வருவது!

ரா. வேறு யாவரோ வருவதாய்த் தெரியுது

[கச்சிதர், சில ஊழியர் விளக்கேந்தி வருகின்றனர்]

## 77

உத்.

மன்னவற் குற்றதொண்டு புரியும்நன் மாண்பு டையீர்,
என் துணைப் பதியே, வம்மின்! நன்மையுண் டாவதாக!
என்னகாரணமோ இந்த நள்ளிருள் ஈண்டுசேர? (கச்)
மன்னரே அனுப்பிவைத்தார்: மற்றுமைப் போற்றிடுதற்கு [illegible]

78

விரைவுடன் கொண்டுசேர்க்க வேண்டினர், அதனல் நீவிர்
சிறிதுதா மதமும் இன்றிச் செல்வதே தருமமாகும். (உத்:)
உறுபொருள் யாது என்று நீவிரும் உணர்வீர் கொல்லோ?

கச்: பெருந்துறை முசிறி நேர்ந்த சிலபொருள் பற்றிப்போலும்!

79

ஒருவர்பின் ஒருவராகப் பன்னிருதூதர் வந்தார்
வரன்முறை தெரிந்தஆட்சி மந்திரக் கிழவர்எல்லாம்
இரவிலே எழுப்பல் பெற்றூர்: யாவரும்கூடி, ஆண்டு
வருபொருள் பற்றிஆய நும்மையும் நாடிநின்றூர்.

80

இருப்பிடத்தின்மை கண்டு மற்றெருரு மூன்று பேரைத்
தெருத்தெருவாக உம்மைத் தேடியே அனுப்பியுள்ளார்

உத்:

உறுபெரு நன்மை இஃது என்னை நீ முதலிற்கண்டாய்:
ஒருமொழி வீட்டிற்சொல்லி, உறுவன்யான் நின்னேடைய;

81

கச்:

இருண்ட இக் கோரத்தீண்டு உத்தமர் செய்வதியாது?
(ரா) இரண்டுகால் நாவாய் ஒன்று எய்தினர்: அதுநிலைத்தால்;

திரண்டசீர் செல்வம் பெற்ற தன்மையில் நிலைத்திருப்பார்: (கச்:)
மருண்டனென்; விளக்கந்தேவை? (ரா) மணம்புரிந்துள்ளார் ஐயா!

82

கச்: யாரையோ? (ராகு) யாரை* வாரும் தளபதீ, ஏகலாமோ?

உத்: ஓர் ஒரு நிமிடம்! யாமே ஒன்றுசேர்ந் தேக லாகும்:

கச்: வேறெருரு கூட்டம் தேடி வருகிற தாங்கு ஐய;

ரா. மாறுகொள் நோக்கம். ஐய, அம்பல வாணர்! ஓம்பும்

(அம்பலவாணர், ருத்திரகோட்டி ஆயுதங்களுடன் வருகிறூர்)

* உத்தமன் வருகிறன்

83

உத். நில் அவ் விடமே!

ருத்: நல்லீர், கானவன்!

அம் பொல்லாத் திருடன்!!
கொல்லும் உடனே

(இருபக்கத்தினரும் வாள்உருவுகின்றனர்).

84

ரா. ருத்திரா இங்கு வா, உன்
கைத்திறன் காட்டென்னிடமே

85

உத். இரவில் பனியில் தருவருமல்
உறைசேர்ப் பீர்உம் கைவாள் தமைநீர்

86

எடுத்தீர் படைக்கலம், ஏனோ? பெரியீர்
அடுத்த மூப்புளனை ஒடுக்கப்போதுமே!

87

அம். கெட்டபுன் கள்வன்! தீயன்! வஞ்சன்!
நற்றவ மகளைப் பற்றினய்; மறைத்தாய்,
கற்றவித் தையினல் வசியஞ் செய்தாய்!
முற்றவும் துரோகிநீ, மூடன், மடையன்!

88

வஞ்சிமா நகரத்துற்ற வனிதையர் யாவருக்கும்
விஞ்சினள் கல்வி கேள்வி வனப்புநேர் ஒழுக்கத்தாலே,
கொஞ்சியே பேசி நிற்பாள். கடிமணப் பேச்சுகேட்டால்
அஞ்சியே அகல்வாள், உன்னை அடைவளோ வசியமின்றி.

89

நாட்டுள இளைஞர் நல்லோர் நலம்பல கொண்டோர் செல்வர்
வேட்டுவந்தோருக் கெல்லாம் "வேண்டிய தில்லை" என்ருள்
மாட்டுரு முரடன் உன்னை மணம்புரிவாள்கொல், நீயே
ஊட்டினுய் மருந்து மைகள் உண்மைஇஃ தன்றியில்லை,

## 90

மந்திரம் வசியமையில் மடங்கினுள் என்பதன்றித்
தன்னிறை மானம் நீத்தித் தடியனைத் தழுவி நிற்க
எந்தவிதத்தும் ஒவ்வாள் என்றுயான் முடிவுசொல்வேன்
சிந்தனைசெய்து மேலோர் குழுஇதைத் தீர்மானிக்க!

## 91

நன்றுதீ தறியாப் பால நங்கையை மோகனத்தால்
வஞ்சனை செய்தாயென்று விளக்கமாய்த் தெரிவதாலே
மந்திரயில்லி சூனி யங்களாம் நீதிக் கொவ்வாப்
புன்செயல் புரிந்தாய்; சட்ட வரம்பினைப் போழ்ந்தாய்மேலும்,

## 92

உலகினைக் கெடுக்கின் றுய்என்றொரு குற்றம்; ஓடி நீங்கள்
பலமுற அவனைப்பற்றிக் கட்டுங்கள், படபடத்தால்
குலைவுற, வேண்டும் எல்லாம் செய்தவன் கொட்டம் தீர்ப்பீர்.
(உத்) கலகமே புரிய யாரும் கைகளை நீட்டவேண்டா.

## 93

உறுதுணை எனக்கே ஆவோர், மாற்றவ ராக வந்தோர்,
இருதிறத் தாரும் ஈண்டு கலகமே புரியவேண்டா,
பொருதலை விழைந்தேன் என்னின் பிறரின்றூண் டுதலே இன்றி
ஒருவனே புரிவன்: நீவிர் என்னைவேண் டுவதும் என்னை?

## 94

அம்:

சிறையகம் உன்னைச் சேர்க்கத் துணிந்தனம் ஆட்சி மன்றின்
அறம்உரை கூறும் மேலோர் அழைத்துன்னைக் கேட்கும் காறும்;

உத்:

மறுப்பதற் கில்லேன்: ஆனல் மன்னவர், தூதர் என்னை
விரைவினிற் கொணருமாறு அனுப்பினர், மற்றென் செய்வேன்.

## 95

முதல் தூதன்

சொன்னது உண்மை ஐயா, இரவினிற் சபைகூ டிற்று,
அம்பெருஞ் சமுகத்திற்கும் முடங்கல் போயிருத்தல் திண்ணம்.

96

அம் : முறைசெயும் அரசர் இரவுஇந் நேரம்
அவைகண் டனர்யாம் விரைவினிற் செல்வோம்
முறையீ டிஃது சிறிதா காது!
கூடிய குழுமுன் கொடியனைக் கொணர்வீர்.
அரசரும் மற்றும் முறைசெய் பலரும்
தத்தமக் குற்ற குற்றம் இஃ தென்று
எண்ணியே தீரும்; எண்ணுதல் திண்ணம்.
இதுபோன் றவைகட் கிடங்கொடுப் பதனுல்
தொழும்பரும் பேயரும் வரம்பிலா நடைகொண்
டரசியல் தலைவராய் அடாதன புரிவரே!

களம் 1. காட்சி 3.

(அரண்மனையில் ஓர் அறை. மன்னர், அவைக்குழு பிற)

97

மன்னர் : நம்பு முறைஇச் செய்திகள் இலவே,
ஒன்றுக் கொன்று முரணுகின் றனவே,

குழு ஒருவர் : உண்மை, உண்மை; முற்றும் முரணே,
என்கடி தம்நூற் றேழுகப் பல்எனும்

98

மன் : என்னது நூற்று நாற்பது என்னும்,

குழு 2 : என்னதோ இருநூ றென்றறி விக்கும்.
உன்னி யூகமாய் உரைப்பவை ஆதலின்
இன்னவா றென்றுக் கொன்று முரண்வன

99

ஆயினும் பகைவர் நாவாய் ஒருசில முசிறி நோக்கி
மேவுவ துண்மை; இஃதை யாருமே மறுத்தற்கில்லை
மேலும் இத் தகையவற்றைப் பொதுப்படக் கூறலின்றி
ஆய்ந்தொருங் கெண்ணிக் கட்டிஅறிவிப்ப தியாண்டு மில்லை.

100

மன் :

வேறுபா டுற்ற தாலே வெறிதெனத் தள்ளேன், நெஞ்சம்
சோர்வுறு தாக்க வேலை பற்றியே சிந்திக் கின்றேன்
மாலுமி (வெளி நின்று)

யாரங்கே ஐயன்மீர் நீர் யார் அங்கே இருக்கின்றீர்கள்?

குழு 1.

பாரும் ஈண் டுறுவான் கப்பற் படையினைச் சேர்ந்ததூதன்
—மாலுமி முன்வந்து நிற்க—

101

மன் :

வந்தகா ரணமே என்னை(மா) மாற்றலர் இலங்கை நோக்கித்
தம்பெரும் படைசெ லுத்தத் துணிந்தனர்; இதனை ஒல்லை
மன்பெருஞ் சமுகஞ் சென்று தெரிவித்தி எனமா தேவ
நன்மகன் அனுப்ப யானே வந்தனன்; வணக்கம் மன்னு.

102

மன் :

கப்பல்கள் மாறிச்செல்லக் காரணம் யாது சொல்லோ?

குழு 1.

ஒப்புதற் கில்லை; இஃதே ஒருபெருஞ் சூழ்ச்சி என்பேன்
முக்கிய மான தாகும் முசிறிநகம் பற்ற லர்க்கு,
இப்பெருந்துறையை நோக்கா தேகலும் ஏய்ப்பதாகும்.

103

பெரும்படை அரண்க ளின்றி, யாவரும் எளிதிற் பற்றற்
குரியது முசிறி; லங்கைத் தீவுகொள் அரணை உன்னின்
பெருமதில் அகழி மிக்க போர்ப்படை பலவும் கொண்டு
வருபவர் மலைத்து நிற்கும் வளமுடை யதுகாண் என்பேன்

104

பற்றுதற் கெளிதாம் மிக்க பயன்தரு கின்ற தான
நற்றுறை முசிறி நீத்து; நயம்பெறற் கரிதாய்; கொள்ள
மிக்கஇன் னல்கள் நல்கும் லங்கையை நோக்கிச் செல்ல
அத்துணை புத்தி யற்றார் அவர்எனக் கருதேல் ஐயா;

105

மன் :

இல்லவே இல்லை, ஒன்றார் இலங்கையை நோக்கவில்லை.

குழு: 1.

நல்லனர் தூதன் இஃதே; (தூதன்) நாயக, நல்லீர், சான்றீர்,
செல்லுவோம் இலங்கை நோக்கி என்றவர் திரும்பி ஆங்கண்
பல்பெருங் கப்பற் கூட்டப் படைஒன்று சேரப் பெற்றார்

106

குழு: 1. நல்லது; நினைத்த வாறே
நடந்தது: நாவாய் எண்ணம்?

107

தூதன்:

முப்பது கப்பல் முன்னர் கூறிய கப்பலோடு
செப்பமா யணிவகுத்துத் திரும்புவ முசிறி நோக்கி
உப்பினுக் குண்மையாக உழைப்பவர், ஊக்க மிக்கார்,
ஒப்பிலாத் தலைவர் மாதே வர்இதை உரைக்கச் சொன்னார்

108

மன்: உறுதியே; படைநம் முசிறியே நோக்கும்
பெரியவன் மார்க்கன் உளானா நகரில்?

குழு: 1. உறையூர் இன்றவன் உறைவிட மாகும்.

மன்: திருமுகம் கடிதில் வருமா றனுப்புக

(அம்பல...உத்த...இராகு, ருத்திர....ஊழியர் வருதல்)

109

குழு:

அம்பல வாணர், இஃதே! உத்தமக் குரிசில் கூட
வந்தனர்: (மன்) வாரும் எந்தம் உத்தம வீரரே நீர்
இந்த இக் கணமே நந்தம் எதிரியை மடக்க வேண்டி
முந்துற வேண்டும் வாய்த்த போர்முனை தன்னை நாடி.

110

மன்:

வருகவே வருக ஐய, கவனித்தே னில்லை, வள்ளால்;
வரவுநல் வரவே என்றும், அம்பல வாணரே, நம்
வருகையும் இல்லை நல்ல வாய்மொழி இன்மையாலே
இரவொரு குறைபா டுற்ற தென்பன்யான் உண்மையாக

111

அம்:
யானும்அவ் வாறே மன்னர் இன்மையால் குறைபாடுற்றேன்
மானவ, தானத்தாலும் மன்முறைப் பணியி னாலும்
ஆனஒன் றன்று இந்த நள்ளிரா எனது தோற்றம்:
மாநகர் பெற்ற ஊறென் மனத்தினிற் பதிவதில்லை;

112

என்மனை யுற்ற ஊறு யாவினும் பெரியதாக;
கண்ணழித் துடைந்து ஓடும் கடுவெள்ள வேகத்தாலே
புண்ணுற்றுக் கொதிக்கும் நெஞ்சம், பொங்கி மேலிட்டு வீங்கும்.
ஒன்றுமே உணர்தற் கின்றி ஒருமையாய்த் தனித்து நிற்கும்

113

மன்: என்ன நடந்தது
அம்: என் மகள்: என் மகள்—
மன்: விண்ணுற் றனளோ?
அம்: என்னள வதுவே!

114

பில்லிசூ னியங்கள் செய்யும் பேய்மக்கள் மருந்துமையால்
மெல்லியாள் எனையும் தான்கொள் நிறையையும் கெடுத்தாள்மன்னு
நல்லறிவுள்ளாள்' யாக்கை நலமுள்ளாள், உரமும் உள்ளாள்
புல்லியல் வசிய மின்றி இந்நெறி புகுவாள் கொல்லோ?

115

மன்: நங்கைக்கும் நுமக்கும் கேடுபு ரிந்தவன்
எங்குளான் ஆயினும், யாவனே ஆயினும்,
இங்கவற் கேற்ற தண்டனை நும்முனே
மன்றத் தறநூல் முறைப்படி ஆற்றுவேன்.

116

அன்னவன் என்னரு மகனே ஆயினும்
சொன்னமு றைப்படி செய்யலாம்; ஓரும்!
அம்: மன்னவா, நும்முன் நிற்கிற கானவன்
அந்நிய ரோடமர் ஆற்றுதற் கானவன்—

117

புன்மையனுக
இன்னல்பு ரிந்தான்
சொன்னமு றைசெயின்
நன்றியை மறவேன்.

## 118

மன் : வெட்கம்,மிக வெட்கம் ஆனஓர் காரியமே

குழு : மிக்க மனவருத்தம் யாமேஉறு கின்றோம்
உத்தமரே, இதற்கே என்ன உரைக்
[கின்றீர்

அம் : அத்தனையும் உண்மை! என்னுண்டு ஆங்
குரைக்க

## 119

உத் : ஆற்றலும் மாண்பும் ஆண்மையும் அமைதியும்
நாற்றிசைப் புகழும் நயமுறப் பிறங்கிப்
போற்றுதற் கான பெரியீர், அரியீர்,
மூப்புறு பெரியோர் இவர்நன் மகளை—

## 120

எடுத்தனென் ஏற்றனென் என்பதும் உண்மையே
அடுத்ததாய் அவளையான் மணந்துளேன் உண்மையே
கெடுத்ததாய் ஈங்கிவர் உரைப்பன வற்றின்
நடப்புஇவ் வளவே : இதற்குமேல் இன்றே!

## 121

மென்மைப் பண்பா டறியா நெறியின்
வன்மை கொண்டென் வாய்மொழி தோன்றினும்
உண்மை அவ்வா றன்றும் : காரணம்,
மன்ன, உரைப்பன் என்கதை கேட்பீர் :

## 122

ஒன்பது திங்களே ஒய்வு கண்டனன் ;
முந்திய வாழ்வுபோர் முனையி லென்னலாம்.
ஐந்திரண் டானஎன் ஆண்டு முதலாய்
ஏன்காம் பொரு தொழில் ஈடுபட்டனவே!

## 123

பாசறை வாழ்வு, பகைவரின் தாழ்வு,
வீசுவாள் எடுப்பு. வீரரின் துடிப்பு
வாசனை, உடுப்பு அறிவனே அன்றி
மாசக நடப்பு சிறிதும் யான் அறியேன்—

124

சாதக மாக்கச் சங்கதி வைத்து
மாதிற முறயான் பேசவும் அறியேன்
காதலின் கதையைக் காவலர் கேட்க
ஓதுவன் நேர்முன் உற்ற வகையே.—

125

மந்திரம் மருந்து வசியம் மோகனம்
தந்திரம் மைகள் பில்லிசூ னியங்கள்
கொண்டுயான் வஞ்சனே செய்ததாய்க்
கூறினர்:
எந்தவி தத்தில்? யானறி விப்பேன்.—

126

அம்: நாணமே நல்லுரு, அச்சமே அணிகலம்
மாணுறு மடமே மதியாய்க் கொள்மகள்!

127

தன்நடை கண்டுதான் உள்நடுங் கியல்
பினள்
என்னவா றிவனேத் தன்துணே யாக்குவள்?

128

குலம்ஒப் பின்றே குணம் ஒப்பின்றே
நலம் ஒப்பின்றே நாடொப்பின்றே
வயதொப்பின்றே, வனப்பொப் பின்றே,
பயமுறு வள் இவன் பார்த்தபொழுதே!

129

எல்லா வகையினும் பொல்லா தவனே
'நல்லாள் நயந்தனள்' என்னப் புகல்வோர்
கல்லா தாரே யாதல் வேண்டும்
நல்லார் அம்மொழி சொல்லார் அறிவால்.

130

மைமந் திரங்களின் மாயவித் தையினல்
செய்வினே யே இது! பிறிதொன் றன்றே:
கையர்கள் தம்வினே: இதன்திறம் காணப்
பையரா வுலகே புகுதல் வேண்டும்!!

131

மருந்துஉள் ளீடுகள் அருந்த வைத்தே
குருதியை அறிவைக் குணத்தையும்
கெடுத்தென்
அருந்தவச் செல்வியைக் கவர்ந்தனன்
என்றே
உறுதியாய் மீண்டும் அறிவிக்கின்றேன்.

132

மன்: சிறுபெரு நடைமுறை, சிலுசிலுப் பன்றி
ஒருவகை யினும் அவன் தவறிழைத்தனன்
எனக்
கருதுதற் கில்லை: காண்கிலம் உண்மை.
"உறுதியாய் உரைக்கிறேன்" என்பதொன்
றெல்லுமோ?

133

குழு: உத்தம ரே,எமக் குத்தரம் சொல்லும்.
இச்சிறு கன்னியைப் பற்றிய முறைஎன்?

134

கொஞ்சு மொழியால் வஞ்சித் தீரோ?
அஞ்சு வினையால் அடங்கவைத் தீரோ?
நஞ்சிட் டீரோ? இன்றேல், நயந்தே
வஞ்சியை வேண்ட; வந்து,சேர்ந் தீரோ?

135

உத். எல்லா விவரமும், யாவரும் அறிய
'வில்வீ ரன்மனை'க் கோர்தூ தனுப்பி
நல்லா ளைநீர் நேர்தரு விப்பீர்!
சொல்வாள் உண்மையைத் தந்தையின்
எதிரே.

136

அவள்வாய் மொழியால் அறிவன கொண்டு
தவறுடை யேன்எனத் தெரிவீர் ஆயின்,
இவண்என் வேலை, எற்றம்மற் றென்னுயிர்
அவமுறு நிலைக்கும் ஆளாக்கு வீரே

137

மன்: யார்? திலகவதியை அழைத்துவா
உத். (ராகுவை) நீ இவர்களுடனே இயைந்து போ

138

பெற்றபா வத்தைப் பெம்மான் திருமுன்
பற்றறச் சொல்லும் பான்மை; நும்முன்,
நற்றடங் கண்ணாள் நலத்தை யான்கைப்
பற்றிய கதையைப் பகரவே விழைவேன்

மன்: உத்தமரே உரைப்பீர்:

139

உத்:

அம்பல வாணச் செம்மல், அப்பெருங் கன்னி தந்தை
தம்பெரு மனைக்கே என்னை வரவழைத் தருக மர்ந்து,
அன்புகொள் நெறியில் என்றன் கதைகளை அறியவேண்டி
நின்றனர்: யான்என் நாளில் நிகழ்ந்தன யாவும் சொன்னேன்

140

பையனா யிருந்த காலம்; படிப்படி யாக வாழ்வில்
செய்தவெம்போர்கள்; ஒன்னார் செருக்கற அரண்வளைத்தல்
எய்துமா றாயம்; மற்றை இடர்ப்படு முறைகள் எல்லாம்
ஐயுறவின்றி நன்கு விளங்குமா றறிவிப் பேன்யான்.

141

கடல்படு அவதி, மற்றைக் கடுநிலத்தவதி, வாட்கு
உடல்ஒரு மயிர்க் கனத்தில் தப்பிநின் றுய்ந்த செய்தி,
திடமுறுபகைவர் கையில் சிக்கிய அவதி, சின்னாள்,
அடிமைவாழ்வவதி; பின்னர் அதினின்று மீண்ட சேதி

142

அவ்விடம் நீங்கி ஓடி அரணியம் பாலை குன்று
வெவ்விடர் நிலங்கள், ஓங்கல், வழியில்நீர் நிலைகள் ஆழம்;
செவ்விய நெறியேஇன்றும்: எங்கணும் சிங்கமாதி,
பைவிட அரவுவண்டு பயப்பன தீமையார்க்கும்

143

மற்றொரு பூமி ஆங்கு மக்களை மக்கள் தின்பர்
பெற்றுளர் தலையைத் தங்கள் மார்பினில் பெரியவிந்தை

இத்தகைக் கதைகள் நூறு இருந்தமர்ந் தினிதுசொல்ல,
உத்தமி இவற்றை மிக்க உவப்புடன் கேட்டுவந்தாள்.

144

வீட்டுறு வினைநிமித்தம் அடிக்கடி விட்டுச் செல்வாள்
நாட்டமும் கதைமேலாக விரைவினில் முடித்துவந்து
கேட்பதைச் செவிவாயாகப் பருகியே சிந்தைசேர்ப்பாள்
ஆட்படு நிலையைக்கண்டு யானும் ஓர் வேலைசெய்தேன்.

145

"இடையிடை யானகன்ற பொழுதுநீ உரைத்த எல்லா
நடைமுறைகளையும் எற்கே நவிலுக தெளிவாய்" என்று
மடவரல் வேண்டிநிற்கும் வகையினில் கதைநடாத்தி,
"தடைஏது மில்லை" என்றே தமியட்கு மீண்டும் சொன்னேன்.

146

என்பெருந் துன்பம்பற்றி யானறிவிக்குங் காலைத்
தன்கணீர் பெருக அஃதைத் தானையால் துடைத்து நிற்பாள்.
"என்ன, ஈதென்ன" ஐயோ, இது பெருவிந்தை! இஃதை
என்செவி பொறுக்கா, போதும்;' இன்னன உருகிச் சொல்வாள்.

147

இத்தகை ஒருவன் எந்தன் கணவனா யியையுமாறு
கர்த்தனின் கருணைவேண்டும்" என்றவள் கனிந்து நிற்பாள்.
'உத்தமா, எனை மணக்க விரும்பியோர் உள்ளார் என்றால்
வித்தக கதைகள் தம்மை அவர்க்குநீ விளம்பி வைப்பாய்.

148

"கதைஅவர் சொல்லக்கேட்டுக் காதலில் மூழ்கி நிற்பேன்:
இதுவரைச் செ ்னநிற்கு வந்தனம்" என்றாள். யானும்
மதுமலர்க் குழலா ா தந்த மாற்றத்தின் குறிப்பு ணர்ந்து
'புதுமையே சொல்வாற்காதல்; புரிந்தவற்கில்லை போலும்'

149

எனத்துணிந் துரைத்தேன்: அன்னாள் யான்பட்ட இன்னற்காக
மனமிக இரங்கி நின்றாள்; மற்றவள் இரக்கங்கண்டு
எனதுளம் விரும்பிப்பற்ற; இருவரும் இயைந்தொன்றானோம்
வனிதைஎன் வசமாய் நிற்க, யான்கொண்ட வழியும் இஃதே

150

தக்கநற் சான்று சொல்வாள்; திலகமும் அஃதேவந்தாள்

(திலகம், ராகு, ஊழியர் வருதல்) மன்—

இக்கதை கேட்பின் என்பெண் மக்களும் விரும்பி நிற்பர்.
சிக்கல்சேர் வினையை ஏதோ சிறப்புறுவகையில் தீர்ப்போம்
சர்க்கரை இல்லையாயின் வெல்லத்தைச் சேர்ப்பரன்றோ!

151

அம்:—

என்னசொல்கின்றாள் அவளெனக் கேட்போம்:
கன்னியும் அவனைக் காதலித் ததாகச்
சொன்னால்; அவன்மேல் பெரும்பழி சுமத்திய
என்தலை மேலிடி வீழ்ந்தழி குவன்யான்!

152

என்னரு மகளே இங்கரு கினில்வா:
மன்அவை கூடிய மாபெரு மக்களில்
உன்உள்ள மதிப்புக் குரியோர் யாவர்
என்பதை நீயும் நன்கறி வாய்கொல்?

153

தில்: அறிவேன் அருமைசால் அப்பா, ஈண்டு
இருவகைப் பெரியோர் இருப்பதாய் அறிகிறேன்
பெறுதலும், கல்வி தருதலு மான
முறையினிற் பெரியோர்க் கென் முதற் கடனே.

154

வாழ்வும் கல்வியும் தந்தநற் றந்தையைத்
தாழ்ந்து பணிதல் தனயையின் முதற்கடன்
ஆள் ஆக் கியநீர் அதிபர்; முதல்வர்;
வீழும் என்மனக் குரியர்மற் றொருவர்.

155

அம்மா, முன்னர் அவர்தந் தையினும்
நும்மைப் பேணிய முறையே; யானும்

எம்மான் இவர்பதி ஆன்பே ருறவால்
செம்மாந் துறுபெருஞ் சிறப்பளிக் கின்றேன்

156

அம் : கடவுளே காக்க வேண்டும் ; என்கடன் தீர்ந்த தின்றே!
படைவள மன்னு, வந்த பகைவரை வீழ்த்த வேண்டும்.
நடைமுறை ஆய லாகும் ; நயமிலா மக்கட் பேற்றின்
எடுத்தொரு மகவு கோடல் இனிமையே நல்கும் போலும் !

157

கானவ, அருகில் நீவா கன்னியின் காத்தைப் பற்று.
யானிதற் கியையேன் முன்ன ராயினும், இவள்தன் தூய
மேனியைத் தொட்டா யாக ; முழுமனத் துடனே இன்று
மானமார் கற்பு பேண மணமுறை மன்றில் தந்தேன்.

158

பெண் அருங் கலமே, இன்று பெரிதும்யான் மகிழ்கின்றேன். ஏன்?
இன்னெரு பெண் எனக்கே இன்மையால். உணர்தி உண்மை
நின்பெருஞ் செயலென் நெஞ்சில் இப்பெரு நிலத்திலுள்ள
கன்னியர்க் கெல்லாம் காலில் தளையிடக் கூறும் ஐயோ !

159

அரசே, முடிந்தது.
மன் : முறைசேர் நெறி இவர்
உறவே நீர் பெற
உரைப்பேன் யான் சில.

160

கொடுப்பன கொடுத்துழன்று, குணமுறு நிலை கண்டார்க்கு
விடுத்தது நீங்கல் உற்ற துயரினை வீழ்த்தி நிற்கும்.
கடந்ததை எண்ணரி நெஞ்சு கவலுதல், மீண்டு மற்றோர்
இடர்புக இடங்கொடுத்த தன்மையே ஆகும் யார்க்கும்.

161

உள்ளவை பலவும் போக்கும் சூழ்வலி அண்மிற்றேனும்
உள்ளவன் பொறுமை அந்த ஊழையும் எள்ளும் வெல்லும்
உள்ளதை இழந்த காலம் உள்ளத்தே உவகை செய்வான்
கள்ளனின் பொருளைத் தன்கைப் பற்றுவன் திறலோனுவான்

162

வீணே வருந்தி உழலும் சிறுகுணத்தன்
தானே தனையழிப்பான் காண்.

163

அம் :

இன்னவா றானல் நம்தம் முசிறியை ஒன்னார் கொள்க.
சொன்னவா றுவகை, யாமே கொள்வதால் நகரை விள்ளோம்!!
இன்ன லுற் றருக்கில்லை ; ஏனைய பிறர்க்கே யாரும்
நன்மொழி கூறக் கேட்டு நயந்தெளி பான்மையுண்டு.

164

குற்றமும் குணமும் கூறும் கூடிய இருபா லர்க்கும்
இப்பெரு மொழிகள் என்றும் ஏற்புடையன என்றாலும்
சொற்றசொல் சொல்லே ; அன்றிச் செவியமு தொழுக்கி உள்ளத்
துற்றபுண் ஆறிற்றென்று யாருமே உரைக்கக் காணேன்.

165

இன்னலோ டபதே சங்கள் ஏற்றுவா ராயின், யாரும்
தங்கிலை கெடுவர், மிக்க துயரமே தாங்கி நிற்பர்.
மன்னவ, இனிமேல் யாமே அரசியல் ஆயலாகும்
(மன்) நன்று! நம்முசிறி நோக்கி நண்ணலர் விரைகின்றார்கள்

166

அப்பெரும் பதியின் அரண்வளம்
உத்தம, நீரே உணர்குவீர்.
இத்தினத் தங்கு இருப்பவர்
மிக்கவர், நல்லவர், ஆயினும்—

167

மன்றத் துற்ற பெரியோர்கள்
ஒன்று சேர்ந்தும் பெயர்கூறி
நன்கு மதித்துப்,! போர்முனைநீர்
சென்று நடத்த வேண்டுகிறார்

168

புதியநற் சுகபோ கத்தில்
வதிந்துநீர் களிப்பீர் ; அல்லதை

எதிரிகள் படையெடுப்பால்
கதிகலங் கியதாய்க் கொள்வீர்

169

உத் : மன்றப் பெரியீர் !

போர்த்தொழில் என்றால் உள்ளம் பூ என ஏற்றுநிற்கும்
சேர்க்கையாம் கல்லும் எஃகும் அன்னமென் றாவியாகும்.
ஆர்வமும் அரிய ஒன்றைச் செய்ததில் வெற்றி காண்டல்
ஏற்றனன் பகைவர் தம்மை ஒருங்குடன் வீழ்த்த இன்னே.

170

என்மனை திலகம் மிக்க மென்மையள் யார்க்கும் நல்லாள்
அன்னவள் வளர்ந்த சீர்மைக் கேற்றநல் முறையில் நீவிர்
நன்மனை வசதி, சேவை நலம்பல அமைக்குமாறு
நும்முனே பணிந்து நின்று வேண்டுவன் கருணை நீதி.

171

மன் : தந்தை மனையிலவள்
தங்கலாமன்றோ ?

அம் : என்றன் மனையில்! அவட்
கங்கிட மில்லை

172

உத் : யானும் அதனை வேண்டேன்
தில : யானும் அதனை வேண்டேன் !

173

கண்முன்யான் நிற்கக்கண்டு கனன்றெழு சினத்தால் நெஞ்சம்
புண்படும், ஆதலாலே அங்குயான் போகேன். போற்றி,
மன்னவா ; பேதை புன்சொல் திருச்செவி ஏற்று, வாக்கின்
இன்னருள் புரியுமாறு ஒன்றுயான் வேண்டுகின்றேன்.

174

மன் : மாதே, வேண்டுவது
யாதோ ? கூறுக.

175

தில :

மானமார் வாழ்வு மேன்மை வளமெல்லாம் உதறி நீத்து
யான் அவர் பழிஅஞ்சாமல் கிளம்பினேன் ஊரார் எள்ள !

கானவனுடனே கூடிக் களித்தொரு மித்த வாழ்வு
காணலா மென்ப தன்றி மற்றொன்று மில்லை மன்னா,

176

என்னுளம் அவருள் ளத்தோ டியைந்துநன் கொன்றி நிற்கும்.
நன்மனத் தழகே என்றும் அவர் முகத்தொளிரக் கண்டேன்.
தன்குறிப் பெயரை நன்கு காரணப் பெயராய்க் காட்டும்
அன்னவர்க் கிம்மையோடு மறுமையும் ஆட்செய் வேன் யான்

177

விளக்குறு விட்டிலாக வீழ்ந்துளம் நொந்து ஈண்டு
கலக்குறு, அவர் தனித்துப் போர்க்களங் காண்பாராயின்
இழக்கிறேன் மணந்த நோக்கை ; இடர்ப்படும் எனது வாழ்வு
உலப்புறும் ; அதனை உன்னி என்னைநீர் உடன் அனுப்பும்.

178

உத் .

இவ்விடம், பெரியீர், பெண்முறை கேட்டீர் இயைவதே கடன்
எனப் புகல்வேன்.
யவ்வன பருவத் தெழுசிறு காம வேட்கையைத் தணிக்கவு மன்று,
செவ்விதழ் மதுர அமுதினை மாந்தித் திளைத்துநன் கிருக்கவுமன்று,
உய்வகை, உவகை அவட்கது வாகும். ஆதலின் உரைத்தனென்.
உண்மை

179

அகம்முகம் மலர்ந்து அவளுடன் உறைய அவமுறும் கருமம்என்
றெண்ணேல்
சகத்தினைப் படைத்துக் காத்தளித் தழிக்கும் தெய்வமே சாட்சி
யாய்ப் புகல்வேன்
சுகக்கொடி தூக்கி, தென்றலிலூர்ந்து, கருப்புவில் மலர்க்கணை
தொடுத்தோன்
வகைப்படு லீலை வயத்தனாய் மூழ்கின் வாய்த்தஎன் ஆண்பிறப்
பவமே!

180

கையுறுகட்கம் அகப்பையாம்; வீரக் கழல்களும் சிலம்பெனமாறும்
மெய்யுறு கவசம் அடுகலம் : வாகு வலயங்கள் கைவளை யாகும்.
செய்நெறி மாறு தன்மையால் எந்தன் சீர்மையும் ஆண்மையும்
மாயும்
தெய்வமே சான்று ; இதற்குமே லொன்று செப்புதற்கிலை; இனி
ஆயும்.

181

மன் : போவதோ, இருப்ப
தாவதோ, அதனை
நீவிரே நும்முள்
நேர்விரே. வினையியல்—

182

சீக்கிரம் நீர்முனை
நோக்கவே வேண்டும்,
வாக்கினு லன்று,நும்
போக்கினுல் காட்டும்.

183

குழு : 1. இன்றிர வேநீர்
சென்றிட வேண்டும்.

உத் : நன்று!அவ் வண்ணமே
சென்றுசேர் வல்யான்.

184

மன் : நாளை-அதிகாலை நம்பே ரவைகூடும்.
வேளை மணிஒன்ப தாம்.

எம்பெருந் திருமுகம் நும்கரம் எய்தத்,
தன்மையும் தகுதியும் தெரிந்து வினைசெயும்
நன்மகன் ஒருவனை எம்மிடம் அமர்த்தி
வன்கணர் பகைப்புலம் உத்தம, விரைகுவீர்.

185

உத் :

கட்டியங் காரன் ராகு கண்ணியன் நம்பத்தக்கோன்
வைத்தனன் அவனை ஈண்டே, மனைவியைக் கொணர்ந்து சேர்க்க.
உத்தமற் சேரற்பால அவன்வயம் அனுப்ப லாகும்.
மற்றுயான் செல்வன் மன்னு, (மன்) யாவரும் சென்மின் போற்றி!

186

அகத்தெளிவு முகப்பொலிவில் அரிதேயாகும்
அவர்கருமை பெருமையினுல் மறையக் காண்பேன்
மிகப்பெரியீர் நும்மருகர் நல்லர் வல்லர்
மேல்நெறியே கருதுபவர், கீழிறங்கார்

குழு 1: சுகமாக நீர்வாழ்வீர் திலகத் தோடு!!

அம்: சொல்லுகிறேன் யானும்ஒன்று உமக்கே ஐய.
மகள்பெரியள்! நீர் பேணும், மதிவல் லீரேல்;
மற்றிங்கு சொல்வதற்கே இனி என்னுண்டு!

187

வஞ்சியாள் அன்றுதான்
வஞ்சித்தாள் தன்பெருந்
தந்தையை: இன்றுநீர்
எஞ்சினீர்: உம்திறன்!

(மன், குழு, பிறரும் மறைதல்)

178

உத்: கற்புக் கணிகலம்
நற்குணச் செல்வி
நட்பினை எண்ணி
நிற்கும்என் ஆவி

189

என்பெருந் திலக மாதை ராகு,உன் பொறுப்பின் வைத்தேன்
உன் மனையாளே நாளும் ஒம்பிநற் றுணையா ளாக!
பின், தகு வசதிபார்த்துப் பெண்களை அழைத்து வாநீ.
அன்புறு கனியே கண்ணே அருகில்வா திலக மானே,

190

இன்னும்ஓர் மணிநே ரம்தான் இருப்பன்யான். அதில்உன் னோடு
இன்புறு வேனோ, மற்றென் எழுச்சிபைக் கவனிப்பேனோ,
கன்னலின் மொழியே, காலம் தன்கடன் இழுக்கா தென்றும்!
கண்ணியம் கருதுவோர்கள் காலத்தில் கருமஞ் செய்வர்.

(உத்தமன் திலகம் மறைதல்)

191

—உரைநடைத் தனி அடிகள்—

ருத்: சீர்மிகு ராகு, (ரா) ஆஹா. திருவுள்ளம் உரைப்பதியாதோ:

ருத்: யாது யான் செய்யப்போவ தாகநீ எண்ணுகிறாய்?

ரா: ஓர் சிறு கவலையின்றி உறங்கவே செல்வாய் நீதான்,

ருத் : நீர்நிலைகளில் விழுந்து உயிரையே மாய்ப்பன் கண்டாய்.

ரா : காரியம் ஈதா யின்மேல் நட்பினுக் கென்செய் வேன்யான்

192

பேதைவன் பேதை !

ருத் : பேவைதான் யார்என
ஓதுவேன் கேள்நீ

193

வருந்தியே அழுந்தி வாழ்ந்தும் உயிரைவைத் திருப்போன் பேதை
பருத்தவன் கூற்று ஆக ; மருந்து நல் மரணமாகக்,
கருத்தினி லுணர்ந்த பின்னும் கவன்றுயிர் வாழ்வோன் பேதை.
(ரா:) இருபதும் எட்டு மான என்பெருங் காலமெல்லாம்—

194

வருவது லாபந்தானே மற்றதோ என்றே எண்ணிக்
கருமங்கள் புரிவேன். அவ்வாறியாருமே புரியக் காணேன்
ஒரு சிறு பெட்டைக் காக உயிரைநீ மாய்த்தலாமோ ?
பெருமித மடைவாய் நீயே அஃறிணைப் பிறவி கொண்டால் !

195

ருத் : மெல்லியல் மீது காதல்
கொள்வது குற்றமே தான்.
தள்ளவும் ஆவதில்லை.
உள்ளத்தில் புண்யமில்லை!!

196

ராகு : புண்ணியம் புன்மை என்றே
என்னென்ன பிதற்று கின்றாய் ?
நன்மை,தீ மைஒவ் வொன்றும்
நம்மிலே ஆவ தன்றோ !

197

நிலமாம் இவ்வுடல் : நாடி வினைசெய்
உழவனே ஆகும் உள்ளத் தெண்ணம்.
பலபல வகையில் பயிர்செய் தோம்பல்
அலதுஓர் வகையே அமையச் செய்தல்—

## 198

தெங்குமா கதலிபூகம் செழும்பலா வருக்கம் வைத்தல்
அங்கநல் லுழைப்பால் ரோஜா, சண்பகம் முல்லை பிச்சி
எங்கினும் நடுதல்; இன்றேல் மடியினல் இருநிலத்தை
மங்குறச் செய்தல் எல்லாம் மனம் எனும் உழவன் பாற்றே

## 199

சென்ற வாறெல்லாம் நோக்கும் சிறுபுலன் ஓர்தட் டாகும்
நன்றின்பா லுய்த்துக் காக்கும் நல்லறி வடுத்த தாகும்
முந்திய தட்டு விஞ்சி நிற்குமேல் வாழ்வுத் தூக்கு
தன்னிலை கெட்டு நேர்மை தவிர்தலால் வியர்த்த மாகும்

## 200

அறிவுசொல் நெறியில் தங்கள் புலன்களை அடக்கா ராகிச்
சிறுநெறி செல்வார் சிந்தை நச்சுறும் சினந்து நிற்கும்
குருதியும் கொதிக்கும் காமவேட்கையும் குமுறலாலே
பொறிஎனும் பரியைக் கூர்த்த மதிஎனும் கயிற்றால்கட்டு

## 201

பெரியவர் வேட்கை கொள்ளின் காதலாப் பேர்சொல்வார்கள்
சிறியவர் கொள்ளின் காமம் மோகம்என் றெள்ளுவார்கள்
அரியநின் காதற் போக்கும் இத்துறை அமைந்த தாகும்
வெறுத்தொழி இதனை (ருத்) நீவிர் உரைப்பது நேர்மையன்று

## 202

ராகு:— காதல்!

காதல் என்பது குருதிக் கொதிப்பு.
உள்ளக் குமுறல்! சித்தச் செலவு!
நீரில் வீழ்ந்தோ இறக்க நினைத்தாய்?
நன்று! நன்று! நாய்பூனை களையே
பாழுங் கிணற்றில் வீசி எறிவர்!
வீர ஆண்மக னகை விளங்கு!
என்பெரு நண்பன் நீஎனக் கொண்டேன்
அன்பெனும் பாசம் இறுகப் பிணிக்க
என்றும் பிரியா வாழ்வின ரானேம்!
உற்றுழி உதவலின் மற்றென் உண்டு!
பையிலும் கையிலும் நிறையப் பணம் எடு
முசிறி முனைக்கே நீயும் உடன் வா.

பொய்த்தாடி மீசை பொருந்தப் புனைந்து
உருவை மாற்றிக் கரவு நெறி நில்!
ஐய, பையில் பணத்தை நிரப்பு!
கானவன் உடனுறை காதல் வாழ்வு
திலகவதிபால் நிலைகொள் ளும்மோ?
அவனும் அவளுடன் நெடிதுறை வானே!
நீயே பையில் பணத்தை நிரப்பு.
எடுபிடி யாக எழுந்த காதல்
கெடு பிடி யாக வீழ்ந்தே தீரும்!
பையில் நிறையப் பணத்தை எடுநீ.
கானவன் சித்தம் ஒருவழி நில்லாது;
கன்னியை யானே உன்வய மாக்குவேன்
பணத்தைப் பையில் நிரப்பு! பின்பார்!
இன்று கரும்பென இனித்த மென் காதல்
நாளை வேம்பாய் நகர்த்தப் படும்பார்!
கன்னியர் உள்ளம் காளையை நாடும்.
மெய்யுறு கலப்பில் மோகந் தீரச்
செய்தவ றுணர்வாள்; பிரிந்தே தீர்வாள்!
பிரிவது உறுதி! பணத்தைத் சேர்நீ.
உயிரை மாய்க்க உன்னினை. ஒன்றுகேள்.
நீரில் வீழ்வதின் நேரிழைக் காகநீ
உள்ளதை எல்லாம் ஒழித்தொரு வகைசெய்!
மெல்லியல் சுகத்திற் கெல்லாம் விட்டொழி!
எத்துணை இயலும் அத்துணை பணம் பார்!
நேர்சீர் அறியாக் கானவனும், ஒரு
பசுத்தோல் போர்வைப் பாவையும் கூடி
இல்லறம் நடாத்த இயையின் இதனை—
ஆற்றலும் அறிவும் அதிகம் பெற்றயான்
மாற்றுவ தரிதோ! மாதுநின் வயத்தாள்!!
பணத்தைத் திரட்டு! கிணற்றில் விழுவது
இனிமேல் ஒழிக! எத்துணை தவறது!
மெல்லிய லின்றி மூழ்கி முடிவதில்,
புல்லிப்பின் தூக்கில் மடிவது பெரிதே!!

203

ருத்:—

உன்முறை ஒழுகின், என்றும் உறுதுணை ஆவாய் சொல்லோ?

ரா:—

என்னைநீ நம்பு, சென்று எடுத்துவா பெரும் பணத்தை

முன்னரும் சொன்னேன், இன்றும் சொல்கிறேன். எனக்கு அந்த
வன்மனக் கான வன்மேல் வயிரம்உள்ளூறி நிற்கும்

204

காரணம் ஒன்று மின்றிக் காய்கின்றேன் அவனை என்ற
நேரிழை கட்பிற்காக அவனை நீ நலிதல் வேண்டும்.
மாறுறு வினைகள் நூறு இருவரும் சேர்ந்து செய்வோ
கோரியபடி முடிக்கக் கொண்டுதா பணம் நிரம்ப.

205

காலம்ஓர் கன்னி அஃது காலத்திற் கருவு யிர்க்கக்
கோலங்கள் நூறு தோன்றும்! கொண்டுவா பணம்நீ பின்பா.
சில, நாம் நாளைக் காலைச் சிந்திப்போம் இதனைமேலும்.

ருத் :—

காலையில் எவ்விடத்தில்? (ரா) என்குடி மனையி லேதான்.

206

ருத்: அதிகாலையில் வருவன்யான்
ரா: சரி போய்வா. ஒழி அதை
ருத்: எதனை? சொல் (ரா) வீழ்வதை!

207

ருத்: விழுவ தேதினி! எல்லாம் விற்றுப்
பழுதுறு வகை பார்க்கவே வேண்டும்
ரா: முழுமனத்துடன் நிறையப் பணம்சேர்
விழும்நம் வலையினில், விலகா தம்மான்

(ருத். மறைதல்)

208

ருத்திரன் பித்துக் கொண்டான் எனக்கினிப் படிய ளப்பான்
பித்துக்கொண் டார்களெல்லாம் எனக்கொரு புதையலாவார்
வித்தகம்பேசி ஆடி எனக்கொரு நன்மை இன்றேல்
இத்தனை நாளும் கற்ற கல்வியும் வியர்த்த மன்றோ—

209

உண்மையோ பொய்யோ ஊரார் ஒருவகை சொல்லுகின்றார்
என்மனை யவளைக் கூடி இன்புற்றான் என்பர். ஐயம்!

அன்னது உண்மை யானல் யானும்அம் முறையே நிற்பேன்
கன்றுதென் நெஞ்சம் அந்தக் கானவன் நிலையை எண்ண

210

அவன்என்னை விரும்புகின்றன் இதைவைத்தே அவனை வெல்வேன்
நவையிலாக் கச்சன் வீழ, யான்அவன் பதவி ஏற்பேன்
அவ நெறி வேட்டு ஒன்றில் பலித்தன இரண்டு ஆக
நவநிதிக் குவையும் நல்ல பதவியும் மேவ லாகும்.

211

எப்படி அவனை வீழ்த்துவ தென்பதைச்
செப்புவன். நாட்கள் சிலசெல, மெல்ல
உத்தமன் காதில்—ஒப்பிலாத் திலகம்
கச்சனே டுறவு கொள்வதாய்க் கூறவே—

212

பற்றுறும் தீ.அவன் பண்ணமை நடையும்
நற்பெரு முகமும், நங்கையர் மருளும்
மற்புய வீரமும் மலியக் கண்டவர்
மற்றிவன் மயக்குதற் குரியன் என்பரே

213

கள்ளமில் லாதவன் கானவன். கண்ணுறும்
வெள்ளைப் பொருள்எல்லாம் பாலென விள்பவன்
சொல்லுமு றையினிற் சொல்லி, அவனைக்கைப்
பிள்ளையாய் எந்த விதத்தும் திருப்பலாம்.

214

கருவுற்றது காலம் இனி
பெரும்பாவமும் இருளும் திரண்
டுருக்கொண்டுமேல் வெளியேறியே
வரும், மேல் வரும். வையம் வாழுமே!

களம் 1. முற்றிற்று.

## களம் 2. காட்சி 1.

முசிறித் துறையில் ஒரு மேடை.
(மாதேவனும் இரு பெரியார்களும்)

215

மாதே: இம்முனை நின்று பார்க்க யாதுநீர் காண்கின்றீரே?

1. உம்பரோ டிம்பர்தொட்டு நீர்மலை என்ன ஓங்கும்
கொந்தளிப் பன்றிவேறு காண்கிலேன்! கடல் கொடூரம்!!

மா: நம்பெருங் கோட்டை என்றும் இத்துணை பெரியசூறை—

216

கண்டதே இல்லை ஐய; கடும்புயல் மண்ணில் கண்டோம்.
தண்கடல் பரப்பில் இஃது தாவியதாயின் உற்ற
திண்கலம் கட்டழிந்து சிதறியே அழியும் திண்ணம்.
என்னதீ வினைசேர் கேள்வி சேருமோ நம்மை இன்றே!

217

2: கடல்ஓர் கடும்பரி: கனைத்தெழு கின்றது
பிடரி மயிர் அலை பொங்கிமேல் ஓங்கலின்
வடதென் துருவவிண் மீன்களும் மறைவன
படர் இத் துணையான் பார்த்ததும் இன்றே

218

எக்கரில் எறிநுரை எங்கினும் மிதக்கும்
மிக்கபே ரலைமேல் ஓங்கிவிண் முட்டும்.
உக்கின பகைவர்தம் படைஎனும் ஒருசொல்
இக்கணம் நம்செவி கேட்கவும் நேரும்!

219

மாதே: இப்பெருஞ் சூறையை யாவரே எதிர்த்து
நிற்கவும் முடியும்! நிலைக்களங் காணு
மக்களும் அவர்தம் படைகளும் மாயும்!
தப்புவ தரிதுயர்; தரிக்கிலர் பகைவர்.

(3-வது பெருமகன் வருகிறார்)

220

3. நன்று நன்றென் றுள்ளது நண்பர்காள்,
இன்று ஓர்மடி வெய்தினர் தெவ்வர்கள்.

பொங்கு மாகடல் பேய்வளி வீசலால்
பங்க மாயினர் பற்றலர் மாய்ந்தனர்.

221

வஞ்சி மாநகர் தன்னிலி ருந்தொரு
அம்பி வந்தது ; அஃதுடைந் துற்றது !
வந்து சேர்ந்தவர் விளம்பிய வார்த்தைகள்
இந்த நன்மொழி (மாதே) நம்பலா மோ இதை ?

222

3: கப்பல் வந்தது கண் கண்ட உண்மையே
சிற்ப யவ்வனர் செய்திறன் கொண்டது.
உத்தம கானவற் குற்ற ஓர் துணை
கச்சர் இக்கரை சேர்ந்துளார் காண்பிரே.

223

கானவ உத்தமர் கடலிடை வருவர் ; அம்
மானவ ரேஇனி முசிறியின் மேலவர் !
மா : யானிது கேட்டுளம் இன்புறு கின்றனன்.
கோன்முறைத் தகுதியர் கொள்கையர், நல்லவர்;

224

3: இக்கச்சன் பகைவர்படு இடர்கண்டு அகம்மகிழ்வான்
மிக்கபெரும் புயலுள்ள மேலவற்கா மனங்கவல்வான்
இக்காலை இறையருளால் உத்தமகா னவர்உய்ந்து
நற்கரையே சேர்வதற்கு நெஞ்சுருகி நிற்கின்றான்.

மாதே :—(தான தன்ன—தான தன்ன—தான தன்ன—தானனா)

225

வாருங் கள்நாம் கான வற்கா வாழ்த்துவோம்வா னோர்களே.
வாருங் கள்க டற்க ரைக்கு ; அன்னார் வரவை நோக்குவோம்.
நீரும்விண் ணும் நீலமாக ஒன்று பட்டுத் தோன் றினும்
வீரர் வருகை பார்த்து நிற்போம் விண்ணோர் ஆசி வேண்டுவோம்.

226

வீரன்வெற்றி மாலை சூடப் பிறப்பி லேஅ மைந்தவன்
சேர்அ வன்கைக் கீழ்உ ழைத்தே நேர்மை திறமை கண்டுள்ளேன்
சேருங்கப்பல் சேர்ந்த கப்பல் யாவும் பார்த்துக் களிக்கவே
வாருங் கள்யாம் கானவற்கா வாழ்த்து வோம்விண் ணோர்களே.

227

இன்னநேரம் ஈது நேரும் என்று கூறு தற்கில்லை.
ஒன்று பட்டு வாருங் கள்நாம் உத்த மற்கா வாழ்த்துவோம்

(கச்சிதன் வருகிறான்) கச்:—

என்ன அன்பு! என்ன அன்பு! முசிறி வாழும் வீரர்காள்!
நன்றிகொண்டீர் கானவர் பால்: கண்டு யான்ம கிழ்கின்றேன்.

228

ஓத நீர்க்கடல் உந்து பேரலை
மோத, மேலவர் முற்று மறைந்தனர்.
பூதம் ஓரிரண் டின்வாய்ப்ப டாவண்ணம்
வேத நாயகன் காக்கயாம் வேண்டுவம்'

229

மாதே: அவர்ஏ றியகலம் பலமிக் குடைத்தோ?
கச்: சுவரே பலமுறு மரச்சுவல் உடைத்து;
"இவனே திறலோன்" எனநல் லுரையால்
அவனி ஒப்புநல் மீகான் அதற்குளன்

230

பொருகடல் பொங்கிப் பூமி அழியினும்
ஒருகரை சேர்த்துயிர் உறுதி நல்குவன்.
(உள்:) ஒருகலம்! ஒருகலம்! ஒருகலம்! (கச்)
இப்பெருங்
குரலுறக் காரணம் கூறவல் லீரோ?

231

4: மக்கள் யாவரும் நகரை நீத்தனர்
எக்கரில் வரிசை யாகநிற் கின்றனர்
'புக்கது கலம்'என் றார்த்தனர், (கச்) ஆம். இங்
குற்றவர் மேலவர் உத்தமர் போலுமால்!

(பீரங்கி வேட்டு கேட்கிறது).

232

2: வரவேற்புக் குறியான
பெருவேட்டு இஃதாகும்:
வருபவரும் இதனால், நம்
உறவினர்என் றேஅறிவோம்

233

கச்: யாவர் வந்துளார் என்ற காரியம்
நீவிர் சென்றறிந் தியம்பு வீரன்றே?

2: ஏவல் ஆற்றுவன்: (மா) ஐய, நம்பெரு
மேலவர்திரு மணம்புரிந் தவர்கொல்லோ?

234

கச்: மெல்லியல் மாதுதன் முகமும் மேன்மையும்
சொல் தரத் திறங்கடந் தொளிருந் தன்மைய.
இல்லைஇவ் வுலகினில் இதனைநேர் எழிலெனும்
வல்லியை மணந்துளர்; வளங்கள் பொங்கவே.

235

அகப்பொருள் மிகப்புகல் அருந்தமிழ்க் கவிஞர்கள்
மிகமிகப் புனைந்துரை மொழினும் மேம்படு
தகவுகள் இயற்கையில் தாங்கிநிற் கின்றனள்
இகல்நிலை கடந்தவள் * யாவரே வந்துளார்?

236

2. காவலற் குரிய கட்டியங் காரன்
மேவினன்: பெயரும் ராகு என்றனர்.

கச்: சீர்வள முறஈண் டுற்றனன் சிறந்தான்—
மாவிரை வாயிவன் வந்திருக் கின்றான்.

237

ஊழிக்காற் றெடுத்து வீசும் சூறையும் உயர்ந்து மோதும்
ஆழியின் அலையும் ஓத ஊதையும் உள்ம றைந்த
பாழ்புரி குன்றும் மேடும் பண்பெழில் உணர்வ போன்று
வாளியல் கண்ணாட் கின்று வழிவிட்டு நின்ற போதும்

238

மாதே:

யார் அவள் (கச்) அன்னான் நந்தம் மேலவர் மனைவி ஆவாள்.
வீர ராகவனை யீண்டு கொண்டுசேர் வேலை ஏற்றான்.
சேர்வதா யாங்கள் கொண்ட திட்டமும் பிந்தும்: தான்ஓர்
வாரமும் முன்னதாக வந்துளான் வினைவினாலே.

* வந்த இரண்டாம் பெருமகனை நோக்கி:

## 239

உன்பெருங் கருணைவெள்ளம் உந்தலின் அவர் இருக்கும்
நன்கலம் கரையைச் சேர ; நாங்களும் சோர்வு நீங்கித்
தம்பலம் எய்த ; சேர்ந்த திலகமும் தழுவிக் காதல்
என்புளம் உருகிநிற்க, முசிறிநல் வாழ்வு எய்த—

## 240

இறைவ, நீ அருளல் வேண்டும். * யாவரும், ஆண்டு நோக்க !
கரைவந்து சேர்ந்த திலதே கப்பலின் சிறந்த செல்வம் !!
முறைமையால் முழந்தாளிட்டு முன்வந்து பணிமின் : தேவி,
நிறைவுறும் ஈசன் ஆசி, நித்திய சுகமே காண்பீர்.

## 241

திலா : என்றும் உம்பால்யான்
நன்றி மிகவுடையேன் ;
என் நா யகர்பற்றி
இன்றே யாதுரைப்பீர் ?

## 242

கச் : இன்னுமவர் வந்திலர்காண்
நன்னலத்தோ டுறைகின்றார் !
சின்னளில் சேர்வார் ; ஆம்.
திலா : என்மனமே இடர்ப் படுமால்.

## 243

ஏனோநீர் அவர்ப் பிரிந்தீர் ?
கச் : மேனோக்கி அலை குமுறி
வானோடு கடல் மோத
போனோம்ஒவ் வோர் திசைக்கே.

## 244

உட்புறம்: ஒருகலம் ! ஒருகலம் [s] (க) சற்றே கவனியும் !
(2) ஒருகலம். வருபவர் உறவினரேதாம் !
மரியா தைமுறை வேட்டுவிள் கின்றனர்
கச் : அறிந்துமீள் வீர்கொலோ? (2) அவ்வாறுற்றுவேன்

* திலகவதி, விமலா, ராகு, ரத்தின கோட்டி, ஊழியர் வருகின்றனர்
S பீரங்கி வெடி கேட்கிறது.

245

வருக வருக நற் கட்டியங் காரரே,
வருக வருக நல் விமலா தேவியே,[S]
முறைமை மரபினை மீறினன் ; ராகு,
பொறுமை பெரிது உளம் புண்பட வேண்டா

246

மெய்ம் மைசேர் பிறவியின் மேன்மையின் துணிவிது!
(ரா)ஐய, யான் அவள்பெரு வாய்வளம் அறிந்துளன்
கைவளம் காணுறின் கலங்குவை : உண்மைகாண்
(தி)பொய்! அவள் வாயினைத் திறப்பதே இல்லையே

247

ரா : யான் உறங்கினும்
தான் உறங்கிலா
நா நலத்தினள்!
ஏன் இம் மௌனமே!

248

தேவி,* சந் நிதி இது:
நாவெளிப் படாது ; உள்
மேவி, என் மேல் பல
கேவல வசை சொலும்

249

விம: என்னகா ரணம் நீர்
இன்னவா றுரைக்க!
முன்னம் யான் வசைமொழி
சொன்னதுண் டோகாண்?

250

ரா :

வண்ணஓ வியங்க ளாக வீதியில் தோற்றம். மாதர்
வெண்கல மணியே போன்று மனையினுள் ஓலம் செய்வார்
பண்ட மாரிடத்தில் காட்டுப் பூனையு மாவர். யாதும்
கண்டறியாதார் போன்று பழியினிற் சாது போல்வார்.

---

* திலகவதியார்.

S இருகரம் பற்றித்தூக்கி அஞ்சலித்தல்.

251

வெகுளியில் பேய்ாய் மாற்றம், மனையறம் விளையாட்டாகும்.
சுகமுறப் பள்ளியில்தாம் சுறுசுறுப்பாக ஊக்கம்
(தில) மிகமிகப் பேசவேண்டா : வெற்றுரை ஏனோ ? சீ ! சீ !
(ரா) பகர்ந்தது உண்மை, இன்றேல் பகைவனுப் படுத்தும்
என்னை !

252

விளையாட முன்வருவார் வேலைஎனின் படுத்திடுவார்.
வி: விளக்கிஎன் புகழ்மாலை நீர்விரிக்க வேண்டாவே !
ரா: விளக்கியான் விரிக்காத வகையேநீர் ஒழுருகவே
தி: வளமான புகழ்மாலை எனக்கியாது ? வாய்விள்வீர் ?

253

ரா: என்னைநீர் இதனைக் கேளீர் : அம்மணீ எனது உள்ளம்
புன்மையே காண்பதன்றிப் பெருங்குணம்நோக்காதென்றும்
தி: முன்னரே ஒருவர் ஆண்டுத் துறைமுக நிலைமை காணச்
சென்றுளார் அன்றோ. (ரா) ஆமாம் சென்றுளன் அம்மா
முன்பே.

254

தி:

சிந்தையிற் சிறிது தேக்கம், ஆயினும் செயலில் காட்டேன்
முந்தைநேர் முறையே நிற்பேன், மற்றுஎன் புகழ்மா லைநீர்
எந்தவா றுரைப்பீர்? (ரா) அஃதே எண்ணியான் நிற்கின்றேனல்:
விந்தைசேர் வாணி யன்றோ வாய்திறந்துதவ வேண்டும்.

255

புள்ஒட்டு ஈர்த்து நிற்கும் பான்மையில் கவிதை யூகம்
உள்உற்ற மூளை பற்றி உயர்வுறும்: உதித்த தொன்று :—
ஒள்ளிழை மாத ரார்தம் அறிவொரு கருத்தா வாக
நல்லெழில் கருவி யாக்கி நலம்பெறு வார்க ளன்றே!

256

தி) நன்று ! நன்று !ஓர் கரியவள் மிகமிக நல்லறி வுற்றன ளாயின் ?

(ரா)

அந்த நல்லறி வின்துணை யாலவள் அரியஓர் வெண்மையை நாடும்!
தி) என்ன என்னகே வலமொழி பிதற்றுதல்! (வி) எழில்பெற்று
அறிவற்று ளாயின் ?

(ரா)இங்கிலத்துநல் எழிலுற அறிவிழந் திருந்தவ ளேகிடை யாதே

257

மக்களைப் பெறுகின்றுரை மதியிலார் ஏன்ன லாமோ
தி. வெட்கம்! சீ,வெட்டிப் பேச்சு! வெறியர்கட் காகும் இஃதே!
நற்கவின் அறிவிரண்டும் கொண்டிலாள் பெருமை யாதோ?
ரா: பொற்பறி விரண்டும் கொள்ளா முறையினிற் பெண்ணே இல்லை

258

இல்லா தவளும் இருப்பவள் செய்யும்
பொல்லாப் பெல்லாம் புரிகுவள்: உண்மை!
தி: நெல்லும் புல்லும் நிகரெனக் கூறும்
புல்லறி வாண்மை! வேறென் பகர!

259

பற்றலர் புகழும்
நற்குணம் நிறையும்
உத்தம மாதை
எப்படிப் புகழ்வாய்?

260

ரா: அழகின் பேருரு: அகந்தை அறியாள்:
பலகலை தெரிவாள்; புனைகலை விலகாள்;
அயலார் செவியுற ஒருசொல் உரையாள்:
பொன்வளம் உடையாள், டம்பம் படையாள்:
இல்லா ஒன்றை எண்ணி அவாவாள்:
உள்ளதே போதும் என்றுள் ளுவப்பாள்:
சொற்றபுன் வஞ்ச சினமெழுங் காலைக்
குற்றம் உணர்வாள், கொடுமை அகற்றுவாள்:
அறிவின் திறத்தாற் புரிவதாய்க் கருதித்
தாலியை அழித்துப் பீலிசெய் கில்லாள்.
உணர்வாள் பலவும் புகலாள் சிறிதும்;
விடர்பலர் தொடர்வது தெரிந்தும் திரும்பி
நோக்காள்: இத்தகைச் சிறப்புடை ஒருத்தி—

(தி) ஒருத்தி உளள்எனின் எதற்கவள் உரியள்?

(ரா) பற்பல குட்டிகள் ஈன்றுபால் கொடுக்கவும்
உப்பு புளிக்கணக் கெழுதவும் உரியளே!

261

தி. வடிகட்டி—எடுப்பித்த
அடிமண்டி—விடையீதே

262

சேயிழா அய் விமலா உன்
நாயகனே ஆனாலும்
நீ அவரின் முறைகொள்ளேல்.
வாய் அவச்சொல் ஆகாதே!

263

கச்சரே, உமது—சித்தமும் யாதோ?
துச்சபுன் மொழியால் - பித்துறல் நன்றோ?

264

க. வந்தவாறுவாய் விளம்பினன்!
வண்டமிழ்நூல் வளத்தினும்
கொண்டகைவேல் வரிசையே
கண்டுநீர்உளம் களிக்கலாம்.

(கச்சிதன் திலகவதியுடன் பேசி நிற்கிறான்)

ராகு. (அயலில்)

265

அங்கையைப் பற்றுகின்றான் மற்றமொழி பேசுகின்றான்
இங்கிது எற்குப் போதும்! இச்சிறு வலைவிரித்தே
நன்குஇக் கச்சன் வீழ வகைசெய்வேன்: சிரிக்கின்றாயோ
உன்சிறு சிரிப்பே உன்னை வீழ்த்திடும் பாசமாம், பார்

266

உண்மையை உரைக்கின்றாராம்! உண்மையை உணர்வேன் இந்த
உண்மையைக் கொண்டேஉந்தன் பதவியை ஒழிப்பேன் காண்பாய்
விண்டது பதவிஎன்னின், என்செய்வீர் விரலைப் பற்றி
நன்மகன் போலநிற்க! நயப்பின்னும் நீங்கவில்லை!

267

எட்டிய மட்டுமின்று பார்க்கின்றாய்: எதிர்காலத்தில்
'எட்ட யான்நின்றேனில்லை' என்றுநீ கவல்வாய், உண்மை!

விட்டகலாது,மிக்க வார்த் தைகள் பேசுகின்றாய்!
தொட்டனை, இதுதான் நீயைத் தொட்டதாய் மாறல்காண்பாய்

268

(ரா) கானவர் வருகிறார் காளம்கேட் கின்றது!!
(க) ஆம் இது உண்மை! (தி) அவரை எதிர்கொள
யாம் அதி சீக்கிரம் ஏகுவோம். (க) ஆண்டே
கோமகன் வருகிறார்!! (உத்) * குணப்பெரு வீரர்!!

269

தி. அன்புசால் அண்ணலே!
உ. முன்னரே வந்து நீ
கன்னியைக் காணஈண்
டென்னுளம் மகிழுமால்!!

270

உயிரின் உள் ஒளியே எந்தன் உள்ளமார் திருவே யாண்டும்
புயலின்பின் தோன்று இன்பம் இத்துணை பெரிது என்றால்,
இபமனை எழுப்பும்வேகக் கொடும்புயல்; மற்றுமேரு
உயரமாய்த் தோன்றி உற்ற கலங்களை உடைத்து வீசிப்—

271

பாழ்செயும் அலைகள் போன்ற யாவையும்போற்றி ஏற்பேன்.
வீழ்தரு மென்றோள் சேர்ந்து நிற்றலின் வேறே தின்பம்!!
ஊழ்வலி அழிவு நேரும் என்னினும் கவலேன். என்னை?
வாழ்வின்பே ரின்பமெல்லாம் இன்றுபெற் றுள்ளேன் அன்றே!

272

இன்றுயான் பெற்றஇன்பம் கிட்டுமோ இனியும் வாழ்வில்!
(தி) நம்பெரு நாளேபோல இன்பமும் திருவும் ஓங்க,
என்றும்நீ தின்றிவாழ இறைவனே அருள வேண்டும்.
(உ) விண்ணுள தெய்வங் காள்,எம் வேண்டுதல் கேட்டருள்வீர்.

273

இன்பவா ரிதியில் மூழ்கி இருக்கின்றேன். பேசி ஆவ,
தொன்றுமே இல்லை மேலும் பேசவும் ஆற்றேன், இன்பம்!

* முத்தமிட்டான்.

நன்றிது, நன்று * இஃதே நமக்கிகல் பிணக்காய் நிற்க!
(ரா) கின்னரம் வாசிக் கின்றார் கிளிமொழி பாடற் கேற்ப!

274

இந்நல் இ ராகு
இன்னலி னாலே
கின்னர கீதம்
பின்ன னுறும் :பார்!

275

உத் :

அன்பர்காள் பகைவர் எல்லாம் ஆழ்ந்தனர் கடலுள், போரும்
நின்றொழிந்ததுவே. முந்தை முசிறியின் நண்பரெல்லாம்
நன்குவாழ்கின்றார் கொல்லோ? நாம்இனிச் செல்லலாமே!
நன்மலர்த் தேனே எந்தன் செல்வமே கரும்பே கேள்நீ—

276

மிக்கபற் றுடையார்இந்த முசிறியின் மக்கள் என்மேல்.
நிச்சயம் அவர்கள் உன்பால் நேசமேகொள்வர்! ஏ! நான்
பித்தனைப்போலப் பேசி, பிறரையும் மறந்து, என் சு
கத்தையே எண்ணிநின்றேன்: ராகு,நீ செய்க லொன்று :—

277

கப்பலில் எந்தன்
பெட்டிகள் இருப்பன :
மற்றவை கள்ளண்
டுற்றிட வேண்டும்.

278

மிக்க வல்லவன்
கப்பல் மா லுமி!
எப்பரி சும்பெறத்
தக்கவன் அவனையும்—

2/9

கொண்டு வருக ;என்
கண்ணே, திலகமே,

---

* திலகத்தை நோக்கி.

பண்டுசெய் நல்லறம்
ஒன்றுகூ டினம்யாம்!

(உத், தில, பிறர் மறைதல்)

280

ரா. விரைவினில் வருக, ஆங்குத்
துறைமுகத் தென்னைக் காண்க.
திறமிகு ஆண்நீ ஆனால்
உரைக்கிறேன் ஒன்று, கேள்நீ.

281

மனத்தினிற் காதல் கொள்வார் பெருமித நடைமேற் கொள்வார்.
துணைப்பதி இன்று கோட்டைக்காவல்செய் கடமை பூண்டான்.
உனக்கொன்று சொல்லவேண்டும். திலகமும் அவன்மேல் காதல்!
(ரு) நினைக்கவே முடியாதிஃதே! அவனையோ காதலித்தல்!!

282

ராகு :—

கைகொண்டு வாய்பொத்தி என்மொழியைக் கருத்திற் கொள்,
பொய்ப்பட்ட கதைகள்பல புழுகிநின்ற கானவன்சொல்
மெய்யென்றே அவள்நம்பி மோகித்தாள். அவ்விருப்பம்
ஐய, பின்னும் நிலைக்குமென்று நினைத்தாயோ? நிலைக்காதே!

283

கண்ணிறைந்த பேரழகில் கன்னியர்தம் மனஞ்செல்லும்,
மண்பூதக் கானவனில் மகிழ்வுறுமோ அவள் நெஞ்சம்
உண்டான குறுகுறுப்பு ஓய்ந்தவுடன், உயர்நெறியில்
ஒண்மை,உரு, வயதொழுக்கம் ஒத்துள்ள துணைநாடும்

284

பேதைக் கானவன்
யாதும் பெற்றிலன்!
காதற் கன்னிகை
வேதனைப் படுவள்!!

285

கோமள மேனியள்
ஏமாந் தவளாய்த்

தான் அய லான்மேல்
காமுறல் இயற்கை.

286

கேவலம்! இதுசிறு காரியம். உலகில்
யாவரும் கண்டறி உண்மையே ஆகும்!
மேவரு முறையில் மங்கையை மருவ
வாய்வல்ல கச்சன் வாய்ப்புடை யவனும்:

287

நவநா கரிகன்,—தவவே டத்தில்
பவமே புரியும்—கயவன்; கடையன்;

288

பட அரா—விடத் தினன்:
அடி படான்:—பிடி கொடான்;

289

படியினிற்—கொடியவன்:
இடமறிந்—தடிப்பவன்!

290

காரியசித்தி காணக் கதைசில கட்ட வல்லன்!
சீரியல் அறியாப் பேயன்; சகத்தியல் அறியாப்பேதைக்
காரிகை யார்தம் நெஞ்சம் கவர்வடிவழகன்: பால்யன்,
நாரியும் அவனைத் தேர்ந்தாள்! நரம்பெலாம் தீய ரத்தம்!!

291

ருத். செந்திரு அவள்! இதை
நம்புதற் கிலன் யான்.

ரா. நன்கலத் துடைப்பம்!
உண்பது சோறே!

292

கானவனைக் காதலித்தாள் கற்புடையாள் ஆவதெங்ஙன்?
தேனமர்ந்த பொறியுண்டை! ஈஎல்லாம் இதில் கூட்டம்!
ஏன் அவன்கை இவள்தொட்டு நெருடுதல்? நீ காணவில்லை?
(ரு) யானதனைக் கண்டேன் அஃ துபசாரம், ஒப்பனையே,

293

ரா:

அன்று, அன்று: கயமைஎன்று கையடித்து யானுரைப்பேன்
மன்மதனீ லைப்படல நான்முகம்இக் கையிணைப்பு!
ஒன்றைஒன்று ஒட்டிநிற்பர்! உயிர்ப்பிரண்டும் ஒட்டிநிற்கும்!
மென்மொழியில் வாயினுள்வாய் மோருவபோல் பேசுகின்றார்!

294

தேகம்மிக அண்மிச் சிரித்துச் சிறப்புற்றால்
போகக் கனிநன்கு பழுத்தது போலாகும்
ராகு உனைவஞ்சி நகரினின் றிங்குசேர்த்தேன்.
ஆக எனதுசொல்லை நீஏற்று நடத்தல்கடன்.

295

இன்றுநீ கோட்டைக் காவல் இயற்றுக. அதற்கேற் பாடு
நன்குயான் செய்வேன். அந்தக் கச்சனும் அறியான் உன்னை.
வன்பழி கூறி, இன்றேல் வாய்மொழி உரக்கக் கத்தி
எந்தவி தத்திலேனும் இடர்புரிந்தவன்சி னத்தைக்—

296

கிளப்புக. (ரு) பின்னர்? (ரா) அந்தக் கீழ்மகன், அறிவிலான்கை
கலக்கவும் வருவான், வரநீ காரியம் எல்லாம் செய்க.
பலப்பெரு முசிறி மக்கள் பலரையும் எழுப்பி ஆங்கே
கலகமும் செய்ய வைப்பேன்: கருமமும் கைகூ டிற்றும்!

297

கச்சனை ஒழித்தா லன்றிக் கருத்தினில் அமைதி காணார்
உத்தம முசிறி மக்கள் என்பதும் உறுதி யாகும்!
மற்றவன் ஒழிவான் உந்தன் மனம்மணம்பெற்று வாழச்
சிற்சில வகையான் சொல்வன்; சித்தி நீ எளிதில் காண்பாய்.

298

அடைகல்லாய் நிற்கும் கச்சன் அகல்கிலான் என்றால் யாதும்
நடைபெறுதியாமும் நன்மை காண்பதற்கில்லை. ஐய.
ரு)கிடைக்கும்நற் பயன்என் றால், நீ சொல்லிய படியான் செய்வேன்
ரா)தடையிதில் என்ன? தக்க வகைஎலாம் உதவிசெய்வேன்!

299

துறைமுகத்தில் அவர்பொருளைக்
கரைசேர்க்கச் செல்லுகிறேன்.

விரைவாக நீவந்து
அரணருகில் எனைக்காண்பாய்

## (இசை—சிந்து மெட்டு)

### 300

கச்சன் திலகத்தைக் காதலிக் கின்றது
கண்கண்ட ஒரு உண்மையே—அந்தக்
கன்னியும் கச்சனைக் காதலிக் கின்றதாய்
எண்ணவும் இட முண்டங்கே.

### 301

கானவன் நல்வாழ்வைக் காணஎன் உள்ளமும்
நோகுதே மிக வேகுதே.—அவள்
கொள்ளும் பெருங்குணம் உள்ள உறுதிகாண்
திலகமே விட்டு விலகுமோ!

### 302

உலகில்லெல் லாருக்கும் திலகம்எந் நாளும்நற்
கரும்புதான் யானும் விரும்புவேன்.—அது
காமத்தினலன்று ஆயினும் அக்குற்றம்
சேரவே ஓர்நாள் மாறலாம்.

### 303

—கண்ணிகள்—

என்மனையுள் எருனன் எனஎழும்ஓர் ஐயம்,இதை
உன்னஉன்ன உளம்பற்றி எரிகிறது, ஒய்வின்றே!

### 304

மனைக்குமனை பதில்அழித்து மாறுபழி கண்டன்றி
மனம்திருப்தி அடையாது, அடையவுமே கூடாது!

### 305

நஞ்சுற்ற நெஞ்சத்தேன் இதற்காற்றல் படைத்திலனேல்
சிந்தைகலக் குறவைப்பேன் சேயிழையாள் கற்புபற்றி.

### 306

எந்தவிதத் தும்தெளியான் இடர்ப்படுவான் கானவன்உள்
அந்தநிலை கண்டபின்பே என்இதயம் அமைதியுறும்!

307

வேட்டைக்கு ஏற்ற தாகும் வஞ்சியின் வந்த கோட்டி!
ஆட்டிய படியேஆடும். கச்சனைக் கவ்வி வீழ்த்தும்.
ஓட்டத்தில் விட்டுஅஃதைத் தொடர்ந்துயான் நின்றுகொண்டே
கோட்குற்றம் கச்சனின்மேல் கானவன்பால் மூட்டவேண்டும்.

308

இரவில்என் உடையைக் கச்சன் அணிமர்மம் ஏதோ என்பேன்.
கரவறியாதநெஞ்சக் கானவன் கழுதை யாகி;
விரகறி வித்தேன்'என்று வந்தனம் செய்து, நல்ல
பரிசுகள் தரவும் வைப்பேன். பம்பர மாவான் என்கை.

309

இயக்குவ தெல்லாம் இஃது *
மயக்கமும் பெரிதே இன்று.
கயவரும் மக்கள் ஒப்பார்
செயலிலே காண வேண்டும்!

## களம் 2. காட்சி 2. தெரு.

வள்ளுவன் பறை அறைதல்: பலர் தொடர்கிறார்.

310

வள்: சேனைக் கதிபதி மானக் குரிசில்
உத்தமர் ஈண்டறி விப்பது யாதெனின் :—
பற்றலர் படைகள் முற்றும் அழிந்ததாய்ப்
பெற்றனம் செய்தி ; வெற்றிகொண் டாடுவீர்!
ஆடுக கூடுக அருங்கவி பாடுக!
வானம் இலங்க வாணம் ஏற்றுக!
மாந்தர் யாவரும் தாந்தாம் விரும்பும்
முறையினில் விழாவை நிறைவுறச் செய்க!
வெற்றி விழாவொடு மற்றொன் றுள்ளது.
இந்நாள் தலைவரின் திருமண நன்னாள் :
விழாநலங் காண அவாவினர் தலைவர்!
அரண்மனை நிலயந் திறந்திருப் பனவே!
உறைமணி ஐந்து, பதினொன்ற ரையாம்
வரையும் யாவரும் வரைமுறை இன்றி
உண்டு களிக்கலாம் என்றுளார் தலைவர்.
முசிறியை, முசிறியின் தளபதி உத்தமர்
தம்மைநம் கடவுள் நன்குகாப் பாற்றவே!

* (மூளை)

## களம் 2. காட்சி 3.

(உத்தமர், திலகவதி, கச்சிதர், பணியாளர் வருதல்)

311

உத் : கச்சித, இன்றுநீ காவலை மேற்கொள்.
ஒப்பனை மீறிய உண்டாட் டொழித்து
இச்சகம் போற்ற இதமே புரிவாம்!
கச் : அப்படி யேயான் ராகுவி னிடமும்—

312

அறிவித் துள்ளேன் புரியவேண் டியதை.
இரவெலாம் யானே நேரில்மேல் பார்ப்பேன்
உத் : அரியவன் ராகு! அதிகாலை யில்நாம்
இருவரும் சந்திக்க வேண்டும் கச்சித,
பிரியஎன் திலகமே, வா,நாம் போகலாம்.

(உத், தில, ஏவலர் மறைதல். ராகு தோன்றுகிறான்)

313

கச். அப்பனே ராகு,வா.வா. ஏகுவோம் காவற் கங்கு.
ரா) இப்பொழுதென்ன? மணிதான் இன்னும்பத் தாகவில்லை.
நற்பெருந் திலகஇன்பந் துய்க்கவே தலைவர் நம்மை
அப்புறப் படுத்திவிட்டார்: அதில் என்னகுற்றமில்லை.

314

கச் : நல்லஓர் உத்தமி. மாபெரும் உத்தமி!
ரா : எல்லாம் விளையாட் டெனக்காண் மடவாள்!
க : பொல்லாப் பறியாப் புதுமையள் இளமையள்
ரா : நல்லாள் கண்உறு நோய், அருமருந்து

315

கச் : திருந்திய நெறிநில் தீதிலா மருந்து.
ரா : முருந்துறழ் மூரல் சிறுவாய் திறப்பின்
விரும்பா தியாரே வாளா விருப்பர்!
கச் : நிறைந்தநற் குணத்துச் சிறந்தஓர் பெண்அவள்

316

ரா : மணமக்களுக்கே மங்களம் பெருகுக!
துணைப்பதி வாரும், முசிறித் துறைவாழ்

கனவான் களும்உளர்; கானவர் ஓங்க
மனமகிழ்ந் தியாமே நன்மது அருந்துவம்!

317

கச்: இன்று வேண்டா. இராகு, ஒன்றுகேள்.
என்றும் மதுஎனக் கொவ்வா தாகும்:
அன்பின் அறிகுறி யாக,நீ வேறு
ஒன்றுகா ணுதியேல் நன்ரு கும்மே.

318

ரா: அன்னர் நமக்கு மிகவேண் டியவர்
இன்றே சற்றே நீகை தொடுக;
உன்நா மத்தால் யான் அருந் துவன்காண்.
கச்: முன்பே ஒருமுறை முடித்துளேன்: அதுவும்!

319

தண்ணீர் கலந்துஒரு
கிண்ணம் மது இன்று
உண்டேன், அக்கிரக்கம்
கொண்டே நிற்கின்றேன்.

320

அருந்தும் ஆற்றல் பெற்றிலேன்,
வருந்தித் திணிக்க வேண்டாம் மேல்.
ரா: விருந்து வந்தார் விழைகின்ருர்,
சிறந்த களியாட் டிராவிது!

321

கச்: என்னநீ சொல்லு கின்ருய்?
எங்கிருக் கிருர்அ வர்கள்?
ரா: அங்குஅவ் வாயிற் பக்கம்,
இங்கவர் தமைஅ ழைப்பீர்.

322

கச்: உன்நிமித்தம் அழைக்கின்றேன். *
ரா: முன்னமேதான் குடித்துள்ளான்!
இன்னமும்மேல் ஏற்றிவிட்டால்
தன்வயமெல் லாம் இழப்பான்.

---

* அகல்கிருன்

323

கன்னியர்கை நாய்போலக்
கன்னுபின் ஞபிதற்றி
பின்விளைவைத் தான்உணரான்,
முன்னுப்பூ சல்கொள்வான்:

324

பத்தினி திலக மீது கொண்டபைத் திபத்தால் பேதை
ருத்திரன் தலைகிழாக நடக்கிருன்: அவளை வாழ்த்திப்
பற்பல மொந்தை சாத்திப் புகுந்துளான் காவல்கூடம்.
மற்ருெரு வினையும் செய்தேன்: அதுஎந்தன் மதியின்வன்மை!

325

மூசிறி வாழ்பவர்: மூவர் இளைஞர்கள்;
அயர்வுரு தவர்; ஆக்கநல் லூக்கத்தர்:
உயிரின் மேலதாய் மானவே ஓம்புநர்
புலிஎ னத்திரி போர்த்திறங் கொண்டவர்

326

உச்சிவரை இவர்களுக்கும் மதுவை யூட்டி யுள்ளேன்,
இக்குடிகா ரர்களெல்லாம் இன்று காவல் செய்ய
நிற்கிருர்கள். இவர்கள் மனம் நோவுபெற ஓர்சொல்
கச்சன்சொல்ல வைப்பதுவே என்கருமம் ஆகும்.

327

வருகின் ருர்!யான் கருதிய படியே,
இடம்பொருள் வாய்ப்ப நடைபெறு மாயின்;
ஆற்றின் வெள்ளமும் காற்றின் வேகமும்
கொண்டுஎன் கப்பல் என்றும்நேர் செலுமே

(கச்சிதன், மாதேவன், பெருமக்கள்,
மதுவுடன் பணியாள்—வருகின்றனர்)

328

கச்: கடவுளே சாட்சி! மிஞ்சிய குடியால்
மடமட வென்றே மீறுதே போதை!

ரா: கிடைக்கவே கிடையா. பாதிதா னும்நீர்
குடிக்கவும் இலை. யான் கூறுவ துண்மை.

## 329

(இசை 319—331 வரை)

ரா: கொண்டுவா மது
கொண்டுவா

(தன்ன தன தன்ன தானன—தன)

தட்டிக் கொட்டி இத் தண்ணீர் போடுவோம்—மிகத்
தாராள மாய்க்களி—ஆடுவோம்.

மானிடன் ஆவான்போர் வீரனே—ஒரு
சாண் அள வாகும் உயிர் நீளமே.
குடித்துக் களித்து வீரன் ஆடுவான்!—நீ
கொண்டுவா, மது பையா, கொண்டுவா

## 330

(தன்ன நன்ன நான தன்ன நன்ன நான—இசை)

கச்: மிக்க நல்ல பாட்டு, தெய்வ மறியச் சொன்னேன்

ரா: திக்கு எல்லாம் புகழும் திருநெல்வேலிப் படிப்பு!
சொக்கத் தங்கம் போல உயர்ந்தபெருங் குடியர்:
நிற்க முடியாது யாரும் அங்கெ திர்த்து!

## 331

கச்: பாண்டி நாட்டார்குடியில் பிறங்குகின்றார்! மற்றோர்?

ரா: மாண்டுபோவான் சேரன், சோர்ந்திருப்பான் சோழன்.
ஊர்ந்துவிலகும் தொண்டை. மதுகை ஏந்தும் பாண்டி.

கச்: மாந்து வோம்நாம் மதுவே தளபதி நலம் வேண்டி

## 332

மாதே: மிக்க பிரியம் எனக்கு: யானும் சேர்ந்து களிப்பன்.
தக்க முறையில் நிற்பேன். யாருக் கும்பின் வாங்கேன்.

## 333

ரா: மிக்க கன வானே—சு
தீப மன்னன் தானே. (Stephen)
சட்டை ஒன்று தைத்தான்
ரூபாய் மூன்று தானே
தையற் கூலி எட்டு—அணா
அதிகம் என்றே திட்டி

நின்ற அவனே பெரியன்!
என்றும் நீயே சிறியன்.
மமதை கொண்ட நாடு—அது
மண்ணாய்ப் போகும் பாரு.
பழைய உடையைப் போடு
மதுவை மாந்திப் பாடு மது! மது!:

334

கச்: முன்னர் சொன்ன பாட்டை—விட
முற்றும் நல்ல பாட்டு!

ரா: இன்னும் ஓர்மு றையான்—இதை
இயம்பு கின்றேன் கேளும்!

335

க: வேண்டா இந்த வேலை;—கொண்ட
வினைக்குத் தக்க தன்று!
ஆண்ட வன்மே லுள்ளான்—அவன்
அருள் பெறும்உயிர் சிலவே!

336

ரா: ஆமாம்; முற்றும் உண்மை!—(க) அறிவின்
பெரியோர், தலைவர் யார்க்கும்.
யானோ பிழைப்பட் டில்லேன்—இதனால்
இறைவன் அருளுக் குரியேன்.

337

ரா: யானும் அருளுக் குரியன்!—(க) ஆமாம்:
ஆனால் எனக்குப் பின்பே!
ஏனோ? கேள், தலை இன்றி—எங்கும்
வாழுக் கிடமே இன்றே!

338

வேண்டா இந்தப் பேச்சு
வினையாற் றுதற்கே செல்வோம்
ஆண்டவ எம் பாவம்
அனைத்தை யும்பொறுத் தருள்க

339

வாரீர் நாமும் இனிமேல்
காரி யத்தைப் பார்ப்போம்.

வேறு எண்ண வேண்டா!
வெறிகொண் டில்லேன், யானே

340

இதோஓ கட்டியங் காரன்;
இதுஎன் வலக்கை; இடக்கை;
மதுவெறி யில்நான் இல்லை
எது எது என்று அறிவேன்

341

நேரே நிமிர்ந்து நிற்பேன்!
சீராய் வார்த்தை சொல்வேன்!
யாவரும்— ஜோராய்ச் சொல்கின் றீரே!
கச்: ஒரும்!'குடி'என் றுரையீர். (அகல்தல்)

342

மா. காவல்மாடத்திற் சென்று கடமையை ஆற்ற வாரீர்!
ரா. நீவிர்நன் கறிவீர் கொல்லோ? இவனை.மீண்டயல்சென்றனை?
மாவலி யுடையன்; ராஜ ராஜனே என்னத் தக்கான்!
ஏவல்மேன் முறையின்,சேனை நடத்தலில் இணையில் வீரன்

343

இத்துணை வீரற்குற்ற குறையினைச் சற்றே கேளும்!
சுற்றுலைத் தட்டுபோல நன்மையும் தீமை யுந்தான்
ஒத்தநில் நிலையிற்கொண்டான்; என்செய்வோம் இரங்கத்தக்கான்
உத்தமன் இவன்மேற்கொண்ட பற்றினுக் களவின் றாக.

344

சித்தநற் றெளிவில் லானுய் முசிறியின் மக்கள்சீற
எத்தினத்தேனும் யாதும்இயற்றினுல் என்னும் என்றே
மிக்கவே தனைகொள் கின்றேன்.(மா)இஃது* எப்போதுமுண்
ரா:நித்திரை என்றும் இந்த நெடுவெறி கண்டேதோன்றும்![டோ?

345

மதுவெறி எனும்தா லாட்டே மைந்தனுக் குறக்கம் நல்கும்.
அதுசரி இல்லையென்றால் அந்தியுன் பகலே ஆகும்!
மா: இதனைநம் தளபதிக்கு எடுத்துரைப் பதுவே நன்றும்.
பதிஇதை அறியார்போலும் நன்பெருங் குணத்தால் ஐய,

* குடி.

## 346

பெருமையை எடுத்துக் கச்சன் சிறுமையை விடுத்தார் கொல்லோ?
இருக்கலாம்!(ரா)ருத்ரகோட்டி, நீதுணைப் பதியின் பின்செல்.
(மா) பெருமித, தனக்கடுத்த, பொறுப்புள்ள பதவி ஒன்றைச்
சிறுகுணத்தொருவன் மீது சுமத்திய தொழுங்கன் றுமே.

## 347

இதனைநாம் கானவன்பால் இயம்பலே அறம தாகும்.
ரா: அதற்குயான் ஒவ்வேன் நீர்இத் தீவினை அளிப்பீரேனும்,
இதமுறு நண்பன் கச்சன்! என்றும்யான் அவன்கொள் குற்ற
மதுவருந் துதலை நீக்க முயலுவன். என்ன, சத்தம்!?

## 348

குத்: யாரும் இல்லையா? ஐயோ ஐயோ, (இவனைத்துரத்தி)
கச்: அயோக்கியப் பயல்,போக் கிலிப்பயலே!
மா: யாது நடந்தது துணைப்பதியே?
கச்: எனக்கிவன் கடமை கற்பிக்கிறான்!

## 349

பேயன்! கபவன்! முழுஉடம்பும்
கொழுக்கட் டையுறப் புடைத்திடுவேன்
குத்: நீபோ, அடி! உம்!(க) வாய்வேறு?
நெறிஅறியாப் பயல்,பிதற்றுகிறான்(அடிவிழுகிறது!

## 350

மா:
நிறுத்தும் நிறுத்தும் துணைப்பதியே. அடிக்கவேண்டா. நிறுத்தும்நீர்

க:
இரும்நீர். சும்மா இரும்;இல்லை! உமக்கும் தலைமேல் விழும், ஆமாம்

மா: வெறிகொண் டுள்ளீர்: என்செய்வீர்!(க)வெறியா? என்ன
[சொன்னாய்நீ *
ரா: தெருவில் போய்நீ'கலக'மென்று கூக்குரலிட்டே அறிவிப்பாய்.

## 351

வேண்டாம்; இது! துணைப்பதீ,
வேண்டாம், பெரியோர்களே,

* கலகருண்.

வேண்டாம், மா தேவரே,
வேண்டாம், பெருந் தலைவர்காள்,

352

காவலோ புரிகின்றீர்கள், அதன்முறை நன்று நன்று!
யாவனிம் மணி அடித்தான்? இடர்இனி விளைவதாகும்!
மேவுவார் முசிறிமக்கள், மாய்கிலாப் பழியால் நீயே
கேவல மடைவாய்; கொண்ட கலகத்தை விட்டு நிற்பாய்.

(உத்தமர் ஊழியருடன் வருகிறார்)

353

உற்றது யாதோ ஈண்டு?
மா : குற்றுயி ராகும் வண்ணம்
முற்றப்பு டைத்தான் ஐய,
ரத்தப்பெருக்கைப் பாரும்!

354

உத்:
அமைதி, அமைதி, உயிர்வாழ ஆசைஇருப்பின் அமைதியுறும்!
ரா: அமைதி! பதியே, யாதேவீர், அரியீர், பெரியீர், நீங்களெல்லாம்
தமது கடமை இடம்ஏவல் யாவும் மறந்தீர்! நாணிழந்தீர்,
நமது தலைவர் பேசுகிறார், அஃதும் அறியீர்: அமைதியுறும்!

355

உத்: ஈண்டிது நேர்தற்குற்ற காரணம் யாதோ? முன்னர்
ஆண்டவன் அருளால் மாய்ந்த பகைவர்கள் நம்மை வாட்ட
மீண்டனர் என்ன, நாமே மிலைச்சராய் மாறிநின்றோம்!
மாண்புறு மக்கள் மானம் அழிப்பன செய்து வாழார்!

356

தன்பெருஞ் சினத்தாலேனும் கத்திகை தூக்கி நிற்போன்
இன்னுயிர் வாழான் திண்ணம்; இறுதியே காண்பான் ஆண்டே!
வன்மணி நிறுத்தற் கென்னே! தீவினில் வாழ்வார் தங்கள்
சிந்தையைக் கலக்கும்! ஈண்டு நேர்ந்தது யாதோ சொல்வீர்.

357

உயிரினை வெறுத்தான்போன்று வாடியே ஒதுங்கி நிற்கும்
செயிரிலா ராகு, இஃது செய்தவர் யாவரோசொல்?
பயில்வதற் குரியன் என்றேகேட்கிறேன்: பகர்வாய் உண்மை,
ரா: இயம்புதற்கியா திமில்லை, ஒன்றும் யான் அறியேன் ஐய.

358

மயல்மண மக்கள்போல யாவரும் மகிழ்ந்து பேசி
நயமுற நின்றார் இன்னே: நன்னெறி யில்லாத் தீக்கோள்
வயத்தினர்போல ஏனோ வாளினை உருவித் துள்ளி
அயல்அயல் மார்பில்தாக்கிப் பழிபுரி நிலைமேற்கொண்டார்.

359

சிறுவினை இதுவந்துற்ற காரணம் தெரியேன் சற்றும்.
பொருவினை முனைந்து எந்தன் காலினை இழந்து, ஈண்டு
வருவதற் கில்லனாக வாழ்ந்திலன் பாவி யானே!
உத், மறந்தனை தன்னைநீயே, கச்சித, நடந்த தென்னை?

கச்: பேசுதற்கில்லேன்ஐய, பிழைபொறுத் தருளல் வேண்டும்.

360

உத்: மாண்புறு மாதேவ்,
ஆசார முறைநன் கறிந்தவர் நீவிர்
பெருமிதம் சாந்தம் பிறங்குறும் இளமைப்
பரந்தஇவ் வுலகம் சிறந்தே போற்றும்!
மிக்கோர் பலரும் புகழ்ந்து பாராட்டும்
மேம்பா டுற்றீர், தாம்பெறு பெருமை
பேர்சீர் கெட்டு ‘கலகக்காரன்’
எனப்பலர் சொல்லும் முறையினில் இன்று
நடந்ததும் ஏனோ? நவில்வீர் இன்னே!

361

மா: உயர்குணத் துத்தம ஊறுபட் டுள்ளேன்
உண்மை நடப்பை ராகு உணர்த்தும்.
நாஅசைப் பதானால் நோவடை கின்றேன்.
வம்பர்கள் தாக்க; அங்கதை எதிர்ப்பதும்
தன்னைப் பேணலும் தவறா கும்மோ!
தவறெனின் இரவில் நேர்ந்ததும் அஃதே
அன்றிவே றொருபிழை இரவில்
ஆற்றியு மறியேன் பேசியும் இல்லேன்!

362

உத்: தெய்வமே சான்றாச் சொல்கிறேன்: எனது
அறிவு அழிந்தது, சினம்மூண் டெழுந்தது!
உணர்வு தளர்ந்தது, வெறிவீ றுற்றது!
சிரக்கினைக் காட்டத் துணிந்தனன் ஒரின், யான்

கரத்தினைத் தூக்கின், உங்களில் மிக்க
உரமிக் கவரும் உலைவர், அழிவர்!
முறைகேடிஃது முளைத்த வகை என்?
யார் செயல் இஃது?
இத்துணை கொடியோன் இரட்டை யாய்வரு
உடன்பிறப் பாயினும் ஒழிப்பல், அவனையான்.

நகர முழுவதும் கலக்கம்!
மக்கள் மனமெலாம் குழப்பம்!
இரவு நேரம்:
காவல் கூடம்:
மனைவரு பூசல், மனத்துறு பகைகள்
அனைத்தையும் ஈண்டு நடத்தலா காது!
கொடிது, கொடிது,
இதனை ராகு, இயற்றினோன் யாவனோ?

363

மாதே:
நட்பினைக் கருதியேனும் ஒருதுறை வினைஞர் என்ற
பற்றினா லேனும் நீயே இல்லன பகர்தல் வேண்டா
உற்றதை உற்றவாறே உரைத்து நேர் வீரனாக
நிற்பதே நேர்மை, மீண்டு வேறொன்றும் வேண்டேன் யானே

364

ரா: நெருக்கியே பிடிக்கின் நீரே, நண்பனுக் கிடையூறாக
உரைக்குமோ இந்நா? ஈங்கு உரைப்பதில், அதனை ஈண்டு
அறுத்தெறி நெறிமேற் கொள்வேன். ஆயினும் நடப்பைக்
வருபழி யாதுமில்லை என்றுயான் விளம்புகின்றேன் [கூறின்

365

தளபதி, சேகரும் யானும்மா தேவரும்
பேசி நின்றனம்; ஐயகோ! அபயமென்
றியாவனோ ஒருவன் அலறி யடித்து
வந்தனன்: தொடர்ந்து வாளேந்து கையராய்க்
கச்சிதர் முடுகினர். இப்பெரு மகன் அவர்
முன்னிலை மேவித் தன்னியல் மொழியில்
"வேண்டா வேண்டா" எனமிக வேண்டினர்.
ஓடினேன் உரக்கக கத்தினனாக,
ஊரையே கலக்கும் இப்பெரும் ஒலமென்
றெண்ணியான் விரைந்தே அவனைத் தொடர்ந்தேன்

அவன் விரைந்தோடும் ஆற்றல் கொண்டதனால்
சிக்கா முறையில் தற்காத் தகன்றான்.
வாள்கள் மேல்மேல் வீழும் ஒலியும்,
ஈர்க்கும் ஒலியும், ஏறிய சினத்தால்
கச்சிதர் வாய்வரு கொச்சைபுன் மொழியும்
காதில் கேட்க; கடுகித் திரும்பினேன்.
கொச்சை மொழிகள் கச்சிதர் இத்துணை
இயம்ப இதன்முன் யான்கேட் டறியேன்.
ஒருசிறு பொழுதில், யான்மீள் வதற்குள்
குத்துங் கலகமும் செய்து குழறி,
தாங்கள் காண எங்நிலை அந்நிலை
நிற்கக் கண்டேன், பிறிதொன் றறியேன்.
மக்கட் பிறவி! குற்றம் இயற்கை!
பிறங்குமா பெரியரும் பிழைபடு கின்றார்.
பொறுத்தற் கில்லாப் புன்மைஏ தேனும்
புரிந்தனன் போலும் ஓடிப் போனவன்.
அதனால் கச்சிதர்; அடங்காச் சினத்தில்
உரியவர் தம்மை மிகஒறுப் பதுபோல்
புடைத்தனர் எனயான் கருதுகின் றேனே!

366

உத்: ராகு, நின்னை யான்நன் கறிவேன்.
உற்ற பெருங்குணம், கச்சிதப் பற்றால்
மூலா அம் பூசி மழுப்பி, நண்பனை,
நல்லவ னாக்க நாடினை: நன்று!
கச்சித, எமக்குநீர் மிக்க வேண் டியவரே,
ஆயினும் இனிமேல் அலுவலில் வேண்டா!
இதோபார், திலகம் நித்திரை கலைந்தாள்:
(திலகவதி பணியாளுடன் வருதல்)

உன்னால் உலகினுக் கொருபெரும் பாடம்!
தில: தேவா நடந்ததென? (உ) யாவும் நன்றே,
பள்ளி அறைகுச் செலவம்யாம் கண்ணே,
ஐய.நீர் பெற்ற ஊறுபாட் டினுக்கு
யானே நேரில் உதவி புரிகுவல்:
இவரை அழைத்துச் செல்லுவீ ராக,*
ராகு,
காவலில் மிக்க கவனம் செலுத்து
ஓலங் கேட்டுளம் உலைந்தோர்க் கெல்லாம்

(*மாதேவர் அகல்தல்)

அமைதி கூறு. அன்பே* வருக;
கலக முகத்தால், நலந்தரு துயில்கலைந்
தெழுதல் வீரர்கட் கென்றும் உரித்தே!

367

ரா. காயமுற் றீரோ தளபதி?
கச். மீள முடியா வகையினில்.
ரா. ஐயோ! கடவுள்காப் பாற்றுவார்!
கச். போன தேஐயோ புகழெலாம்!
புகழ்— புகழ்—.

368

இழந்தனன் புகழை; என்னில் என்றுமே நிலைத்த ஒன்றை
இழந்தனன். இன்றே யானோர் மாவசை மேவப்பெற்று
விலங்கின மானேன்: ராகு, என்புகழ், புகழ்ழ்(ரா) உண்மை
விளம்புவல், யான்நீர் ஊறு பட்டதாய் எண்ணி நின்றேன்.

369

புண்படல் பெரிது! மற்றைப் புகழென்று சொல்வ தெல்லாம்
மண்ணில்எப் பயனும்நல்கா ஒப்பனை உயர்வாம்: இஃது
உண்மையில் உயர்விலாதார் தம்மையே பெரிதும்மேவி
விண்டயல் நீங்கிமாயும் யாதொரு தன்மையின்றி.

370

புகழினை இழந்ததாக நீவிராய்ப் புகல்வதன்றி
இகந்தது யாது மன்று: இன்னம்ஒன் றுரைப்பேன் கேளும்
மிகப்பல வழிகள் உண்டு. தளபதி உறவு பற்ற;
பகைமையா லன்று இன்று ஒப்பனை முறைமைக்காக—

371

ஒறுத்தனன் மனத்திலுள்ள வேகத்தில்: இஃதே சொல்வேன்.
பெருமிதச் சியமொன்றின் நெஞ்சினிற் பயமுண்டாக்க
அரியநன். னுயை நன்கு புடைக்குமப் பரிசே யாகும்.
தருபொழு தறிந்துசென்று வேண்டுக; தமரே ஆவார்!

372

கச்: அற்பனேன் குடியன் வாய்த்த வேலையிற் கருத்தி லாதேன்
நற்பெருந் தகையை நண்ணிப் பேசவும் தகுதி இல்லேன்

---

* திலகவதி

"துப்பிநீ உமிழ்க என்னை" என்றொரு வேண்டுகோளே
செப்புதற் குரியேன் மற்று என்செயல் ஒப்பு வார்யார்!

## 373

குடிப்பது! யாரையும்
அடிப்பது! வாய்பல
படிப்பது! நெறிகெட
நடிப்பது! நேர் இது!!

## 374

தன்நிழ லுடனே தான்பல பேசுதல்!
கண்எதிர் தோன்று மதுவின் வெறியே,
உன் பெயர்யாது? யாதும் இன்றெனின்
நின்பெயர் இனிமது அரக்கன் என்பேன்

## 375

ரா : நீவிர் ஒருவனை வாளுடன் தொடர்ந்தீர்!
யாவன் அவன்? யா குற்றம் புரிந்தனன்?
க : யாரென் றறியேன் (ரா) அஃதெப் படியாம்!
க : நேரும் ஆயிரம்! நினைப்பில் நிற்குமோ!

## 376

காரணம் அறியேன் மற்று, கவைமும் ஆற்றி நின்றேன்
பாருள மக்கட் கெல்லாம் ஒருபெரும் பகைவன் உள்ளான்
ஊறுவாய் வழியே செல்வான் மூளையைக் கொள்ளை கொள்வான்.
ஆரவாரங்கள் ஆட்டசாட்டத்தால் விலங்காய் வைப்பான்

## 377

ரா : இன்னே நீவிரே அமைதி யாயுளீர்!
என்னவா றிது? (க) என்ன சொல்ல யான்!
சொன்ன நீமது அரக்கன் தொலைந்தனன்!
புன்குணச் சின வரக்கன் தோன்றிலன்!

## 378

ஒருகுறை பிறிதொரு குறையினை உரைக்கும்
சிறு நெறி பெறுதலின், என்னையே யானே
வெறுக்கிறேன்! (ரா) நீதிநன் நெறிமுறை நிறைவே
கருதுவீர்! காலமோ டிடம்பொருள் ஏவல்—

379

யாவையும் எண்ண இத்தகை ஒன்று
மேவாஅ திருந்தால் மேன்மைய தாகும்!
நோவதற் பயனென்! நேர்ந்தது! நன்மை
ஆவதற் குரியநேர் வழிநீர் ஆக்கும்!

380

கச்) மீண்டும்நீர் வேலைதந்து என்னையாட் கொள்ளும் என்பேன்'
'நண்டிய குடிய னன்றோ நீ' என்பார். என்வாய் மூடும்.
மாண் புறு மனித வாழ்வை மடையனுப் விலங்காய் மாற்றிக்
காண்டலும் தீதே: மிக்க கொடிதுகள் அரக்கன் வீறு.

381

ரா. நன்று, நன்று! பத முற்ற
மது வாய்ப்ப—
மிதக் குடியால்
உதவி பல!

382

மதுவைப் பழித்துரை
அதனை நிறுத்துவம்!
புதிய தொன்றுயான்
பதியே, வினவுவன்.

383

உம்பெருந் தோழ னுக
என்றும்யான் உள்ளேன் என்றே
சிந்தையில் கொள்வீர் அன்றோ?
கச்: என்றும்யான் கருதும் ஒன்றே!

384

வெறித் திருக் கின்றேன் அன்றோ! (ரா) குடிப்பது
வெறிப்ப தியார்க்கும்
உரியதே ஒவ் வோர்வேளை. உம்பெரு நலத்தை நாடிப்
புரியவேண் டியயான் சொல்வேன். ஆட்சியின் பொறுப்பால்
பெரியவர் தலைவர் அல்லர், தலைவியே ஆவார் சாண்மின் [இன்று

385

மனையவள் கல்வி மாண்பு குணம் எழில் மற்றை எல்லாம்
மனமகிழ் முறையில் துய்க்கும் முறைகளை உன்னி உன்னி

வினைகடன் மறந்தான் வீரன். வனிதையை நண்ணி நீவிர்
எனைத்தொன்றும் ஒழியீர் நேர்ந்த யாவையும் எடுத்துச் சொல்வீர்

386

அடிக்கடி அவளைத் தூண்டும். அவள்உமை நீர்முன் உற்ற
இடத்தினில் அமர்த்தும்: யாதும் வேண்டுறின் அதற்கு மேலாய்க்
கொடுத்துளம் களித்தா லன்றி, குணம் கறைப் பட்ட தென்னும்
நடைமுறைத் தூயள் நல்லள் நயந்தெரிந் துதவு நீரள்

387

உத்தமர் உறவு விட்டு முறிந்ததை உரைத்து; அஃதை
ஒட்டவைத் துறுதி செய்ய உத்தமி துணையாய் வேண்டும்
விட்டசீர் நட்பு ஒன்றி முன்னினும் வன்மை காட்டும்,
ஒட்டம்வைத் துணைப்பேன் இஃதை உள்ளதை எல்லாம் சேர்த்தே

388

கச் நன்று கூறினை, தக்கதே,
ரா. உண்மை, மேன்முறை, நீர்கொளும்
நன்மை நட்பினை நாடியே
சொன்ன தாம்இது. துணைப்பதி!

389

கச்
சரி என்றே நினைக்கின் றேன்யான், வைகறைப் பொழுதில் நாளை
நிறைகுணத் திலகத் தாள்பால் சென்றுயான் நேர்ந்து நிற்பேன்
உறுகதி என்னும் வாழ்வு இத்துடன் நிற்கு மானால்!
(ரா) சரி அது புரிவீர் யானும் காவற்குச் செல்லு கின்றேன்.

390

க: போய்வரு கின்றேன் ராகு, (ரா) யுக்திக்கும் பொருத்த மாக
ஆவன சொன்னேன், அந்தக் கானவன் நட்பை மீள
மேவு நன்னெறியும் இஃதே. ஆதலால் யாரும் என்னைக்
கேவல மாக எண்ண, ஐயுற இடமே இல்லை.

391

ஊருணி காற்று என்ன யாவர்க்கும் உதவி யாற்றும்
சீரகத் திலகத் தாளைத் தருமத்தைக் காக்க வேண்டிப்
போரிட வைத்தல் மிக்க எளிது.பின் பூவை அந்த
வீரனை வசமாய்க் கொண்டே வினைபல நடத்தி நிற்பாள்.

## 392

தையலின் அன்பே வாழ்வுத் தவம்சுகம் என்று எண்ணி
மையலில் மூழ்கி நின்றான். அவளுக்கா மதத்தை, மற்றை
மெய்வழி பாடு, மேலை மறுமையை யாவும் விள்வான்;
செய்யவள் வாக்கே வேத வாக்கெனக் கருதி நிற்பான்

## 393

ஆக்க, மேல் அழிக்க அன்னாள் வல்லவள் ஆதலாலே
காக்கலாம் கச்சனையாம் என்னும் ஓர் கருத்தினாலே
போக்கினேம்! இதனால் யானே புன்மைய னவ தெங்ஙன்?
ஊக்கிப்பின் வீழ்த்த லன்றோ தீயரின் தூய்மை யாண்டும்!

## 394

விண்வளம் முதலில் காட்டி வஞ்சனை செய்து பின்னைப்
புன்மறம் பரப்பு பேய்போல் புரிகின்றேன் யானும். எங்ஙன்?
வெண்மதி கச்சன் உற்ற குறையினைக் களைவான் வேண்டி
நன்னுதல் திலகத் தாள்பால் நயந்தடிக் கடியாண்டாவான்.

## 395

அன்னவள் கானவன்பால் அடிக்கடி வேண்டி நிற்பாள்
தன்பெருங் காமந்தீர்க்கக் கச்சனை நாடுகின்றாள்
என்னும் ஓர் நஞ்சை அன்னான் காதினில் ஏற்றவேண்டும்.
பன்னுசொல் யாவும் வீரன் நெஞ்சினிற் பாயும் குத்தும்.

## 396

எத்துணை வேண்டினாளோ அத்துணை தனைக்கொடுத்து
உத்தமற் காகா ளாவாள்; உற்றமா பெருமை நீங்கும்.
பத்தினி குணமே உற்ற பாசமாய் மாறி யீர்க்க,
அத்தனை பேரும் வீழ்ந்து அழியவைக் கின்றேன் பாரும்!

(ருத்திர கோட்டி வருகிறார்)

## 397

ருத்திரா. வந்தது யாது காரியம்?

ருத்: விரைந்து நேர் பற்றும் வேட்டையில் இலனாய்க்
குரைத்துக் கலைக்கும் கூட்டுநா யானேன்:
பொருளும் வறண்டது, இரவுப் பொழுதில்
தடியடி முதுகு ஒடியப் பெற்றேன்
பட்டபாட் டிற்குப் பெற்ற பெரும் பயன்
அனுபவம் ஒன்றே என்றே அறிகிறேன்.

பொருளும் ஒழியப் புத்தியும் வந்தது
விரைவினில் வஞ்சி மீளவே துணிந்தேன்.

398

ராகு: பொறுமையையிழந்தோர்பொருள் இழந்தவரே
ஆறும்நா ளன்றி அடுத்த பெரும்புண்
நினைத்த பொழுதே குணமா கும்மோ!
மெல்லப் பாயக் கல்லும் குளிரும்.
மாயம் அல்ல மந்திர மல்ல
மதியின் வேலை!
காலம் வருங்கால் கௌவிக் கொள்ளும்!
காரிய நடப்பில் யாது குறை! சொல்?

399

பச்சைநன் மரங்க ளெல்லாம் பகலவன் தன்னைநோக்கி
நிற்பினும் முதலிற் பூத்த முதலிலே பழுப்ப போல
கச்சனன் றனைஅ டித்த காரணத்தாலே அன்றே
துச்சமா யவன்வே லையைநீ தொலையவைத் துள்ளாய் அன்றோ?

400

நேரமும் விடிய லாயிற் றின்னும்நீ சிறிது காலம்
மாறின்றிப் பொறுமை கொள்க, தெய்வத்தின் மீது ஆணை.
ஆரவா ரத்தின் ஆட்டம் இரவொரு கணமாயிற்று!
நேரடி உமக்களித்த இடத்துக்கே விரைந்து செல்க.

401

செல்லுக செல்க இன்னே, சங்கதி எல்லாம் பின்னே,
செல்லுக! நில்லா தீர் நீர். * செய்யவேண் டுவஇரண்டு!
இல்லவள் விமலா சென்று திலகத்தைக் கச்சற்காக
நல்லவார்த் தைகள் சொல்லி நயந்திட வைக்க வேண்டும்

402

கச்சனர் திலகத் தாள்பால் காரியம் வேண்டி நிற்க;
மற்றொரு வழிகா னவனைக் கொண்டு யான் மேவி ஆங்கு
மற்ற தாய்க்காண வைப்பேன்: சரி சரி அதுவே செய்வேன்.
சற்றுமே தாழ்த்த லின்றிச் சுடச் சுடச் செய்ய வேண்டும்!

(மறைதல்)

---

* ருத்திரன்போகிறன்.

## களம் 3 காட்சி 1

[அரண்மனை முன். கச்சிதரும் சில இசை வாணரும்]

403

கச் : இவ்விடத் திருந்திசை வாணர்காள் நீங்கள்
செவ்விதா யொருசிறு பள்ளிஎ ழுச்சி
அவ்வருந் தலைவர்தம் அகமகிழ் முறையே
செய்குவீர். யான்நுமக் கேற்றது செய்வல்

(விகடன் வருகிறான்)

404

விகடன் : குழல்கள் யாவும் மூக்கினல் பேசுவ!
மழலை மொழிசேர் மலையா ழத்தவோ?
பாணர் : மொழிவ திவ்வா றெவனோ? ஐயா.
விக : துளை இக் கருவி இனமிவை அன்றோ?

405

பாண : சரி.அவ் வாறே உரைப்பர்தெ ரிந்தோர்.
விக : சரடொன் றிங்கே விடுவதும் ஏனோ?
பாண : சரடு விடுவதி யாவர்? நாங்களோ!
விக : சரி.இங் குள்ள குழல்களில் சரடு—

406

தொங்குதல் கண்டு கூறினேன்; நன்று!
உங்களுக் குரிய பணமிதோ; செல்வீர்.
எங்கள்நற் றலைவர்க் கும்மீ துற்ற
விஞ்சிய விருப்பம்—வருத்த விழையார்!

407

நிறுத்தச் சொன்னர் :(பா) நல்லதவ் வாறே.
விக : இருசெவி நுழையா இசைஒன் றுளதேல்
புரிகுவீர் அதனைப் பலர்புகழ் முறையே;
பெரியவர் இசையிற் பிரியரு மல்லர்.

408

பா : அத்தகை இசையாம் கொண்டிலம் ஐய.
விக : மிக்கநல் லது,நும் மூட்டையைக் கட்டி

இக்கண மேவெளி ஏறுவீர் நீர்:யான்
அப்புறஞ் செல்கிறேன்: நீவிரும் அகல்வீர்

(பாணர் புறப்படல்)

409

கச்: உம்மவர் சொல்வது செவியே றிற்றே?
விக: எம்மவர் சொல் செவி ஏறவே வேண்டா.
உம்மது உளதெனின் உரைப்பீர், ஏற்பேன்.
கச்: உம்விக டங்களைச் சற்றே ஒதுக்கி—

410

ஒன்றுநீர் செய்யும், உத்தமர் மனைக்குத்
தொண்டுசெய் சேடி தூக்கம்விட் டோய்வு
கொண்டனள் என்றால், கச்சிதர் என்பார்
நின்றுதே டுவதாய் நவிலுக சற்றே.

411

பொன்சில நுமக்குத் தருவன பெற்று
என்றனுக் காக இதுசற் றியற்றும்
மங்கைஎ ழுந்தாள், வறிதே இருப்பாள்,
விக: இங்குறும் பொழுது யானறி விப்பேன்.

412

கச். நல்லது புரிவீர் நண்பரே.* ராகு.
நல்லநே ரத்தில் நீயும்வந் துற்றாய்:
ரா. இல்லையோ தூக்கம் இரவு முழுவதும்?
கச். இல்லையே; உறங்க நேரமும் எங்கே!

413

இருவரும் பிரியும் போதே விடிந்தது வெள்ளை கீறி;
ஒருவகை யாய்த்து ணிந்துன் மனைவிக்கோர் ஆளும்விட்டேன்
வருவது பார்த்து; அந்த உத்தமி திலக மாதை
ஒருமுறை கண்டு பேச வகைவழி செய்யக் கேட்பேன்

414

ராகு.
அவளைஉன னிடத்தில் யானே அனுப்பிவைக் கின்றேன். அக்கா—
னவனைஎன் யுக்தியாலே வேற்றிடம் அழைத்துச் செல்வேன்

* ராகு வருதல்

415

அவனிலை சிறிதுமின்றி அவளுடன் தனித்துப் பேசிக்
கவலையைத் தீர்க்க லாகும் (கச்) யான் மிகக் கடமைப்பட்டேன்!
(ராகு மறைகிறான்)

416

தன்சொந்த ஊராலும் செய்யாப் பெருநன்றி!
என்றும் இதைமறவேன் யான். (விமலா வருகிறாள்)

417

விமலா:—
வருக துணைப்பதி வருக: மிக்க வருத்தம் நுந்தம் துயர்நிலை காண:
உறுதிகொண் டம்மை உமக்குரை யாடும், ஒருபெரு நன்மை
பிறக்கும் கடிதே.
இருவரும் அங்கே நும்கதை பேசி இருக்கின் றார்கள்.
உத்தமர் சொல்வார்:—
உறுபுகழ்க் குரியார், முசிறியில் பெரியா ரினத்தவர் உம்மால்
ஊறுபட்டுள்ளார்

418

இந்நிலை உம்மை ஒழிப்பதை யன்றி வேறொரு வழிதாம்
கண்டில ராகி
இன்ன முறைதாம் செய்தனர் எனவும், எவர்சிறு பரிவும்
இன்றித் தாமே
முன்னுறு நிலைக்குத் தக்ககா லத்தில் மீட்கிற தாகவும்
தாம் மொழிந்துள்ளார்
கச்: இன்னும்ஒன் றும்மை வேண்டுவன் அம்மே, இயலுமேல்
அஃது இன்புடைத் தாயின்—

419

செய்குவீர்: திலகவதியா ரிடம்யான் தனித்தென் குறையை
உரைக்கலாமோ?
விம:) ஐயனே இதிலென் ! உள்ளே வாரும் அவர்பால்
மனம்விட் டமர்ந்து பேசச்
செய்குவன். கால வாய்ப்புறும் போது தெரிவிக் கின்றேன்
நீர் முறை செய்வீர்
கச:) கைம்மா றில்லா இப்பெரும் பணிக்கே யான்மிக என்றும்
கடப்பா டுடையேன்

## அங்கம் 3. காட்சி. 2.

(அரண்மனையில் ஓர் அறை. உத்தமர், ராகு, சில பெரியார் வருகின்றனர்)

420

உத்: இக்கடி தங்களை மாலுமி கரத்தில்
ஒப்படைப் பாய்நீ. மன்றத் துற்ற
நற்பெரி யார்க்கென் வணக்கம் நன்றி
ஒப்பனை உரைக்க அவரைநீ வேண்டு.

421

வினையகத் தேயான் உலாவிநிற் கின்றேன்:
விரைந்தவண் நீவரு வாய்

422

ராகு: அருமைத் தலைவ, அவ்வா றேயாம்.
உத்: பெரியீர் நமது கோட்டையைப் பார்த்து
வரலா மென்றே எண்ணுகின் றேன்யான்
பெரி: திருவுளப் படியே செய்வோம், செல்வோம்.

## அங்கம் 3. காட்சி. 3.

[அரண்மனைத் தோட்டம் திலகவதி கச்சிதர், விமலா மூவரும் வருகின்றனர்]

423

தில: வருத்தம் வேண்டா, கச்சிதரேஉமக் காவன யான்புரிவேன்
விம- புரிவீர் அம்மணீ, என்நா யகரே தமதாய் வருந்துகின்றார்
தில: இராகுவோ? நல்லவர்!! கச்சித ரேநீர் இடர்ப்பட
வே வேண்டா
உறவுமுன் போல்என் நாயக ருடன்நீர் பெறயான்
வகை செய்வேன்

424

கச்: கச்சிதன் காரியம் என்ன ஆனாலும்; கருணை ததும்பும் அம்மா,
காலமெல் லாம்அவன் உமக்கூ ழியனே வேறென்று
தான் கருதான்.
தில: யானதை அறிவேன் நன்றியு முடையேன்: என்நா
யகரிடத்தும்
நீர் நெடுங்காலம் பழக்கமும் நட்பும் நிலைத்தவ ரேஆவீர்

அரசியல் நெறியில் முறைசெய்ஒப் பணியாய் அகல நிற்பதே அன்றி
பிறிதொன்றுமில்லை எனஉமக் குறுதி புகலுகின்றேன்உண்மை.

425

கச்: இஃதுஇவ் வாறு யின்னும் நீடிக்கு மாயின், அம்மா,
ஆற்றுமை ஒழியும், நெஞ்சில் உற்றநல் எண்ணம் மாயும்.
முற்படு குற்றம் மேலும் விரியும், யான் இன்மையாலே
எற்படு பதவி யாரும் ஏற்கவு மாகும். பின்னை—

426

என்பெரு உழைப்பு உண்மைப் பற்றெலாம் அவர்ம றப்பார்
என்றுயான் அஞ்சு கின்றேன் (தி) இந்தஐ யுறவே வேண்டா.
முன்னிற்கும் விமலா சான்று. மொழிகிறேன் உறுதி: நீவிர்
முந்திய இடத்தை மேவ வைப்பன்யான் உண்மை கண்டீர்.

427

அன்பர்கட் காக வாக்கு அளிப்பனேல், அதனை எண்ணி
நின்றுசாதித்தே வெற்றி நாட்டுவன். உண்மை! இன்றேல்
தொந்தர வாற்றிஇன்னுள் விலகிநிற் போதும் என்று
என்வழிக் கவர் இணங்கி வரும்வரை வார்த்தையாடி—

428

உண்ணுங்கால் உபதே சிப்பேன் உறங்கிடம் பாடம் சொல்வேன்
பண்ணுபல் வினைகளூடும் கச்சிதர் வழக்குப் பேசி
எண்ணிய படியே செய்து முடிக்கு வென். இலதேல் வக்கீல்
தன்னுயிர் இழக்கும் என்றால் இன்னும் நீர் தயங்க லாமோ.

(உத்தமரும் ராகுவும் சற்று தூரத்தில் வருகிறார்)

429

விமலா: அம்மணீ நமது தளபதி வருகிறார்
கச்: அம்மையே அடியேன் சென்று வருகிறேன்
தில நின்றுஎன் உரைகளை நேரில் கேட்டால்?
கச் நெஞ்சினில் நிம்மதி இல்லை, வேண்டா.

430

என்நிலை எதற்கும் ஏற்றதா யில்லை
தில, உம்விருப் பம்போல் செய்கநீர், செய்க.

(கச்சிதன் மறைதல்)

ராகு : என்னதோ, எனக்கிது பிடிக்கிற தில்லை!
உத் : என்னநீ இப்போ துரைத்தது ராகு?

431

ராகு : ஒன்றுமே இல்லை ஐயனே, யாஅன்
ஒன்றுமே ஈண்டு உரைத்தற் கில்லை.
உத் : என்மனை யாளிட மிருந்திப் போது
சென்றவன் கச்சிதன் அல்லனோ ராகு?

432

ராகு : தங்களைக் கண்டு கள்வனைப் போல்செல
என்னதான் வந்தது கச்சித ருக்கு?
உண்மையில் அன்னார் கச்சித ரல்லர்.
உத் : என்ன, நீ! உண்மையாய் அவன்கச் சிதனே!

433

தில : என் அருந் தலைவா இத்துணைப் பொழுதும்
நின்பெரு வெறுப்பால் தன்மனம் கன்றி
நின்றுமன் றுடும் நேர்ச்சியா ளனுடன்
இங்குரை யாடி இருந் தனன்யானே.

434

உத் : யாரைநீ சொல்லுகின்றாய் (தில) யாரை? அக்
கச்ச னைத்தான்!
சீர்துணைப் பதியை யேதான்! செல்வநா யகரே, எந்தன்
பேரழ காற்றலில்நீர் பிரியம்வைத் துள்ளீ ரானல்,
சார்பிழந் தவனை இன்னே சேர்த்துநற் சிறப்புச்செய்யும்.

435

வெள்ளைநெஞ்சினனுய்ஏதோ வெறியினில்தீங்கிழைத்தான்.
கள்ளமேஇல்லான். அஃதை அவன்முகம் காட்டிநிற்கும்.
உள்ளத்தே தங்கள் மீது மிக்கபற் றுடையான். ஏற்றுக்
கொள்ளுக அவனைமுன்போல். குறைஒன்றும் ஆய்தல்
வேண்டா!

436

உத் : இப்பொழு தவன் இவண்
விட்டகன் றனனோ?

தில: உற்றதன் கவலையைக்
கொட்டிச் செல்கிறான்—

437

அவன் துயர் எண்ணி
அவமுறுகின்றேன்
தவப்பெருந் தலைவ,
அவனைநீர் கொள்வீர்

438

உத்: இன்னுயிர்த் திலகம், இப்பொழுதன்று.
பின் ஒரு சமயம் பார்த்துச் செய்கிறேன்
தில: சின்னேரத்தினில் செய்துவைப் பீரோ?
உத்: கன்னலே உனக்காக் கடிதினில் செய்வேன்

439

தில: நல்லது இராவினில் உண்ணுமுன் ஆகுமா?
உத்: இல்லை இல்லை இன்றிரவில்லை.

440

தில: நாளை நடுப்பகல் சாப்பிடும் வேளை?
உத்: நாளை உணவுநம் மனையினில் இல்லை;

441

ஒப்பனை விருந்தூண் கோட்டையில் நாளை.
தில: அப்படியானால் நாளை இரவினில்?

442

நாளை—இன்றெனின் செவ்வாய்க் கிழமைக்
காலையிலேனும்? இன்றேல் நண்பகல்?
மாலையோ—இன்றேல் புதவாரத்தின்
காலைநேரத்திலோ? ஏதோ ஓர்நாள்—

443

காலவரம்பாய்க் கூறுதல் வேண்டும்
மேலும், அஃது மூன்றுநாட்களினும்
மேலுறலாகாது அடைபட்டான்போல்
சாலவே கக்சிதன் சிந்தைநொந் துள்ளான்

444

குறுமுயல் தன்னை நீக்கிப்
பெருமத யானை நோக்கிப்
பொருதலே சிறப்பதன்றி
உறுபழி என்னோ ஈண்டு ?

445

இத்துணை ஒறுத்தலுக்கே
குற்றமும் உளதோ ? அன்னான்
எப்பொழுதுறுவான் ? அதைச்
சற்றறி வியுங்கள் தாங்கள்—

446

நாயக, தாங்கள் என்னைத்
“ தா ”என ஒன்று கேட்டால்
ஆவலில் அளிப்பேன். ஊறு
மேவுமோ, தயக்க முண்டோ !

447

இத்துணைத் தயக்க மிங்கு
உற்றிடும் என்று எந்தன்
சித்தத்தெஞ் ஞான்றினும்உ
தித்ததே இல்லை ஐயோ,

448

ஆதியில் தாங்கள் என்னைக்
காதலித் தணுகும் நாளில்
ஆதர வாக வந்த
சோதரத் துணைவன் யாவன் ?

449

மிகமிகக் குறைகள் கூறி
இகழ்ந்தனன் தங்களையான் :
இகழ்ந்ததை மறுத்து உண்மை
புகன்றெனைத் தந்தான் யாவன் ?

450

இத்தகை யோனைச் சேர்க்க
இப்பெரும் பாடோ ! ஒன்று

செப்புவல், யானே என்னின்—
உத் : இத்துணை போதும். வேண்டா!

451

தனக்குநல் வசதியான போதவன் வருக ஈங்கு.
உனக்கு யான் இல்லை என்று உரைப்பதும் உண்டோ, உன்னு!
தில :) எனக்கொரு நன்மைகோரி வேண்டிநில் வரமோ இஃது?
வனப்புறு ஆடைபோர்க்க, வலிதரும் உணவு உண்ண,

452

உடல் நலம் பேண, வேறு உறுதிகள் தேடிக்கொள்ள
அடிகளை வேண்டி நிற்கும் பான்மையே இஃது ஐய!
உடைப்பெருங் காதலுண்மை அறிகுவான் ஒன்று வேண்டின்
நடைமுறை அரிதாய் நின்று தீமையே நல்கும் போலும்!

453

உத் : இல்லையென் றுனக்கு யாதும்
சொல்வனோ; யான்தனிக்க
ஒல்லைநீ சற்றே அப்பால்
செல்லவே வேண்டுகின்றேன்

454

தில : 'மாட்டேன்' என்றொரு
மாற்றம் சொல்லவோ!
ஆற்றேன்! அரசே,
போற்றினேன் அகல்கிறேன்.

455

உத் : என்னருந் திலகம்,
உன் இருப் பிடம்யான்
சின்னே ரத்தின்
வந்துறு வன்காண்!

456

தில : திருவுளப் படியே செய்கவே!
அரசர் எவ்வழி அவ்வழி
உறைவேன் அடியாள். விமலா,
வருக, வா,நாம் ஏகலாம்

(இருவரும் அகல்தல்)

457

உத்: பெண்ணியற் பேதாய்,
உன்னையான் மறப்பின்
நண்ணுவன் நரகே.
மின்னையான் மறவேன்.

458

மறந்தால் உறையேன்
ராகு: அருமை, அரசே!
உத்: இராகு, நீயீண்
டுரைப்ப துயாது?

459

ராகு: அம்மணி காதல் வேட்டுத் தாங்கள் முன் அடைந்தகாலை
நம்மருங் கச்சன் தங்கள் நடப்பெல்லாம் அறிவான் கொல்லோ?
(உத்:) நன்கவன் அறிவான்; இன்று நேர்ந்ததென் இக்கேள்விக்கு?
(ரா:) ஒன்றுமே இல்லை, ஏதோ மனத்தினில் எழவே கேட்டேன்,

460

உத்: என்ன, ஏன் இந்த எண்ணம் மனத்தினில் எழுந்ததைய?
ரா: அம்மையும் அவரும் முன்பு அறிந்தவர் என்று யானே
எண்ணியதில்லை! (உத்) நன்று; அடிக்கடி எமக்காத் தூது
சென்றவன் அவனே யாவான். (ரா) உண்மையோ? (உத்) ஆமாம்,
உண்மை!

461

என்னே? ஆங் கியைந்த தாக உட்பொருள் யாது முண்டோ?
அன்னவன் நல்லான் என்னே? (ரா) அவனொரு நல்லான்! மன்னு,
(உத்:) அன்னவன் நல்லான்! நல்லான்? (ரா) யான் என்ன
அறிவேன் மன்னு!
(உத்) உன்உளக்கருத்து யாதோ? (ரா) என்உளக்கருத்து! மன்னு!,
(உத்) "என் உளக்கருத்து! மன்னு!"......................

462

வெளியிடற் கொண்ணு, மிக்க விகற்பமே ஆன, தீய
பழிதரும் ஒன்றை நெஞ்சுள் கொண்டுளாய்; பகராய். என்வாய்
மொழிவதை மொழிவாய்! உண்மை உரைக்கிலாய், மனையை விட்டு
வெளிவரு கச்சற் கண்டு, எனக்கிது ஒவ்வா தென்றாய்

463

எதுஉனக் கொவ்வா தாகும்? இன்னும், யான் "எம்மை அன்று
வதுவரர் ஆக்கத்தூது நடந்தவன் கச்சன் என்ன,
எது! இதுஉண்மை! என்றே ஏங்கினே; அயிர்த்த நோக்கால்
பதைத்தனே, சுழித்த நெற்றிப் புருவமும் நெரிய நின்றாய்

464

உண்மை யானநன்
னண்ப ஞயின், உன்
எண்ணம் யாதனை
என்னிடம்உரை.

465

ராகு: என்றும் தங்கள்பால்
நன்றி யுள்ளவன்
என்னும் அஃது, தாம்
நன்க றிந்ததே!

466

உத்: அறிவேன், அறிவேன்உன்
பரிவும் நேர்மையும்யான்
உரைக்கும் மொழிகளையும்
நிறுத்தே வெளியிடுவாய்

467

இன்ன தன்மையன்நீ
ஒன்றும் உரைக்கிலனாய்
நின்றால், அதனால்என்
சிந்தை கலங்கும்ஐய,

468

ஐய, இஃதே
பொய்ம்மைக் கயவர்
எய்தும் புன்மை!
மெய்யற் காயின்—

469

கொள்ள ஒண்ணு
உள்ளக் கொதிப்பால்.

விள்ளப் படும்ஓர்
கள்ளம் ஆகும்!

470

ராகு: கச்சிதன் நல்லன், மிக்க
உத்தமன் என்றே யானே
சத்தியம் செய்வேன் ஐய.
உத்: அஃதுஎன் கருத்து மாகும்

471

ராகு: உள்ளும் புறமும் ஒத்திருப் பவரே
நல்லர். அவ்வா றில்லார் உலகில்
இல்லா திருத்தலே நன்மை யாகும்
உத்: சொல்லிய துண்மை. மக்கள் யாவரும்

472

தோற்றத்து முறையே வாழ்வுந
டாத்துதல் வேண்டும் என்பன்யான்.
ராகு: வாக்கிது நேர்மை யாயினே,
யோக்கியர் அன்றோ கச்சிதர்?!

473

உத்: சொல்லும் இழுப்பும் உன்
உள்ளத் தேஒரு
கள்ளம் இருப்பதாய்
விள்ளுகின் றனவே!

474

இருதயத்துள்
உறை அதனைக்
கரவின்றி
உரையாயோ?

475

பொல்லா தனவே ஆயினும்,
ஒல்லாப் புன்மொழி கொண்டும்
எல்லாம் தெளிவுற ஈண்டு
விள்வாய். ராகு,நீ விளம்பு—

476

ரா: என்கடன் பணிந்து நிற்றல், ஆயினும் ஈண்டு யானே
ஒன்றுரைக்கின்றேன்: மன்னா, உள்ளத்தை உரைக்க ஆமோ!
தன்பலம் ஒடுங்கிவாழும் அடிமையும் தனதுள் ளத்தை
அந்தரங் கத்தில் கொள்ளும் உரிமைகொண் டுள்ளான் அன்றோ

477

நீப்புள் அமையா மனைஒன் றுளதோ!
நாற்றம் மருவா உடலும் உண்டோ!
தீக்குண மறியா தாகித் தூய்மை
வீக்கிய சிந்தையும் உளதோ உலகில்?

478

என் எண்ணம்
நன் றறியாப்
புன் மையதாம்
என் றெள்க.

479

இன்ன வா
றண்ணலே,
என் னைநீ
மன்னிப் பாய்!

480

உத்: வாளா இருக்கிற அதனால்
தோழா, துன்புற என்னைப்
பாழாம் நெறியுட் படுத்திய
ஆளா கின்றனை அன்றோ?

481

ராகு: நிறைகுணம் அமைதி ஞானம் கொண்டநீர், யாதும் இல்லாக்
குறையுடை யவன்றன் சொல்லை நம்பியொன் றூற்றி நெஞ்சம்
முறைதிரிந் துழல வேண்டா. வீரம்நல் லறிவு நேர்மை
உறைதரு தங்கட் கியானென் றுரைப்பது தகுதியன்றே.

482

உத்: என்ன உரைக் கின்றாய்நீ
ராகு: என்பிரிய மன்னா கேள்

483

மைந்தர்க்கும் மாதரார்க்கும் மானமே ஒளிர்பூணதும்
சிந்தனைக் குரியதஃதே செல்வமும் இதற்கீ டின்றே
இன்றொரு கையில், நாளை மற்றொரு கையி லாக
நின்றுநூ றாயி ரம்பேர் நேர்ச்சிகொள் முறையினாலே

484

கைப்பொருள் இழப்பேனாயின் அதனைநான் இழவென்
றெண்ணேன்
அற்பம தாகும். ஆனால் உயிரினும் சிறந்ததான
மெய்ப் பொருள் மானம் நீப்பின் அதுஇந்த வாழ்வு பெற்ற
நற் பெயர் அழித்துத் தன்னைச் சார்ந்தவர் தமையும் வீழ்த்தும்.

485

உத் உண்மையாய், உன்உள் ளத்தை
நன்குயான் அறிதல் வேண்டும்!
ரா: என்உளம் நும்கை மீதே
ஒன்றினும் உணர்தல் ஆற்றீர்!

486

என்னுளம் என்னோ டாக
எங்ஙனம் உணர்வீர் ஐய?
உத்: "எங்ஙனம் உணர்வீர்" ஆ, ஆ.
ரா மன்னவா மருட்சி தீது!

487

உட்ணிருந்தே உலைவைக்கும்
கடிப்பேய் இம் மதிமயக்கு!
கெடுமதியால் ஐயுறினே
படர்காமாலைக் கண்ணே!

488

பார்த்துநன் கறிந்தும் உற்ற பரத்தையிற் பற்றிலாது
வாய்த்துள் விதியீதென்று வாழ்பவர்க் கின்பமேதான்!
பேர்கிலாக் காதல் கொண்டு, பெண்ணினை ஐயுற்றார்க்கு
ஓர் ஒரு கணமும் வாளாய் உயிரினை அறுக்கும் மன்னா!
உத்: கொடுமை! கொடுமை!

489

ராகு: இல்லானே ஆனாலும் சிந்தைநிறை வுற்றானேல்

எல்லாம் அவன்பெற்ற ஞவானே. எல்லாமே.
பெற்றும் 'இழப்பமெனப் பேதுறுவார் இவ்வையம்
பெற்றும் பெருதாரே யாம்

490

ஐயுறவு என்னை அணுகாதே காப்பாய் நீ
தெய்வமே இஃதுன் கடன்.

491

உத்: ஏன் இவ்வாறு! ஏன் இவ்வாறு!
வான்மதி போன்று யான்மதி உழன்று
ஐயுற் றுள்ளம் நையுறு வேன்என்
றெண்ணுகின் றனையோ? அன்று! அன்று!
ஐயுறு கணமே மெய்யுணர் வுறுவல்.
அவ்வா றன்றி நின்வாய் மொழிக்கோர்
உழவு தேடி உழன்றலை வேனே?
நயங்கா ணது நாளைக் கழித்து
நாடித் திரிவது ஆடே ஆகும்!
அவள் பே ரழகால், அவள்நல் லுணவால்,
அவள் கூட்டுறவால், அவள்ஒப் புரவால்,
அவள் வாய் இசையால், அவள்நட னத்தா,
அவள் புரி ஆடல் பாடல் கண் டியானே
ஐயுறு வேன்கொல்! அன்று! அன்று!
கற்புடை யாட்கிவை பொற்புறுத் துவன.
கண்கொளக் கண்டு கருத்துற அறிந்தே
என்னைமுன் தெரிந்தாள்; ஆதலின் இன்று
என்குறை கண்டு தன்நிறை விண்டாள்
எனஐ யுறவும் என்அுள விடமில்!
யான்நேர் அறியா தெதையும் ஐயுறேன்:
ஐயுறின் அதற்கு மெய்ச்சான் றடைவேன்;
சான்று கண்டபின் ஆம்துணை வேறில்!
கூட்டுற வல்லது ஐயுற வென்ன,
இரண்டில் ஒன்று பறந்திட வேண்டுமென்!

492

ராகு: இதனைக் கேட்க உவகை எய்தினேன்!
இனிஎன் அன்பு கடமை உரிமை
யாவையும் உனக்கு நேர் வெளிப் படுத்துவல
உரிமை கொண்டியான் உரைப்பன கேட்டி!

சான்றெதும் வேண்டேல். அது சாற் றுகிலேன்
நின்மனை யாளை—நீயே கவனி,
அவளுடன் கச்சன் உறவைக் கவனி,
ஐயுற வேண்டா; அமைவும் வேண்டா.
கள்ள மற்ற வெள்ளை மனத்தால்
பெருநோக் கத்தீர் சிறுமை யுறயான்
விரும்பு கின்றிலேன் விளம்பினேன், கவனி.
சேர நாட்டினர் சீர்யான் அறிவேன்!
தலைவன் அறிகிலா—முதல்வனே அறியும்
வஞ்சம் புரியும் இயல்பினர் வஞ்சியர்.
அவர்தம் நேர்மை யார்க்கும் தீமை
புரியாமை யன்றது தெரியா மையே!

493

உத்: அன்னதன் மையரோ? (ரா) அன்னதன்மை
தன்னைப் பெற்ற தந்தையை வஞ்சித் [யரே!
துன்னை மணந்தனள் அன்றோ முன்பு?
நின்னுருக் காண அஞ்சினள் போல
நின்று நடுங்கி, நயந்தன ளன்றோ?

உத்: ஆம்அவ் வாறே! ஆம்அவ் வாறே!
ராகு: ஏன் இன்னமுமே யான்ஒன் றுரைப்பேன்

494

கண்பெறு காட்சி யுண்மை காண்கில ராகித் தந்தை
மந்திர வினையீ தென்று மதிமருள் நிலையில் மிக்க
தந்திரம் தளுக்கு கொண்டாள். இச்சிறு வயதில், தையல்!
என்முறை தீது!ஐய; என்னைநீ பொறுத்துக் கொள்க.

495

வகைதெரி யாது வாஞ்சை மிகுதியால் பேசிவிட்டேன்
உத்: மிகமிக உனக்கு என்றும் யான்கடப் பட்டேன் ஆவேன்
ரா: அகம்ஒரு வகையிற் சற்று புண்பட வைத்தேன், அன்றோ?
உத்: இருகுகு * சற்று மில்லை; துளி அளவேனும் இல்லை

496

ரா: மன்ன வா மனம் நொந்துளீர்!
உத்: என்ன! நோவதற் கென்னுண்டு?
கன்னெறி நீத்தனள் கிளை என்
றெண்ணு கின்றிலேன், யான் ராகு.

---

* ஒலிக்குறிப்புச் சிரிப்பு.

497

ரா : அம்மணி வாழ்க! தாங்களும் அவ்வா
றெண்ணியே நீடு வாழ்க! (உ) இயற்கை
தன் குணம் மாறி நிற்குமோ என்றே—
ரா : அன்னதே காரியம்! இனியான் பேசலாம்.

498

தன் எழில் தகுதி தன்னூர் கொண்டவ ராக வேட்டு
வந்தவர் பலரை 'வேண்டாம்' என்றவள் வெறுத்து நின்றாள்.
தன் இன மருவல் இந்த உலகியல். இவளோ மாறி
நின்றனள் என்றால், நேர்மை நெஞ்சினிற் குடிகொள் ளும்மோ,

499

ஏறுமா றாய்ந டப்பாள்: எண்ணங்கள் விலகிச் செல்லும்:
கூறுவதியாதும் அன்னாட் குறித்ததாய்க் கொள்ளேல். யானே
வரியல் சொன்னேன்: ஓர்நாள் உம்முரு அதனைத் தன்னைச்
சேர்ந்தவ ருடனைப் பிட்டுச் சிந்தையிற் கவலக் கூடும்.

500

என்னை மன்னி:யான்
சொன்ன துலகியல்.
உத்: நன்று நன்று யான்
சென்று வருகிறேன்

501

இன்னமும் உணர் வாயானல்
என்றனுக் கறிவிப் பாய்நீ.
உன்மனை யாளையும் ஓர்
கண் இதில் செலுத்தச் சொல்லு.

502

சென்று வாநீ ராகு,
ரா: நன்று! வருகிறேன் அண்ணல்.

(அகல்கிறான்)

உத்: இன்னான் கண்டது மிகவே!
நம்பால் விண்டன சிலவாம்!

503

யான் ஏனோ மணம்புரிந்தேன்!
ரா: (வந்து) தாங்க ளின்னும் இதிற் கருத்து

ஊன்றவேண்டா எனஉரைப்பேன்
ஆம்காலத் ததுபுலனும்!

504

கச்சிதன் பதவிக் கேற்ற கண்ணிய முடையோனவான்
மற்றதைத் திறமை யாக நிர்வகித் தொளிர்வானேனும்
சற்றுநீர் தாழ்த்தல் நன்று! தாழ்த்தலால் அவன்றன் நேர்மை
கைக்கொளும் முறைகள் எல்லாம் நேரில்நீர் காண லாகும்!

505

அன்னவன் பதவி எய்தும் முறையினில் நுமது நங்கை
என்னென்ன வழிசெய்கின் றாள், எத்துணை ஊக்கம் காட்டும்
இன்னன உணர லாம்நீர். இவைஒரு புறமி ருக்க—
என்னையும் ஐயுற் றீர்என் றியாவரும் நினைக்க நில்லும்.

506

ஐயுறு தற்கே அநேக ஏதுகள்!
ஐயயான் உம்மை ஒன்று வேண்டுவல்.
தையலாள் மாசிலள் என்றே கருதுக.
மெய்யா யிஃதே என்பெரு வேண்டுகோள்!

507

உத்: என்முறை பற்றி யாதும் ஐயுறேல்.
ரா: சென்றுபின் மீள்வல், யானும், அண்ணலே.*
உத்: மன்பதை உள்ளம், பழக்க வழக்கம்
நன்கறிந் தவன் மிக நம்பத் தக்கவன்!

508

ஈருடல் இடையி ணைக்கும் ஓருயிர்ப் பாச மேனும்,
சீரழி வுற்ற தென்று தெரிவனேல் தயக்க மின்றி
யாரிவள், என்ன சொந்தம், இனிஎமக் கென்ன? மற்று
நேர்வது நேர்க என்றே முற்றும்யான் நீத்து நிற்பேன்.

509

கரியவன் என்றோ, பற்று கன்னியர் நட்பை நாடித்
திரிகின்ற விடலைபோன்று திகழ்கின்ற தின்மை யாலோ.
பருவமும் முதிர்ந்த தென்றோ அவளென்னை வெறுத்தாள். என்றன்
பெருமிதம் குலைத்தாள்: விட்டுப் பிரிவதே ஆக்கம் எற்கே.

---

* அகல்கிறான்

## 510

ஒருபயன் இல்லா மென்மை மாதரை உரிமைசெய்தாய்,
சிறுநயன் உள்ளத் தில்லை! திருமண வினையே, நச்சே,
பொருளிது ஒன்றே என்று போற்றுமவ் விடத்து, மாற்றார்
விரவுமேல் மண்ணுள் வாழும் தவளைபோல் மறைவில் ஆழ்வேன்.

## 511

பெரியமே லவர்கூட் டத்துள் பரவுறு நோயீ தாகும்
சிறியவர் கொளும்சீர் கட்டு திட்டமே அவர்கட்கில்லை
தருமநீர்த் தோணி யாதல் கருவிலே அமைந்த தாகி
வருவதாம்: சாவுபோல விலக்குதற் கரிதாம் அம்மா!

## 512

பெண்ணின் திலகம் வருகிறாள்.
அன்னாள் கற்பு அழிவுறின்
விண்ணும் இடிந்து வீழ்ந்திடும்!
எண்ணேன்! நம்பேன் யான் இதை!

(திலகம், விமலா வருகின்றனர்)

## 513

தில: அடிகாள், தாங்கள் அழைத்தநற் பெரியோர்,
அடிசில் அறையில் தமதரும் வரவை
நடைபார்த் திருப்பர் (உ) தவறிழைத் தேன் யான்!
தில: உடம்பிற் கென்ன? ஏன்உரை சோர்வு?

## 514

உத்: தலைவலி காரணம். (தில) ஆமாம்! இதுகண்
விழிப்பால் வந்தது. விட்டு நீங்குறும்
தலையினைச் சுற்றி என்கைத் துணியால்
பலமுறக் கட்ட; அதுபறந் தகலும்.

## 515

உத்: பற்றுமோ இதுவே! இது மிகச் சிறிது! *
விட்டொழி அதனை; என்னுடன் வருக:
தில: உற்றநும் தலைநோய் வருத்துவ துணரச்
சித்தமே சோர்ந்தேன்; செய்வது அறியேன்.
(இருவம் அகல்கிறார்கள்.

* (குட்டையைக் கிழித்தெறிகிறான்.)

516

(விமலா கைத்துணி எடுத்துப் பாடி ஆடுதல்)
(516 முதல்-526 வரை இசை)

மிக மிக மிக மகிழ்ச்சி கொண்டேனே—இச்
சவுக்கம் என் கைக் கிடைத்த தின்றே (மிக

கானவன்முதல் காதல்சின்னமே—இதைக்
களவா அடிநீ வருவா அய்என
நாயகன் ஒரு நூறு முறைக்குமேல்—தினம்
நயந்துநயந்து இரந்துவேண்டுவார் (மிக

517

(சிந்து மெட்டு)

எக்கார ணத்தாலும் விட்டுப் பிரியேன்யான்
இச்சவுக் கத்தை என்றே—ஒரு
சத்தியம் வாங்கிஅக் கானவன் அந்நாளில்
தையலாள் கையில் வைத்தான்.

518

முத்துகின்றாள் உடன் கொஞ்சுகின்றாள் அதை
முன்கையில் ஏந்துகின்றாள்
எப்பொழுதும்அதைப் பார்த்தும கிழ்கின்றாள்
இன்பஉரு வாகின்றாள்

519

இத்துணி யின்வேலை அப்படியேஒப்ப
இன்னொன்றில் செய்து கொண்டு
இதைஎன் நாயகற் காக்குவேன்: பின்னரே
என்னஆ மோ அறியேன்!

520

ஆசைகொண் டார்மனம் மோசமா காமல்,நல்
அமைதியே காண்பதற்கு—

(ராகு வருகிறான்.)

ராகு: தன்னந்தனி யாகநீ என்னசெய்கிறாய்?
விம: ஒன்றுனக்கே உள்ளதிங்கு. நீதுடியாதே,
ரா: ஒன்றெனக்கு ஆ? அதுவே என்றுமுள்ளதே!
வி: என்ன அது?(ரா) அன்னதுதான் பேதை மனையாள்

521

வி இத்துணை நீர் ஓஹோஹோ எள்ள வந்தீரோ!
கைத்துணியைக் கொண்டுதந்தால் என்னநல்குவீர்?
ரா) கைத்துணியோ (வி) ஓஹோஹோ ஏது துணியா!
பத்தினிபால் கானவன்முன் தந்த பரிசே!

522

வி அம்மைதில கவதியார்
தம்மிடமி ருந்து அதைப்
பன்முறைதி ருடும்படி
சொன்னீர ல்லவோ!

523

ரா. வல்லை, என்னை, கள்ளத்தால்நீ பற்றினுய்கொல்லோ?
வி: இல்லை இல்லை கைதவறும் அற்றம் பெற்றனன்.
மெல்ல அஃதைக் கொண்டுவந்தேன், ஈதோ காணுமின்.
ரா. நல்லை நீயேமிக வல்லை, என்கரத்தில் வை

524

வி உள்ளத்தே ஓங்கு விருப்பால்
கள்ளமாய் எடுக்கச் சொன்னீர்;
நல்லது! இதனுல் செய்து
கொள்வதைச் சற்றே கூறும்.

525

ரா. யாதுசெய்யின் உனக்கென்ன?
வி. மாதுதில கவதியாள்
வேதனைப்ப டாதிருக்க
நீர்தருவீ ரே துணியை?—

526

அவசியமின்றேல் தரலாமே?
ரா. அவசிய முண்டு ஓர் வினைமேல்:
இவண்நடப் பியாதும் நீ அறியா
தவள்போல் நடப்பாய் செல்அப்பால்.

(விமலா அகல்கிறுள்)

527

க்ச்சிதன் மனையில் கண்ணுறு நிலையில்
இச்சிறு துணியை நீத்துயான் அகல்வேன்;

துச்சமாம் ஒன்றைத் தூண்எனப் பெருக்கிக்
குற்றமார் உளத்தார் கொள்ளுவ தியல்பே.

528

இஃதுதன் வேலையைச் செய்யா திராது.
சித்தத்துச் தீயசிற் றெண்ணம் சேர;
பற்றிய உடன்ஓர் பயன்இன் றெனினும்
முற்றிய காலை நச்சென மூளைக்கும்.

529

குருதியில் தீயன கொதித்து வளரின்
எரிமிகு கந்தகக்கனிபோல் இயங்கும்.
பெரியஅக் கானவன் என்புன் சொல்லால்
அரியதன் உளம்நச் சாயினன், ஆயினன்.

530

ஏனோ இவ்வா றுரைக்கின் றேன் யான்.
கானவன் அதோஒ வருவதைக் காண்மின்.
மோன மோஹன மயக்க மருந்துகள்
தேளன் அழுதுதீம் பான வகையினும்—

531

நேற்றுக் கொண்டுள நறிய நித்திரை
நேர்தல் ஆகுமோ இனிஎந் நாளினும் *
உத்: பார்க்கி றேன்;எனை வஞ்சித் தொழுகவோ!
ரா: நீர் இவ் வாறு ஏன்? ஈதெலாம வேண்டா!!

532

உத்: இடர்பட வைத்தாய் என்னை ஈண்டுநீ நில்லாதே செல்
நட, நட வேண்டா ஈண்டு, நவைசிறிதுளத்தில் கலாது
துடித்துயிர் வாழும் வாழ்வில், ஊரெலாம் தூற்றி நிற்கும்
நடப்புறு வாழ்வே மிக்க நல்லது, அம்யேனையின்.

533

ரா:

ஐயனே உற்றதென்னை? (உத்) அகப்பொருள் அறிய லாமோ
தையலார் வைப்பை யாரே புறத்தினில் தெரியவல்லார்

---

* உத்தமன் தோற்றம்.

மெய்எனக் கண்டேனல்லேன், மனத்தினால் நினைத்தேனல்லேன்
பொய்யவனாகேன் என்றும் களித்து கற்றுபிலே கொண்டேன்

534

கச்சிதன் அளித்த முத்தம் கன்னத்தில் ஒட்டக் காணேன்.
உற்றதை இழந்தும்தான்ஆங் கிழந்ததை உணரானாயின்
மற்றவன் இழந்தோன் ஆகான் அவற்கதை உணர்த்தல்தீதே!
ரா) இத்தகைச் சொற்கள் கேட்கச் செவியிடர்ப் படுமால் ஐய

535

உத்: அற்பனூ ழியர்முதல்
பற்பல வீரர்கைப்
பற்றுபுன் முறையினில்
உற்றனள் ஆயினும்

536

எனக்கது எட்டா தாயின்
மனக்களிப் புடனே வாழ்வேன்
இனிஇது ஆகா தாகா
தினிஎன்றும் ஆகா தாகாது

537

உள்ளத் தமைதியே ஒழிந்தனை!
நெஞ்ச நிறையே நீங்கினை!
மயில்நீள் பீலியிர் நீங்குவீர்!
மாஅ வீரர்காள் நீங்குவீர்!

அவாவினை அறமாய்க் கருதும்
அமர்களே அடியோடு அகலுமின்
கனைத்தெழு பரிமாக் குழாங்களே,
கலங்க வைக்கும் காளா காள்,
ஊக்கம் ஊட்டும் முரசமே,
ஓங்க ஊதும் கொம்புகாள்,
அரச விருதுக் கொடிகளே,
ஆண்மை பிறங்கு சின்னங்காள்!
பெருமை வீறும் பண்டங்காள்!
பெயரும்; நீவிர் நீங்குமின்!
யமனார் சினமு ழக்கமாப்
எரிஉமிழ்ந்து இடிக்கி[illegible]

கடுவாய் உடைய பீரங்கிக்
கருவிகாள், நீவிர் நீங்குமின்!
உத்தமன் உயர்வு முற்றும்
ஒழிந்தது நீவிர் நீங்குமின்!

ரா: அண்ணல் இவ்வாறேனோ?
உத்: புன்மைத் தீயோய்* இன்னே
என் காதலியாள் பரத்தை
என்றே கண்கூடாக்கு

538

இன்றேல், என்றும் அழியா
என்பேராத்மா ஆணை!
ஒன்றுயான் உரைப்பேன் அஃதை
நன்குநீ உணர்ந்து கோடி

539

கொதித்தெழு சினத்துக் காளா
வதனினும், நாயாய் மண்ணில்
உதிப்பது உயர்வுனக் காக்கும்!
ரா: இதுமிகக் கடந்த வாக்கு!

540

உத்:

இருகண்ணும் நேரிற்காணு மாறுநீ காட்டு: இன்றேல்
கடுகளவையமின்றிக் கருத்தொருமித்து ஒப்ப
ஒரு பெருஞ் சான்று காட்டு, இல்லையேல உனது ஆவி
இறும், இது உறுதியாகும். (ரா) என்பெருந்தகையே அண்ணல்

541

உ:

அவளையும் தூற்றி மற்று என்னையும் வதைத்து நின்றாய்
தவமுறை நீத்தாய், மற்றைத் தன் குறை உணர்த்தல் ஆற்றாய்,
பவவினை மீது மற்றைப் பவவினை படிந்து மீறும்;
அவனியுள் மக்களை நோவர், விண்ணவர் அழுது நிற்பர்

542

மற்றொன்று வேண்டா சொன்னேன். நீபுரி வினையே நிற்கத்
தொட்டதீக் குழியாய் நிற்கும் (ரா) தெய்வமே அறமே யான் செய்

* அவன் கழுத்தைப் பிடித்து.

குற்றம்நீ காணாய்! நீயும் மானிடன் கொல்லோ நன்கு
கற்றனை கொல்லோ! உண்மைக் கருத்துநீ உணர்வாய் கொல்லோ!

543

கடவுளே காக்க, உன்னை! சேவகம் இனியான் வேண்டேன்
மடையனும் யானே யன்றோ! மாண்புறு வாழ்வு கெட்டுக்
கடையனாய் வாழு கின்றேன்! கடியசூர் உலகே இன்றே
அடைந்தனன் உன்னால் ஞானம்! அளிக்கின்றேன் நன்றி நன்றி

544

உண்மைநன் னேர்மை யாளர்க் குலகவாழ் வுறுதி யில்லை,
திண்ணியான் நட்பு தந்த தீமையை எண்ணி எண்ணி
மண்ணினில் இனியான் யாவர் நட்பையும் மதியேன் வேண்டேன்
உ) என்ன, நீ சற்றே நிற்றி! நல்லவன், நல்லோன் நீயே.

545

ரா) நல்லவன் ஆகி ஆதல்? அறிவினன் ஆதல் வேண்டும்
நல்லவர் என்னப் பெற்றார் தப்பயன் இழந்த மாக்கள்:
உ) நல்லவள் என்றே என்றன் திலகத்தைக் கருது கின்றேன்
அல்லளும் ஆவள் என்றும் ஆங்குடன் காணும் உள்ளம்

546

நல்லன் நீ என்பேன்: ஆங்கே அல்லனா கவும்யான் காண்பேன்
வல்லஓர் சான்று வேண்டும்: சான்றினால் வாய்மை தோன்றும்
சில்ஒளிர் மதிமு கத்துச் சேயிழை பெயர்இக் காட்டான்
அல்தவழ் மேனிப் பொன்று அழகழிந்திருண்ட தேனோ?

547

கயிறுக ளாக, மற்றைக் கத்திக ளாக தீய
செயிருறு நச்சே யாக, செந்தழல் ஆக, ஆழ்நீர்
கயமுறு சுழியே ஆக, சிந்தையிற் கருதேன், இந்த
நயமிலார் கருமத் துண்மை காணவே நாடும் நெஞ்சம்

548

ரா: நன்று நீவிர் பித்துற்றீர்!
இன்றே ஏனோ இக்கதையைச்
சொன்னேன்! பெரிய பிழைசெய்தேன்
என்றே என்னை நொந்துகொள்வேன்

549

உண்மை நடப்பினை உணர்வீரோ?
உ) உண்மை உணர்வேன், உணர்வுறுவேன்
ரா) நன்று நன்று எவ்வாறோ?
எந்த முறையில் நீர் உணர்வீர்?

550

உத்: ஆஹா. (ரா) 'ஆஹா' என்பீர்
ஆகா தென்பேன் யானே
நாம்காண் முறையில் அன்னார்
கூடார் என்றே சொல்வேன்

551

ஐய, யான் என்ன சொல்லவோ!
ஐயுற வெவ்வா றகற்றவோ!
வெய்ய தீக் காமக் குரக்கியல்
மையலை கொள்வா ராயினும்,

552

நாடியே கடாவை நயக்கும் வெள்
ளாடுபோல் வேசையராயினும்
பீடுசேர் கல்வியே இலனாய்மேம்
பாடிலாக் குடிவெறி கொள்ளினும்

553

மூர்க்க ஓனாய் எனவெறித்த
வேட்கை முறையே கொண்டாலும்;
சேர்க்கை காணல் அரிதரிது!
கேட்பீர்! இன்னும் ஒன்றுரைப்பன்:—

554

நன்றே உண்மை தெரிவிக்கும்
நம்பத் தகுந்த சிலசெய்தி
இங்கங் கேதோ போதுமென்றால்
இன்றே சான்று சில பெறலாம்

555

உத்: வெளியில் நோக்கினள் அவள்என்றே
தெளிவு செய்நீ ஒருசான்றால்

ரா: எளியேனை விட் டிவ்வினையே
ஒழிக வேண்டா வேண்டாவே!

556

ஆயினும் ஒன்று சொல்வேன். அடியனேன் புத்தி கெட்டு
நேயமுன் உண்மை எண்ணிக் கடமையை நினைப்ப தாலும்
சேயிழை கருமம் இஃதில் தலையிட நேர்ந்த தாலும்
நீயிதை உணரு மாறு நிகழ்த்துவேன் ஒன்றிரண்டு

557

நெடும்பொழு தான பின்பே நித்திரை செல்வேன் மேலும்
படுப்பதும் கச்சன் பக்கம் பல்வலிக் கொடுமை; தூக்கம்
விடுத்தவன் படுக்கை மீதே விழித்திருந் தயர்வேன் ஆங்கு
நடப்பதை அறியின் நிற்கே ஒரு சிறுநன்மை ஆகும்

558

தங்களின் கரும மாதி தூக்கத்தில் பிதற்று கின்ற
நெஞ்சுரமில்லா மக்கள் உளர் பலர். அவர்கள் தம்முள்
நம்பெருங் கச்சர் தாமும் ஒருவரே. அவர் தூக் கத்தில்
செஞ்சொலால் வாய் திறந்து பின்வரு மாறு சொன்னர்

559

தேனே கரும்பே திலகவதி யார்க்குந் தெரிய லாகாது
மானே கண்ணும் கருத்துமாக இருத்தல்வேண்டும்எனமொழிவான்.
யான்யார் அறியான் உறக்கத்தால் என்கை வருடிமுன் னணைத்துத்
தானோர் கையை மேல்தூக்கி முகத்தை நெருடி முத்தமிட்டான்

560

எனதின் னுயிரே எனநவின்றே ஓங்கி இழுத்த பெரு முத்தம்
வனக்கன்ஜெருன்றை வேருடனே பிடுங்கு வன்மைத் தன்மையதாம்
தனதோர் காலை என்மீதே போட்டுத் தழுவி முத்தமிட்டு
வினைதான் உன்னைக் கானவன் கை சேர்த்ததென் றேமுச்செறிவான்

561

உ) கொடுமை! கொடுமை! (ரா) அன்று இது. கனவே.
உ) ஆயினும் அதுமுன் உற்றஓர் குறிப்பை
அறிவிப்ப தன்றோ? கனவே ஆயினும்
ஐயுறற் காங்கு இடம்மிக வுண்டு!
ரா) இதனால்
சிறியவும் சாலப் பெரியன வாகும்!

உ) அவளைத்
துண்டுதுண் டாகக் கிழித்தெறி கின்றேன்!

ரா) வேண்டா.
நிதானம் பெரிது. நடப்பில்நாம் யாதும்
கண்டதும் இல்லை. கன்னியும் நல்லளாய்
இருப்பினும் இருக்கலாம். இனிமற் றொன்று:—
கைத்துணி ஒன்று, கனிகள் செடிகளாய்த்
தைத்தது: தங்கள் தேவியார் கையில்
இருப்பதுண் டன்றோ! (உ) யானே கொடுத்தனன்
அத்தகை ஒன்றை. அதுவே அவட்கியான்
முதல்முதல் ஈந்த காதல் சின்னம்.

ரா) அறியேன் அதனையான்: அத்தகைத் துணியால்—
நும்தே வியின்கைத் துணியே:—அதனால்
கச்சிதர் கைவாய் துடைக்கக் கண்டேன்.

உ) அதனு லோஒ? (ரா) அதனு லோ,மற்
றெதனு லோ!இது ஏனைச் சான்றுடன்
அவட்கெதிர் பகர்வதே ஆகும் அன்றோ?
உ) இன்றே உண்மை தெரிந்தேன். இவனை*
எதிர்ப்பதோ? சீ! சீ! இவனையோ எதிர்ப்பது!
பதினு யிரவரின் பலமும் பெற்றிலன்!
ஒருவன்! ஊழியன்! உரம்இல் லாதவன்!
ராகு,

காதல் எல்லாம் ககன வெளியில்
பறந்து ஒழிந்தது. பகைமையே எழுக!
பாதா ளத்துறை இருளே பொங்கிவா!
உள்ளத் தமர்ந்த மெல்லிய அன்பே,
பேரணி முடியும் பிறங்குஆ சனமும்
வேண்டா. ஒழிஅதை. வன்மையே ஓங்குக!
நெஞ்சமே முற்றும் நச்சரா நாவால்
நிறைந்தனை, கருத்த விறிட் டெழுநீ:
ரா) சற்றே பொறுமை (உத்) குருதி காண்பழி.
பழி— பழி— குருதி காண் பழியே.
ரா) பொறுமையே கொள்க! மனந் தடு மாறேல்
உ) இல்லை இல்லை இராகு, கருங்கடல்
நடுவே ஓடும் கடுநீர் என்றும்
தடைப்படா தந்த முறையே யான்கொள்
பகையும் வெறியும் பழிகாண் வரையும்,

* கச்சிதனை

இரக்கம், காதலைக் காரணம்பற்றியும்
வீழ்வதும் உண்டோ? கீழ்நோக் கும்மோ?
(முழங்காலிட்டு)
களங்கமில் விசும்பின் கடவுள்மேல் ஆணை!
வாய்மொழி உண்மையாய் உறுதியாய் வாய்த்து
நிலைபெறலடைய உரைத்தனன் ஈண்டே.

(எழலும், ராகு தடுத்து)

ரா) எழேல் எழேல் *
மங்குதல் அறியா உம்பர்ச் சுடர்காள்,
நீவிரே சான்று!

பழிபடர்ந் துள்ள உத்தமர் என்பால்
என்ன ஏவினும், வன்மையே ஆயினும்
மனமொழி மெய்யால் அவர்க்கே உழைக்க
இராகு உண்மையாய் உறுதி பூண்டனென்.
நீவிரே சான்று (இருவரும் எழுதல்)

562

உ) நட்பினைப் போற்றினேன், வாக்கிலைன்று
நற்பெரும் பதவியும் நல்குவன் இன்றே;
பெற்றனை மகிழ்தி: பிறிதொன் றுளது,
செத்தனன் கச்சன் என ஒரு சொல்லை

563

ஒருமூன் று நாட்குள் நின்வாய் உரைக்க;
இருகாது கேட்டு இன்புற வேண்டும்!
ரா: பெரியீரின் எண்ணம் பிழையாதுண்மை
நிறைவேறி நிற்கும், நேயனைத் துறப்பேன்.

564

அவள்ள் வாழ்க! (உ) 'அவள்ள் வாழ்க'
அவள் பரத்தை! பசப்புக் காரி!
இவண்நீ வருக என்னரு கிருந்தே
இவளை இதமாய்க் கொல்ல வகைசொல்

565

வண்ணப் பேய்இதைக்—கொன்றிட வேண்டும்
எந்தனுக் கினியன்—மந்திரி நீயே.

---

* முழங்காலிட்டு

566

ரா: நன்று நன்று—அன்றும் இன்றும்
என்று மேயான்—தங்கட் குரியன்

(அகல்கிறார்கள்)

களம் . காட்சி. 4

567

(திலகம், விமலா, விகடன்—மூவர் வருகை)

தி: துணைப்பதி கச்சிதர் உறைவிடம் யாண்டோ?
விக: அவர்உறைவிடத்தை அடியேன் உரைக்கவோ?
தி: ஏனோ? (வி) ஏன்அவர் பொருதொழில் வீரர்.
வீரர் உறைவிடம் விளம்புதல் பழியே!
தி: போபோ. அவர்தம் இருப்பிடம் புகல்க.
வி: என்உரை யுள்ளே இருப்பார் அவர்தாம்!
தி: இதன்பொருள் யாது? யான்அறி கில்லேன்
வி: அவர்உறை விடத்தை அடியேன் அறியேன்.
இங்கங் கென்று இயம்புவ தெல்லாம்
கற்பனை யேயாம். வாய்மைக்கு மாறும்
தி: ஆய்ந்து நாடிநீ அறியவல் லாயோ?
வி: அகில உலகினும் ஆய்வு நடாத்துவன்
கடாவைச் செலுத்தி விடைகொண் டுணர்வன்.
தி: அவரைக் கண்டு ஒன்றுநீ அறிவி
என்பெரு நாதர் இயைந்துளார் என்றும்
காரியம் கடிதில் கனியாம் என்றும்
சொல்லுக, இங்கு வரவும் சொல்லுக.
வி: மனித ஆற்றலில் அமைந்ததே இஃது
ஆதலின் இதனை ஆற்ற முயலுவன்.*
தி: விமலா, கைத்துணி வீழ்ந்தது யாண்டோ?
வி: அறியேன் அம்மா! (தி) உண்மையாய் உரைப்பின்
என்கைப் பணத்தை இழப்பதின், இஃது
துன்பம் தருவதே. தூயர் கானவர்.
அழுக்கா றிழிகுண ஐயுற வறியார்.

---

* அகல்கிறான்.

இன்றேல் இஃது ஒன்றே போதும்!
கள்ளம் எல்லாம் உள்ளம் பிறக்கும்.
வி: ஐயுறூர் கொல்லோ? (தி) யாஅர் அவரோ?
அத்தகை இயல்பை அவ்வூர்க் கதிரவன்
பிறந்த பொழுதே முகந்து கொண்டது.
வி: வருகிறூர் அதோஒ. (தி) தக்க சமயம்!
கச்சித னேஅவர் கொள்ளும் வரையும்
விடேஎன் விடேஎன்:* அடிகாள், உடல்நிலே?
உ: நன்று. நன்று. அருமை நங்காய்,
A உண்மையை மறைத்தல் மிகமிகச் சிரமம்!
திலகம், நின் சுகம்? (தி) நன்றே தேவா,
உ: S கண்ணே நின்கை கசிந்திருப் பதுஏன்?
தி: இளமையே தாங்கி இடர் அறி யாநிலே!
உ: பிறருக் குதவும் விரிந்தபே ருள்ளம்
என் றுஇக் கசிவு எடுத்துச் சொல்லுமால்!
வெம்மையும் குளிரும்! நின்கை வேண்டுவ—
தனிமைசேர் ஒடுக்கம், நோற்றல், தொழுதல்,
உணவை ஒழித்தல், உடலே ஒறுத்தல்.
இளமையின் வீறிது தன்நெறி விலகும்
வெள்ளே மனத்து நல்ல கையிது!
சொல்வது சரியே; தக்கதே: ஏனெனின்
தில) உள்ளத்தை அன்றுகொண் டுய்த்தகைக் கையே
உ) வண்ணக் கையிது முன்னுள் முறையில்
உள்ளம் ஒன்றித் தான்வெளி நீண்டது
இந்நாள் முறைபற் றின்றிநீ ளும்மே!
தி) அறியேன் இதையான். சரி,நும் வாக்கு?
உ) அதேது 'வாக்கு'? அன்பே; அறிவி.
தி) கச்சிதன் வந்து தங்களேக் காண
அறிவித் துள்ளேன் ஆவன புரிக
உ) கண்ணுறு பீளே இன்னற் படுத்தும்
சற்றே கைத்துணி கொடுத்துநன் ருற்று.
தி) தேவா இதோஒ (உ) யான்தந் தஅது
தி) அஃதுஈண் டிலதே (உ) இலது! ஊம்ம்.
தி) உண்மை! அஃதிலது (உ) ஆபெருந் தவறு!
மந்திரக் காரி மலேயாளத்தாள்
முன்நிற் போர்தம் மனஉணர் வறிவாள்

A அயல் நோக்கி S பிடித்து * உத்-வருகிறுன்

என்நற் றாயிடம் இதனைக் கொடுத்து
இத்துணி உன்கை இருக்கும் வரையும்
கணவன் உன் காலடி பணிந்து நடப்பான்
யார்க்கும் இனியள் ஆகுவை நீயும்:
கைவிட் டத்துணி தவறு மாயினும்
இன்றேல் பிறர்க்கதை நீவிரே ஈயினும்
தந்தையர் தாயரை வெறுத்துத் தள்ளி
புதிய காதலை நாடித் திரிவர்
என்று கூறினள். என் தாய் சாம்முன்
என் கை அத்துணி ஈந்து மகனே
திருவரு ளாலே மணம்புரி நாளில்
அவள்கைக் கொடுநீ' என்றாள் யானும்
நின்கைத் தந்தேன் நீஅதைப் பேணுக
கண்மணி யேஎன அதைக்காப் பாற்றுக.
இழப்பதும் ஈவதும் தருங்கே டொப்பப்
பிறிதொரு கேடு பார்க்கலா காதே!

தி) உண்மையோ இஃது? ஆமாம் உண்மையே
மந்திரஞ் சொல்லி அமைந்த அந் நெசவு
இருநூ றட்டை அகவை முதியோள்
வெறியா டிக்குறி கூறுங் காலை
வினைத்திறன் படைத்தாள்! விளக்கமார் பட்டு!
நூலிழை தந்த புழுவும் தூயன!
தாழிப் பானையில் மேவிய மாதரின்
மார்பைக் கீறிப் பீறிடு குருதியின்
சாயம் தோய்த்தது (தி)சத்திய மாகவோ?

உ: சத்தியம் சத்தியம் முக்கால், சத்தியம்!

தி: ஐயோ ஐயோ, அதனையான் கொள்ளா
திருந்தே னில்லையே! (உ) ஏன் அவ் வாறே?

தி: திடுக்கிடு மாறும் சிடுசிடுப் பாகவும்
ஏனோ தாங்கள் பேசுவ தைய?

உ: கைத்துணி தொலைந்ததோ? அகன்றதோ, அஃதுன்
கைவசம் இல்லையோ! (தி) கடவுளே காண்பார்

உ: என்ன பதில்இது.(தி) இழந்ததா யில்லை.
இழப்பினும் என்ன! (உ) என்னசொன் னாய்நீ!

தி: தொலைய வில்லை என்றுசொன் னேனே!

உ: சென்றுநீ அதனைக் கொண்டுவா பார்ப்போம்

தி: கொண்டு வருகிறேன்: இப்பொழு தன்று. யான்
கேட்டதை மாற்றும் மார்க்கமோ ஈது?
கச்சற்குத் தாங்கள் தயவுகாட் டுங்கள்,

உ: கைத்துணி அதனைநீ எடுத்துவா. என்மனம்
கலக்குறும் (தி) சரிசரி அவரினும் மிக்கார்
யாவரே தங்கட் கிருக்கின் றூர்கள்!

உ: கைத்துணி யாண்டு? (தி) கச்சிதன் கதி என்!

உ: கைத்துணி யாண்டு? (தி) கச்சிதர் யாண்டும்
தங்களை நம்பித் தம்வாழ் வேற்றங்
காண விருந்தவர். தங்க ளுடனே
எத்தனை யோமுறை இன்னற் பட்டவர்.

உ: கைத் துணியாண்டு? (தி) உண்மையாய் உரைப்பேன்
தங்களின் நடைமுறை தவறுடைத் தாகும்

உ: கை கடந்தது!* (வி) ஐயுற் றனர்கொல்?

தி: என்றுமே இல்லா முறையிது புதுமை!
கைத்துணி ஏதோ விசித்திர முடையதே!
இழந்தனன் அதனல் இடர்ப்படு கின்றேன்.

வி: ஓராண் டல்ல ஈராண்டு பழகினும்
ஆடவர் இயல்பை அறிவது அரிதே.
ஆடவர் இரைப்பை, பெண்அதன் உணவு.
பசித்தால் கொள்ளும், சுவைத்தபின் தள்ளும்
கச்சரும் எனது கணவரும் அதோபார்.

(கச்சிதர், ராகு இருவரும் வருதல்.)

568

ரா வேறுஎவ் வகையும் இல்லை
காரியம் அவரால் தானே
நேர்உற முடிய வேண்டும்.
பார்அதோ வருகின்றூர்கள்

569

நன்மைஆம்நேரம். சென்று நயந்துநீர் வேண்டிக் கொள்ளும்.
தி) செம்மைசால் கச்ச, கொண்ட காரிய முடிவு கூறும்?
க) அம்மையே யான்முன் வேண்டிக் கொண்டதே: அவர்பால் தாங்கள்
என்குறை எடுத்துச் சொல்லி எனக்குயிர் அளித்துக் காத்து—

570

அன்னவர் அருளுக் கென்றும் பாத்திரன் ஆக வைப்பீர்.
என்றும்யான் தொண்ட ஞகப் பணிந்தவற் கடிமை செய்தேன்

---

* அகல்கிருன்.

பிக்குதல் சகிக்க ஆற்றேன், செய்துள்ள பிழைதாம் என்னே !
முன்னைஎன் ஊழியங்கள், இன்றுள மனவருத்தம்,

571

இனிவருங் காலம் யான்கொள் நன்னடை யாவும் சேர்த்தும்
கனிஅவர் நட்பை மீட்டு நல்குதற் கில்லா வாறு
மனிதரிற் கடைய னாகக் குற்றம்யான் இழைத்தே னாயின்
வினையது யாது என்றே தெரியவே விழைகின் றேனே

572

தெரிந்தபின் திருப்திகொண்டு, பிறிதொரு தொழிலைப் பற்றிச்
சிறந்தவூழ் வரவை எண்ணி வாழஓர் வகையாம் அன்றோ ?
தி) அறந்திறம் பாத நல்ல கச்ச,என் பரிவு யாவும்
திறந்தமா வெளியிற் சென்ற; திருச்செவி ஏற்பதில்லை.

573

நாயகர் தாமும் முந்தை நாயகர் அல்லர்; அன்னார்
சீர் அகம்போலக் கொண்ட தோற்றமும் மாறு மாயின்
யார்இனங் காண வல்லார்? யான்பெறு ஆற்றல் முற்ற
நேருற நிற்கப் பேசி நின்றனன்: நிதான மற்ற—

574

பேச்செனக் கருதி ஆங்கே யான்வெறுத் தொதுக்கப்பெற்றேன்:
சாத்திய மானதெல்லாம் செய்கிறேன். எனதின் மிக்க
ஆத்திரம் அதிகம்கொண்டே ஆற்றுவன்; உறுதி, நம்பு:
காத்திருந் தமைதி யாகக் காரிய சித்தி காண்பாய்.

575

எா) தேவர்தாம் சினந்துள்ளாரோ?(வி)வழக்கமாயுள்ள சாந்தம்
மேவியதாக இல்லை, இப்பொழு தேதாம் சென்றார்.
எா) கோபமே கொள்ளார் என்றும்: கொடியபீ ரங்கிவேட்டில்
ஏவல்செய் திருப்பு முற்றும் எரிந்துதீச் சாம்ப லாகி—

576

காற்றொடு கலந்த நாளும், கைத்துணைத் தம்பி ஆங்கு
வேட்டினால் பேய்அடித்த முறைமையில் விழுந்தநாளும்
காட்டினாரில்லை கோபம். கண்டுளேன் நேரில்: மாறு
பாட்டினில் ஏதோ மர்மம் உளததைச் சென்றுதேர்வேன்.

577

தி: அப்பா, ராகு, செல்லுவாய்.* ஏதோ
அரசியல் பற்றியோ, வஞ்சியின் செய்தியோ,
முசிறி மக்களின் முறையிலா வினையோ,
உள்ளக் கலக்க முற்றனர். ஆடவர்
நலந்தரு பெரும்பொருள் நாட்டம் உடையவர்
ஆயினும், ஆங்கெழு ஓரொரு அற்ப
சிறுவினை பற்றிச் சினமுறும் இயல்பினர்.
கையுறு சிறுவிரல் கொண்ட புண்வலி
மெய்யுறுப் பெல்லாம் நோய்தரும் அன்றோ!
இன்ன தன்மையே! மேலும் ஒன்று:
மக்கட் பிறப்பே தெய்வப் பிறப்போ!
புதுப்பெண் ணைகப் போற்றுமா தரவை
எத்துணை காலம் எதிர்பார்ப் பதுவே!
விமலா, என்வினை முற்றிலும் வம்பு:
அறிவிலாக் குறையே, அவர்தாம் என்னை
வெறுப்பதாய் முன்பு வெகுளி கூறினேன்.
இந்நாள் கருதின் பழிபெறு சான்றோய்ப்
பொய்ப்பழி அவர்மேல் புகன்றதாய் உணர்வேன்.

வி: அம்மையே அதுதான் நும்மைப் பற்றிய
குற்றம் கொடுமைகள் இன்றி; நீர்சொல்
அரசியல் வினையே ஆகுக. ஆங்கும்
கடவுள்காப் பாற்றுக. (தி) காலச் செயலிது!
யான்ஒரு குறைக்கும் இடம்வைத் திலனே.

578

வி: ஐயுறு வோர்க்கெச் சொல்லும் அமைதியை நல்கா தம்மா,
ஐயுறுவோர்த மக்குக் காரணம் அமையவேண்டா
ஐயுறு இயற்கை யாலே ஐயுறுகின்றார். மற்று
ஐயுற வோர்தான் தோன்றி அரக்கனுய்ப் பிறப்பதாகும்.

579

தி) உத்தமர் மனத்துள் அந்த அரக்கன்உட் புகாதவண்ணம்
இக்கணம் கடவுள் காக்க. (வி) ஆதக அவ்வா றம்மா!
தி) இப்பொழு தங்குச் சென்று, இயையுமேல் நினக்காப்பேசி
நற்பய னடைய என்னுல் ஆவன யாவும் செய்வேன்.

---

*ராகு அகல்தல்.

580

தி: கச்சித ரேநீர் ஈண்டே நிற்பீர்.
க: மிக்க நன்றி தங்கள்பால் உடையேன்

( திலகம் விமலா மறைதல், ரம்பை வருகிருள் )

ரம்பை) கச்சித ரேஉமைக் கடவுள்காப் பாற்றுக
கச்) ஏனே வீட்டைவிட் டிங்குவந் துற்றனே?
அன்பே, அணங்கே, அரம்பா, யானே
நின்மனே நோக்கிப் புறப்பட் டுள்ளேன்

ரம்) நும்மனே நோக்கி யான்வந் துற்றேன்!
ஏழு நாட்கள் வாரா திருப்பது!
இரவு பகலாய் நூற்று அறுபத்
தெட்டுமணி நேரம் எட்டிப் பார்த்திலீர்:
பிரிந்த காதலர் பேதைமை நெஞ்சில்
ஒருமணிப் பொழுது ஒருநாள் ஒக்கும்,
அரிது அரிது அதனே அளப்பது!

கச்) ரம்பா, நீஎன் குற்றம் பொறுத்தி
ஏதோ தோயான் எண்ணிக் கவலையில்
மூழ்கி இருக்கிறேன்: ஒன்று மொழிவேன்:
இத்தனே பெருநாள் வாராக் குறைக்கு
ஒருசில நாட்கள் உன்னே டிருந்து
ஈடு செய்கிறேன்: என்னரு ரம்பா.
*இத்தகைக் கைவினே ஒன்றுநீ செய்துதா.

ர) ஐயா கச்சிதர், ஏதிது? சொல்லும்.
காதலர் நல்கும் புதுமைப் பரிசிது!
வாரா மைக்கிதோ வகைதெரிந் துள்ளேன்.
இதுஒரு எடுப்போ! நன்று! நன்று!

கச்) போதும், பேதாய். பேய்வாய்ப் பிறக்கும்
இழிதகை மொழிகள். வெளியில் இறைப்பாய்.
கன்னி ஒருத்தி காதலால் எனக்கு
அளித்த பரிசென ஐயுறு கின்ருய்.
இல்லை இல்லை உண்மையாய் இல்லை.

ர) பின்னே யாரதோ அஃது? (க) பெண்ணே,
யாதும் அறியேன் யானே. அறையில்
கண்டெடுத் ததுபெறுங் கைவினே போற்றினேன்

* கைத்துணியைக் கொடுத்து.

உரியவர் உசாவிப் பெறஇவண் வருவார்;
வருமுன் கைவினைப் பிரதிநீ வகுப்பாய்.
இன்னே செல்நீ, இதுபோல் ஒன்றுசெய்.
ர) இன்னே செல்வது ஏனோ? சொல்லுதி.

581

க) காத்திருக் கின்றேன் இங்கு தளபதி தன்னைக் காண.
சேர்த்தொரு பெண்ணைக் கோடல் சிறப்புடைத்தன்று. மேலும்
பார்க்கிற முறைமையன்று (ர) என்முறை யன்று? சொல்க.
க) நேர்ச்சியின் றென்ப தன்று. (ர) நேர்ச்சியின் றென்ப
தொன்றே.

582

ர) சிறிது தூரம் என்னுடனே
வருக நீயே விரைவாக:
இரவுப் பொழுது இன்றே நீ
வருவாய் சொல்லோ பதில்கூறு?

583

க) சிறிது தூரம் உன்னுடன் யான்
வருவேன். இங்கு பெரியார்தம்
வருகை நோக்கி இருக்கின்றேன்
விரைவில் அங்கு வந்துறைவேன்.

584

ர) நன்று நன்று நீர்
வந்தால் யானிடங்
கண்டு, பொருந்தந
டந்து கொள்கிறேன்.*

* அகல்தல்

## களம் 4 காட்சி 1

585

(முசிறி அரண்மனை முற்றம்.)

ரா) கருதுவீரோ அவ்வாறு?
உ) 'கருதுவீரோ' என ராகு,
ரா) மறைவாய் முத்தம் இட்டால் என்?
உ) நெறியிலக் கான தீமுத்தம்.

586

ரா) தனிமையாக, ஒரு
மணிப்பொழுதே, ஒரு
வனிதை நண்பனுடன்
புனித மாயுறையின்?

587

உ) தூய நெஞ்சினர் ஆனாலும்
பேயங் குதிக்கும் போர்புரியும்.
மாயை சூழ மனமிருண்டு
தேவைத் துறக்கத் துணிவூட்டும்

588

ரா) நெறிஅவர் தவறார் ஆயின்
குறைஅதில் யாதும் இல்லை.
சிறியஓர் துணியை யான்என்
பிரியகா தலிக்கே ஈந்தால்?

589

உ) என்னவோ-(ரா)பின், அது
கன்னியாள்-தன்னதே!

590

உ) உரியவள் ஆதலாலே பிறர்க்கதை ஈந்து நிற்கும்
உரிமையும் உடையள் என்றே எண்ணுவன்; தவறீதன்றே!
அரியகன் மானம்காத்தல் அவள்பொறுப் பாதலாலே
உரிமையை எண்ணி அஃதை ஊரினுக் களிக்க லாமோ?

591

ரா) பெண்பெறு மானம் என்றல்
கண்பெறாக் காட்சி யாகும்.

எண்ணின் அஃதில்லா தாரே
'கொண்டுளோம்' எனமுன் நிற்பர்.

592

மற்றுஅத் துணியைப் பற்றி? (உ) மறப்பதே நன்மை ஆகும்.
செத்ததன் நாற்றங் கண்டு பறவைகள் சூழ்தல் போலப்
பற்றும்அந் நினைவுஎன்னை: கச்சிதன் கொண்டதாகச்
சொற்றனை அன்றோ நீதான், (ரா) ஆம்அதற் கென்னை ஈண்டு!

593

உ) அதுதான் ஈண்டு சரியா காதே:

ரா) அவன் நுமக் கூறு செய்வதை, யானே
நேரிற் கண்டதாய் நவின்றதும் உண்டோ?
கொச்சை மகளிர்தம் விருப்பால்,-இன்றேல்
துச்சர்தம் விடாப்பிடித் தொடர்பால், தமது
விரகம் தீர்ந்தபின் தூற்றும் விடர்போல்
கச்சிதன் பிதற்றநீர் கேட்டதும் உண்டோ?

உ) ஏதேனும் அவன் கூறிய துண்டோ?

ரா) உண்டு உண்டு உம்ம்.........
ஒன்றுமக் குரைப்பேன். உண்மை நடப்பை
இல்லைஎனப் பொய் சொல்வதே யன்றி
வேறொன் றறியான்: இதுமிக உறுதி.

உ) சொன்னது யாதோ? (ரா) உண்மை நடப்பு
யான் கண் டறியேன் (உ) என்ன! என்ன?

ரா: படுத்து—(உ) 'படுத்து'! அவளுட னேஒ?

ரா: அவளுடனே தான்! அவளுடனே தான்.
எவ்வகை முறையினும் இனிநீர் கொள்க.

உ) சீசீ—கேவலம்—கைத்துணி—முறைசெயல்—
கைத்துணி—முறைசெயல்—
தீவினை புரியின் முறைசெயல் தூக்கு!—
தூக்கு முதலில்—முறைசெயல் பிறகே,
ஏனோ எனக்கிந் நடுக்கம்? இருள்திரை!
இயற்கை அன்னை எச்சரிக் கின்றாள்!
புன்மொழி அன்றிது! பரம்பொரு ளேஎனை
ஆட்டிநிற் கின்றது! ஆமாம் அவர்தம்
செவிகளை இதழ்களை, மோந்த மூக்கினை*!

---

* அரிவதாய்ப் பாவனை

இவையும் நடப்பவோ நடந்தவோ—சே! சே!
கைத்துணி—முறைசெயல்—கடிப்பேய்—பேஎய்
(மயங்கி வீழ்தல்)

594

ரா) நடத்துக, மருந்தே நன்ருய் நடத்துக: இவ்வாறேதான்
மடையர்கள் சிக்கிக் கொள்வர்: மறம்அறி யாத தூய,
நடைவில காத மாதும் தன்பெயர் நாறி நிற்பாள்.
அடியனேன் அழைக்கின்றேனே, உத்தமா, தேவா தேவா,

595

ரா) யார்?கச் சிதரோ* (க) என்ன நடந்தது?
ரா) தேவர் வலியால் துன்புறு கின்ருர்.
நேற்றும் வந்தது இஃதிரண் டாமுறை.
க) செவிப்பொருத் துக்களில் நன்ருய்த் தேயும்.
ரா) வேண்டா வேண்டா. வலியே தானய்
விலகுதல் வேண்டும். இன்றேல் வாயில்
நுரைகள் தள்ளி வெறிக்குள் ளாக்கும்.
அதோபார் அசைகிருர். அவர்எழுந் தகன்றபின்
சிலயான் நும்முடன் கலக்கவேண் டியஉள.
நீரே சற்றே வெளியிருப் பீரே B
துளபதி, ஏது; தலையினிற் காயம்
உற்றதோ? (உ) நீயே எள்ளுகின் றனேயோ?
ரா) நும்மையான் எள்ள என்றும்நே ராது?
வீரஆண் மகனய்ச் சீர்உற வேண்டுவன்.
உ) தோணியின் துணைவன்! பேய்! புன் விலங்கு!
ரா) அவ்வா ருயின் பட்டண மக்களில்
பெரும்பா லார்நற் பேயொடு விலங்கே!
உ) அவனும் அதனை ஒப்புகின் ருனே?
ரா) ஐயனே தளரேல்: ஆண்மை ஓங்குக!

596

இல்லற வண்டி யீர்க்கும் இருவரில் மீசை யுள்ள
வல்லஆண் மக்க ளெல்லாம் நும்வகைப் பட்டோ ராவர்.
வல்லிருட் பொழுது வேற்று அமளியில் கிடந்து தம்மை
நல்லவ ராகச் சொல்வார் உளர் இன்றும் லட்சம் பேர்கள்

597

தங்களின் நிலையே மிக்க சிறப்புடைத் தாகும் என்பேன்
அஞ்சுதற் கின்றி நல்ல அமளியில் பாத்தை யாகக்

* கச்சிதர்வருதல். B. கச்சிதர் வெளி ஏகல்

கொஞ்சிய பெண்ணைக் கற்பில் மிக்கவள் போலக் காட்டல்
வஞ்சகப் பேயின் எள்ளல் நரகத்தீ வெம்மை போலாம்

598

அறிவேன் அறிவேன் யானே என்னிலை அறிந்த பான்மை
தெரிவேன் அவள்தன் போக்கும். (உ) தெரிந்துளாய் யாவும்நீயே
உறுதியாய்ச் சொல்வேன் (ரா) சற்றே ஒதுக்கத்தில் நின்றே, மிக்க
பொறுமையே தாங்கும் நம்போல் பெரியவர்க் கடுக்க ஒண்ணு—

599

வருத்தத்தால் தாங்கள் வீழ்ந்து கிடக்கையில் கச்சன் வந்தான்
பொருத்தமாய்ச் சிலயான் சொல்லிப் போக்கினேன்,
பின்னும் மீண்டு
திரும்பிவந் தென்னைக்காண வேண்டினேன். ஒத்துக் கொண்டான்.
இருப்பது தெரியா வண்ணம் நீர் மறைந் தமர்தல்வேண்டும்

600

கதையினைச் சொல்ல வைப்பேன். நீர்அவன் முகத்தில் ஆங்கு
விதவிதமான நிந்தை பழிப்பவ மதிப்புக் காட்சி
வதிவதை உணர்தல் வேண்டும். மற்றுநம் மனைவியோடு
முதல்முதல் தொடர்பு கொண்ட முறையினைக் கூறுங்காலை—

601

ஆங்கெழு மெய்ப்பா டெல்லாம் ஐயநீர் உணர்தல் வேண்டும்.
தாங்குவீர் பொறுமை முற்றும், தன்மையை இழப்பீர் என்றே
வீங்கிய தாபங்கண்டே இதனையான் விளம்புகின்றேன்
உ) ஈங்குநீ அறிவாய் ஒன்று, யாதொன்றும் அறியான் போல

602

ஊமைபோல் பொறுமைகாட்டி ஊரையே அழிக்க வல்லேன்!
ரா) ஆம்இது குற்றம் இன்றே! ஆயினும் காலம் நோக்கின்
மேன்முறை யாகும்! தாங்கள் மறைவது இனிதே இன்னே.*
யான்இனி ரம்பை பற்றிக் கச்சனை உசாவி நிற்பேன்.

603

இச்சையை ஊட்டி அன்னாள் பொருள்பறித் தியங்கு கின்றாள்
கச்சிதன் மீது என்றும் கனத்தஓர் பித்துக் கொண்டாள்
நச்சிய பலரை வீழ்த்தி ஒருவனால் தான்வீ மாறல்
கொச்சைபுன் மாத ரார்க்குக் கொடிவழி அமைந்த நோயே,

* உத்தமர் மறைதல், B. (தனிமையில்)

## 604

ரம்பையின் கதைஎடுத்தால் நகைப்பவன் அடக்க ஆற்றான்.
வந்தனன் இஃதே : அந்த உத்தமன் நகைப்பைக் காண
வெம்பியே வெறியனாவான். தனதுவெள் ளறிவினாலே
அங்கவன் சிரிப்பு ஆட்டம் அனைத்தையும் பிறழக்காண்பான்

(கச்சிதன் வருகிறான்)

## 605

துணைப்பதி, நலமோ ஐய, (க) துணைப்பதிப் பட்ட மின்றி
இனைவுறுங் காலை நீவிர் அப்பெயர் இயம்பக் கேட்டு
மனநலங் குறைவே (ரா) ஆனால் திலகத்தை விடாது பற்றும்
வினைநலங் காண்பீர் உண்மை.* ரம்பையால் ஆவதாயின் ?

(ஆறுசீர்த்தனி அடிகள்)

## 606

எளிதினில் முடித்து வைப்பாள். (க) அறிவிலாப் பேதை! பாவம்!
உ) இதற்குளா யவன்சி ரித்து நிற்கிற விதத்தைப் பாரும்!
ரா) பெண்உறு காதல் யானே இத்துணை பார்த்த தில்லை!
க:) உண்மையாய் என்மேல் ஆசை கொண்டுளாள். பாவம் பேதை!
உ) அவன்அதை மறுத்து மெல்ல மழுப்பியே சிரித்தல் பாரும்!
ரா) அக்கதை என்ன ? (உ) நன்று, இப்பொழு திராகு முன்பு
உற்றதைச் சொல்ல வைப்பான் : மிகமிக நன்று, நன்று!
ரா) நீதன்னை மணப்ப தாகச் சொல்கிறாள். உண்மை என்ன ?
க) ஹாஹா! (உ)வெற் றியில்ம கிழ்ச்சி! வெற்றியில்
மகிழ்ச்சி கொள்வார்!
கச்)பரத்தையை நான்ம ணத்தல்! புத்திஓர் சிறிது இங்கு
இருக்கிற தறவே சூன்ய மாகநீ எண்ண வேண்டா.
ஹாஹா ஹா (உ) ஆமாம்! வெற்றி கண்டவர் சிரித்து நிற்பார்!
ரா) அவளைநீ மணப்ப தாக ஊரெல்லாம் ஒரேஎ பேச்சு.
க) உண்மையாய்? (ரா) உண்மை. இன்றேல் வீணன்என்
றென்னைச் எள்க!
உ) சரிசரி நமக்கு நல்ல சூடிது. நன்று, நன்று!
க) குரங்கது புத்தி கெட்டு இப்படிக் கூறி நிற்கும்
பொருந்ததற் புகழ்ச்சி யாலே, பொங்கிய காத லாலே
உரைக்கின்றாள் போலும். யானோ யாதொன்றும் உரைத்த
தில்லை.

* மெலலிய குரலில்.

உ) இராகு ஓர் குறிப்புக் காட்டிக் கதையினைத் தொடங்குகின்றான்!

க) இப்பொழு திங்கிருந்தாள்: எங்குச் சென்றாலும் என்னைப்
பற்றியே தொடருகின்றாள். முன்பொரு நாளில் வஞ்சி
உற்றவரோடு எக்கர் உலாவிநான் பேசி நின்றேன்
மற்றவள் அங்கும் வந்து இப்படிக் கழுத்தைக் கட்டி

உ) 'ஆசை நாயகனே' என்று கொஞ்சிடுவள் போலும்! அந்தச்
சைகைஅவ் வாறு காட்டும்! (க) தொங்குவாள் மேலே
சாய்வாள்

பாசமாய் அழுவாள் பற்றி இழுக்கிறாள் துடித்து நிற்பாள்
ஆஹஹா ஹாஹா ஹாஹா (உ) அவனைஎன் அறைக்குள் கொண்டு
சேர்த்ததைச் சொல்லு கின்றான். சரிசரி உனது மூக்கு
தெரிகிற ததனை எந்த நாய்க்கிரை யாக்கல் என்றே
அறிகிலேன்! (க) அவள்கூட் டுறவை யானகற் றிடுதல்வேண்டும்!

607

ரா) என்ன இது. அதோ வருகிறாள் பாரும்!

க) நறுமணம் புனையும் புன்மைசால் விருகு:
என்னைத் தொடர்வதில் உன்கருத் தென்ன?

ரம்) யானே ஏனோ தொடர்வேன்! உன்னைப்
பேயும் அதனைப் பெற்றதும் தொடர்க.
ஏனோ என்னிடம் கைத்துணி அளித்தனை?
யான்ஓர் பேதை அதைப்பெறு தற்கே!
அதைப்போல் கைவினை ஆற்ற வேண்டுமாம்!
அதேபோல் கைவினை!! அறையில் கிடந்ததாம்!
யார்அங் கிட்டனர் அதுதெரி யாதாம்!
தனுக்கு விறலி எவளோ தந்தது!
யானும் அதேவினை செய்ய வேண்டுமாம்!
தந்தவ ளிடமே கொண்டுசேர் அதனை:
யான்அது போல்வினை ஆற்றேன், ஆற்றேன்!

க) என்ன! இனிய ரம்பா, ஏன் ஏன்.

உ) அஃதென் கைத்துணி யாகவே இருக்கும்!

ர) இரவு உணவுக் கொல்லுமேல் வருக,
இல்,றேல்; பின்யான் அழைப்பின் வருக.

ரா) நீவிரும் பின்செலும்: அவள்பின் செல்லும்.

கச்) ஆம்யான் செல்கிறேன். இன்றேல் தெருவெலாம்
தூற்றிச் செல்வாள் (ரா) போனகம் அங்கோ?

க) பெரும்பா லும்இன் றங்குதான் நடக்கும்.

ரா) யானும் ஒருகால் வரலாம் அங்கு.
நும்முடன் பேச வேண்டுவ சிலஉள
க) நல்லது வருக. வருவது உறுதியோ?
ரா) பார்க்கிறேன். ஈண்டு சொல்வதற் கில்லை.
(கச்சிதர் அகல்தல்)

உ) (முன் வந்து—6 சீர்த் தனி அடிகள்)

608

எப்படி அவனை யானே கொல்லுதல் ஆகும் ராகு?
ரா) தப்புறு செறியில் அன்னான் சிரித்ததைக் கவனித்தீரோ?
உ) ஆம்கவ னித்தேன் (க) நீவிர் கைத்துணி அதைக்கண் டீரோ?
உ) ஆம்அது என்னதாமோ? (ரா) தங்களின் துணியே என்று
கையடித்துறுதி சொல்வேன். நும்பெரு மனைவி யாளை,
பேதையை அவன்தான் தூற்றும் பான்மையைப் பார்த்தீர்
அன்றோ?
அவள்அதை அவனுக் கீய, அவன்அதைப் பிறருக்கீந்தான்.

609

உ) ஒன்றிரண் டல்ல நீள ஒன்பதாண் டவனை மெல்லத்
துண்டுதுண் டாக வெட்டிக் கொன்றுஎன் துயரம் தீர்வேன்.
அன்னவள் மென்மை என்னே! அழகென்னே!
இனிமை என்னே!
ரா) இங்கினை வாகா தாகா தியாவும்நீர் மறத்தல் வேண்டும்

610

உ) அவள்அழிந் தொழிதல் வேண்டும். இன்றிர வழிதல் வேண்டும்
அவட்கினி உய்வுஇல்லை அகற்றினேன் இரக்கம் எல்லாம்;
தவப்பெருங் கல்இந்நெஞ்சம், தட்டினல் கையே நோகும்.
அவளினும் இனியாள் இந்த வையத்தில் யாரே யுள்ளார்?

611

மணிமுடி அரசர் மாட்டே இருந்துஅம் மன்னர் தம்மைப்
பணியுமாறேவல் கொள்ளும் பௌருஷ முடையாள் அன்னாள்
ரா) நினைவிது தவறு; வேண்டா. (உ) அவளோநீ தூக்கில் ஏற்று:
தனிஅவள் பெற்ற சீரைச் சொல்வதில் தீங்கு யாதோ!

612

தையலில் வல்ல ளாகத் தனிப்பெரு வினைகள் செய்வாள்;
வெய்யதி விலங்கு மாற வீணையை மீட்டி நிற்பாள்

பையரா ஒடுங்கு பண்ணுள், பணிந்த இன்மொழியாள், விந்தை
மெய்யறி வுடையாள் கொண்ட மேன்மையை மொழியலாமோ!

613

ரா) இத்தனை இருந்தும் கெட்டால் இவளினும் தீயள் யாரே?
உ) நிச்சய மாகச் சொல்வேன். ஆயிரந் தாமும் தீயள்
வித்தக,இன்கு ணங்கள் வாய்த்தவள்! (ரா)'இன்கு ணங்கள்'
உத்தம இன்குணங்கள்! (உ)ஆம் அதை மறுத்தற்கில்லை

614

தவறினள் அந்தோ! ராகு, தவறினள் பாவம்!(ரா) தாங்கள்
அவனிலை கண்டு நெஞ்சம் இளகுவீ ராயின், அன்னாள்
எவரொடும் பழகி வாழப் பொதுமையாய் வைத்தல் சாலும்!
இவண்அவ மானம் நிற்கே; மற்றவர்க் கியாதுமில்லை!

615

உ) துண்டுதுண் டாக வெட்டித் தொலைப்பன்என் மானம்தீர்த்தாள்
ரா) பெண்அவள் ஒழுக்கங்கெட்டாள்!(உ) என்அடிப் பணியா
ரா) இன்னமும் பெரியகேடு! (உ) ராகு, நீ சற்றே நச்சு [ளோடு!
கொண்டுவந் தளிப்பாய்.யானே இரவினில் முடித்துநிற்பேன்

616

அவளுடன் பேசேன்; பேசினல்
அழகினைக் கண்டென் உள்ளம்
இளகுறும்: இரவினில், இன்றே
இழவினை முடிக்கவும் வேண்டும்.

617

ரா) நச்சினல் கொல்லவேண்டா. கழுத்தினைநெரித்து; அஃதும்
கச்சனல் கறைப்பட் டுள்ள கட்டிலில் கருமம் ஆற்று.
உ) தக்கதே சொன்னய்! நன்று! நல்லது, முறையும் அஃதே.
ரா) கச்சனைப் பற்றி யுள்ள காரியம் யாவும் என்னல்.—

618

ரா) இன்றுநள் ளிரவுள்எல்லாம் முடித்துநீர் அறியவைப்பேன்.
உ) நன்றிது நன்று*காளம் ஒலிக்கின்ற கார ணம்என்?
ரா) வஞ்சியின் மன்னர்தூது, [A]உலூகனை அனுப்பி யுள்ளார்
வஞ்சியின் திலகம் கூட வருகிறுள் காண்டிஐய!
(உலூகர், திலகம், ஒற்றர் வருகின்றார்.)

* காளஒலி A. Lodovico.

619

உ.ஒா) தளபதி தம்மைக் கடவுள்காப் பாற்றுக
உத். உளமுற அஃதே நுமக்கும் வேண்டினம்
உ.ஒா. வஞ்சிமா நகரின் மன்னரும் தலைவரும்
என்றும் நும்பால் நன்றிமிக உடையர்[B]
உத். அரசர் முடங்கலைச் சிரமேல் தாங்குவல்[C]
தி. அண்ணா, ஆங்கு ஊர்நடப் பியாதோ?
ரா. தலைவ, யாமே தங்களை இங்கு
முசிறியிற் காண மிகமகிழ் வுற்றேம்.
உ.ஒா. நன்று! கச்சிதர் எவ்வா றிருக்கிறார்?
ரா. இருக்கிறார்! ஐய,(தி) அண்ணா, அவர்க்கும்
உங்கள்மைத் துனர்க்கும் ஒருபெரு முறிவு!
தங்கள்நல் வரவால் இன்பம் ஆகும்!
உத். அப்படி உறுதியோ(தி) ஏஎன் தேவா,
[D]"எவ்வகை யினும்நீர் இதுசெயத் தவறேல்"
உ.ஒா. [E]அழைத்திலர்: அவரே அரசர் அனுப்பிய
முடங்கல்வா சிப்பில் மூனைந்திருக் கின்றார்.
கச்சரும் தலைவரும் மனம்கசந் துளரோ!
தி. ஒருபாடு அஃது! உரைப்பதற் கில்லை.
என்மனக் கினியர் கச்சிதர், ஆதலின்
இருவர் தம்மையும் இணைப்பதற் கென்னால்
ஆன வகையெலாம் ஆற்றியே தீர்வேன்.
உ. எரிவாய் நிரயத் திரையே!(தி)தேவா!
உ. அறிவுடை யாய்கொல்?(தி) அவர்சினந்துளார்
கொல்!
உ.ஒா. முடங்கல் தந்த விளைவா யிருக்கலாம்.
கச்சித ரையிண் டமைத்து, உத்தமர்
ஆண்டுறும் படிஅச் செய்தி இருக்கலாம்.
தி. மகிழ்ந்தேன். நன்றிது! சாலவும் நன்றே!
உ. நன்றோ? (தி) இன்றோ தேவா? (உ)யானும் உன்
முற்றிய பைத்தியம் கண்டு மகிழ்ந்தேன்!
தி. ஏன்இவ் வாறு அருமை நாதா,
உ. பேஎய்*(தி) எப்பிழை செய்தேன் அப்பா?

620

உ.ஒா. கண்ஏதிர் கண்டதாக இதனையான் கூறினும்
உண்மையாய் எவரும் நம்பார் வஞ்சிமா நகரமக்கள்.

---

B. முடங்கல் அளிக்கிறார் C. வாசித்தல். D. வாசித்தல்.
* அடிக்கிறான். E திலகவதியைப் பார்த்து.

தன்அளவிறந்த செய்கை! நடந்தது போக-ஐய,
பெண்இவள் புலம்பு கின்றாள் தேறுதல் நீரேசெய்வீர்.

621

உத். பெண்ணினத் தவரின் கண்ணீர் பூமியிற் படுத லாலே
மண்மகள் கருவுயிர்ப்பின், மாதிவள் வடித்துநிற்கும்
கண்இழி துளிஒவ்வொன்றும் கராஉருவாகத் தோற்றும்.
என்முனே நில்லா தேநீ. போநீபோ, பேய்நீபோ அப்பால்

622

தி. இங்குயான் நின்று தங்கட் கெரிசினம் ஊட்டல் ஏனோ ?*
உலூ. உண்மையாய்ப் பணிவுமிக்காள். திரும்பநீர் அழைத்துநில்லும்
உ. பெண்பிள்ளாய்(தி)தேவா(உ)தங்கட் காகவேண் டியது
[யாதோ?D

உலூ. என்னையோ வினவல்! (உ) ஆமாம்! தாங்களே
அழைக்கச் சொன்னீர்:

623

வருவாள்அவள் வருவாள்எங்கு வரவேண்டினும் வருவாள்.
வருவாள்இதம் புரிவாள்அவள் பெருவாரியா யழுவாள்
பெரியீர்உரைத் ததுபோலவே எவர்க்கும்பணிந் தமர்வாள்
அறவேபணிந் தமைவாள்!சரி அழுநீ,தொடர்ந் தழுவாய்

624

ஆசாரமாய்க் கண்ணீர்உகு மாதே,எனை அரசர்
நேர்சீக்கிரம் வரவேண்டினர். யானே அவண் செல்வேன்.
நீசெல்லுக, அப்பால்:பின்னர் அழைப்பேன்உடன் வருகB
நீர்சேர்த்தகல் லாணைப்படி ஐயா,வஞ்சி செல்வேன்C

625

கச்சன்என திடத்தில்மிகக் கண்யமுடன் இருப்பான்
இச்சையுடன் ஒருவேண்டுகோள். இரவென்மனைப் போந்து;
மெச்சிமன மகிழஉடன் இருந்துவிருந் தயர்வீர்
இச்சீர்நகர் முசிறிதிரு வரவால்மிக மகிழும்.

626

மாட்டுப்பிறவி! குரங்கினங்கள்! (உலூ) மதியின் தொழிலில்
வல்லாராய்
காட்டு ஆட்சி மன்றத்தார் நவின்றகான வர்இவரோ!

---

* வெளிச் செல்கிறாள் B திலகம் வெளிச்செல்தல்
C உலூகரைப் பார்த்து D. உலூகரைப் பார்த்து.

வாட்டம் வெகுளி அசைக்கவொணு வன்மை உடையார்
இவர்தாமோ!
கேட்டில் நெஞ்சம் பேழ்படாவன் கீர்த்திகொண்டார்
இவர்தாமோ!

627

ரா: முன்னைய ரல்லர், முற்றும்வே றுனர்!
உலா: தன்னறி வுடனே தோன்றுவார் கொல்லோ
கன்றியே மூளை கலக்கமுற் றிலேயோ?
ரா: இன்றிவண் இருக்கும் நிலேயே இருப்பாம்!

628

நிந்தையாய் யாதும் யான் உரை செய்யேன்.
தன்பெரு நெறியில் தணந்தன ராயின்
முந்தைநன்னெறியே மேலவர் எய்த
எந்தைபி ரான்அவர்க் கின்னருள் புரிக!

629

உலா: மனேவியை அடித்தல் முறையோ? (ரா) செய்த
வினே அது முற்றும் தவறே: விளம்பின்,
இனியுமேல் தீங்கு நேரா தாயின்
நனிபெரி தாகும்! நடப்பெவ் வாறே!

630

உலா: அடிப்பது வழக்கமோ? அன்றிமு டங்கலேப்
படித்ததும் சினத்தராய், பலத்தை இழந்துளம்
துடித்து இத் தீக்குணம் தோன்றினின் றனரோ?
ரா: நடப்புகள் பல,அவை நவில்வதற் கில்லே!

631

கண்டதை, கேட்டதைக் கூறலும், அந்தோ!
உண்மையில் ஊறுகள் செய்முறை அன்றே ?!
என்மொழி யாய்ஒன் றியம்பவும் வேண்டா;
அண்ணலே ஆயும்.நீர் அறிவீர் அனேத்தும்!

632

ஒன்றுயான் உரைப்பேன்: அவரைத் தொடர்ந்தே
அங்கங் கவர்புரி வினேயை ஆய்வீர்.
உலா: எண்ணினேன்பெரிதாய்: இயல்புவே றுகக்
கண்ணுற உளம்மிகப் புண்படும்; ஐயே!
(வெளிச் செல்தல்.

## களம் 4. காட்சி 2.

அரண்மனைக்கூடம்

633

உ. ஒன்றுமே நீதான் கண்டதும் இலைகொல்?
வி. கண்டதும் இலை,யான் கேட்டதும் இலையே.
இன்னும் சொல,ஐ யுற்றதும் இல்லை!
உ. அன்னான் உடன்அவள் இருக்க,நீ பார்த்தனை?

634

வி: குறைவுள யாதும் ஆண்டுயான் காணேன்:
உரைத்தன யாவும் புலன்நன் குணரும்:
உ: மறைபொரு ளாயவர் பேசிய திலையோ?
வி: ஐயனே, இல்லை! இல்லவே இல்லை!

635

உ: உன்னையே வெளிச்செல அனுப்பிய திலையோ?
வி: மன்னவா, இல்லையே! (உ) முகத்துணி, விசிறி,
தன்கை உறை,பிற கொண்டுவா என்றே
சொன்னதும் இலையோ? (வி) இல்லையே அரசே;

636

உ. முழுவதும் மோசம்! (வி) மன்ன உயிர்இதைப் பணயம் வைத்துக்
கழுவினில் நின்றும் அன்னாள் கற்பினுக் குறுதி சொல்வேன்.
வழுவெனக் கருதின் அந்த நினைப்பினை விலக்கி நிற்பீர்.
விழுப்பமார் சிந்தைக்கிஃதே இழுக்கெனச் சொல்வேன்ஐயா!

637

இத்தகைத் தீமை நும்முள் ஏற்றிய தீயோன், மாறாக்
கர்த்தனின் சாபம், நச்சுக் கடுநர குறுவான், திண்ணம்!
சத்தியம் தூய்மை மேன்மை தையலாட் கில்லைஎன்றால்,
மற்றெவள் தூயள்? பீடுநடைகொளும் மாந்தர் யாவர்!

638

உத். போய்அவளை வரச்சொல்க*
வாய் மொழிதான் மிகஅழகு!
சேர்த்துவைக்கும் சிற்றினத்தாள்
மாற்றுமுறை யாதுசொல்வாள்!

* விமலா செல்கிறாள்.

639

பொல்லாப் பரத்தை!: வேசையர் கள்ளம்
எல்லாம் கரந்துறை இருட்டறை இவளே
பொல்லாள் இவட்கோர் ஆலயம்! பூசை!
எல்லா மயக்கும் யான் அறி வேனே!

—திலகம், விமலா வருகின்றனர்—

640

தில: தேவா, தங்கள் விருப்பம் யாதோ?
உத்: வாவா குயிலே அருகில் நீ வா.
தில: தேவா எதுவோ தங்கட் கின்பம்?
உத்: நீயே என்னை நோக்கி நில்; நில்

641

உன்னிரு கண்கள் தம்மை உற்றுயான் நோக்கவேண்டும்.
தி: என்ன, இவ் விபரீ தம்ஏன்? வியப்பதற் கென்ன உண்டு!
உத்: அம்மணி[A] உங்கள் வேலை ஆருக! யாரும் வந்தால்
தும்முதல் செருமல் மற்றுக் கதவைத்தாழிடுதல் செய்க.

642

வினைத்திறம் ஆற்று! மிக்க வினைத்திறம்! வேண்டா!
போ. நீ. [B]
தி: பணிந்துயான் வேண்டுகின்றேன் பகர்வதின் பொருளைத்
தேரேன்
சினக்குறி காண்பேன் சொல்லில் (உ)சொல்லுக, யாவள்
நீதான்!
தி: மனையவள் நிற்கே நெஞ்சம் பிறழ்கிலா மனையாள் தேவா,

643

உ: அன்னவா றண்மை சொல்வாய்! அழிந்திழி நரகம்
சேர்வாய்
மன்னிய தெய்வச்சாயல் பெற்றதால் நரகர் தீண்டார்
இன்னவா றீரிடத்தும் இடிபடு: ஏற்பா ரில்லை.
உண்மைநீ கூறு, நல்ல உத்தமி என்றே. பார்ப்போம்!

644

தி: மெய்ம்மையள் என்னும் உண்மை மேலுறை தெய்வம் தேரும்.
உ: பொய்ம்மையள் ஆன வாறும் மேலுறை தெய்வம் காணும்!

---

A விமலாவைப் பார்த்து B விமலா அகல்கிறாள்

தி: ஐயனே, யாரைப் பற்றி? யாருடன் கூடிக் கெட்டேன்?
உ: சை! இது வேண்டா. நீசெல்; செல்லுக; திலகம், நீசெல்.

645

தி: ின்றைப் பொழுதுஇவ் வாறுவி டிந்தது!
நன்று, நாயக, சிந்தை கவன்றுநீர்
கண்ணீர் வடிப்பது என்பொருட் டாகவோ?
எந்தை தூண்டலின் முசிறிப் பதிவரப்—

646

பிறந்தது ஆணை எனநீர் கருதின்;
அறம்அது ஆமோ எனைநீர் பழித்தல்!
துறந்துநீர் அவரை மறந்தநாள் யானும்
துறந்தவள் அவரை மறந்தவள்; உண்மை!

647

உத்: தெய்வமே எனைச்சோ திக்கத் திருவுளங்கொண்டாய்
உன்னால்
தீமைகள் அவமா னங்கள் தமியனாய் உறுமென்றாலும்;

உய்வதற்கிடமேஇன்றி உச்சிமேல் வறுமைவெள்ளம்
உறுவதென்றாலும்; உள்ளத்துணர்ச்சியும் யானும் வீணாய்

நையவே அடிமை யாகி சிறைத்தலையிடப்பெற்றாலும்
நான் ஒருதுளிச் சாந்தி நெஞ்சினுள் உலாவக் காண்பேன்

வையகம் என்னைச் சுட்டி வாழ்வெல்லாம் இகழத்தக்க
வசைபுரிந்தேன்என்றாலும் அதனையான் பொறுக்கவல்லேன்

648

என்உயிர்நிலையாய்; மற்று எனக்குறு எல்லாமாகி!
என்பெரு வாழ்வும் தாழ்வும் சார்புற நின்ற ஊற்று,
என்னையே ஆட்டுவித்து, இல்லையேல் வீழ்த்தும் சக்தி
என்னையே புறக்கணித்தால் நன்றிது! நன்று! நன்று!

649

அமுதநீர் ஊற்றே நீதான் அழுக்கடர் தேரை கூடித்
தமஇனம் பெருக்குங்குட்டை ஆயினை! தெய்வச்சாயல்
குமுதவாய் இளமைச் சாந்தம்; குலை, குலை உருக்குலைந்து
யமஉருக் கொள்க, உன்னைக் கண்டவர் அஞ்சுமாறு.

## 650

கறிக்கடை நாற்றங்கண்டு காற்றிலே விரைந்து கூடும்
வரிச்சிறை மணியீ போல்வாய், வண்ணமும் எழிலும் தாங்கி
விரிபெரு மணத்தால் மிக்க வேதனை அளிக்கும் பூண்டே,
பெரியஓர் புண்ய மாகும், நீபிறந் தில்லையாயின்.

## 651

தி. அறிகிலா தடியாள் யாதும் பிழைபுரிந்தேனோ? (உ) இஃதே
அரியஓர் தாளே! நல்ல அழகொளிர் நூலே! உள்ளே
தெரிபொருள் 'பரத்தை' சீசீ! "பிழைபுரிந்தேனோ" பிழை நீ
புரிகிலை!! பொதுமகள் நீ! புரிந்துள வினையைக்கூறின்—

## 652

மானத்தை எரித்துச் சாம்பல் ஆக்கிய உலைத்தீ என்ன
நாணத்தால் சிவக்கும் கன்னம். "பிழைபுரிந்தேனோ, மன்னா"
வானவர் இதனைக் கண்டு மூக்கினில் விரல்வைக் கின்றார்
மேல்நிமிர் திங்கள் வெட்கிக் கண்களை மூடுகின்றான்.

## 653

எவரையும் தழுவிநிற்கும் இயல்புடைக் கயமைக் காற்று
அவம்இது கேட்க அஞ்சிப் பிலங்களில் ஒதுங்கி நிற்கும்.
இவர் மொழிகின்றார் "யாதும் பிழைபுரிந்தேனா"! இல்லை!
நயமறி கில்லா வேசை! (தி) நவில்வது முற்றுந் தப்பு.

## 654

உ. ஓ ஒ நீயே வேசை இல்லையோ?
தி. யானே தெய்வத்தை நம்பி வாழ்பவள்
மற்றவர் தீண்டா முறையினில் உடலை
உத்தம நாயகர் ஒருவர்க் குரித்தாய்க்
கொள்வது கற்பெனனின் அஃதியான் உடையேன்
உ: கற்பழிந் தவளே? (தி) இல்லள். உய்பவள்!
உ: உய்குவை! உண்மை? (தி) தெய்வமே துணை செய்!
உ: அவ்வா றாயின் என்னை நீ பொறுத்தி;
உத்தமன் மனைவியா யுற்றவள் ஈண்டு
வஞ்சிமா நகரின் விஞ்சைசேர் தாசி
என்றே எண்ணினேன். புண்ணியம் அறியாப்
பாவ உலகின் துவார பாலகி,[A]

---

A எமிலியாவை நோக்கி.

பெண்ணே, அம்மா உன்னை,உன்னைத்தான்.
எங்கள் வேலை இனிது முடிந்தது.
உன்பெரும் பணிக்கு ஈதோ காசு.
வாயிலைச் சார்த்து. வேண்டுவேன் ஒன்று.
நடப்பு யாதும் வெளிப்பட வேண்டா.
(உத்: வெளிச்செல்தல்—விமலா உள் வருகிறாள்)

வி: இவர்தம் மனத்தில் யாது நினைத்துளார்?
அம்மணி என்னோ? ஏன் இவ் வாறு?
தி: சற்றே உறக்க மயக்கம் (வி) அம்மா,
வி: தலைவர் ஏனோ ஒருதனி முறையில்?
தி: யார்அவர்? (வி:) அம்மணி, எம்பெருந் தலைவர்
தி: உன் தலை வர்யார்? (வி) அம்மணி தங்களின்
துணைவர், நாயகர் (தி) வேண்டா வேண்டா.
எனக்கியா ரும்இலர்; யாதும் மொழியேல்.
கண்ணீர் வடித்துக் கலங்குதல் தவிர
அழவும் ஆற்றலில்; பேசவும் ஆற்றலில்:
படுக்கையில் இன்று அன்றுஎன் மணநாள்
விரித்த விரிப்பெலாம் நன்கு பரப்புக.
மறவேல்—விமல்,உன் கணவனை வரச்சொல்
வி: ஒருநா ளும்இலா மாறுபா டிதுதான் !*
தி: வேண்டும்! வேண்டும்! எனக்கிது வேண்டும்!
ஒன் றுமில் லாததில் ஒருகறைக் கிடமாய்
இன்றவர் நினைக்க நடந்துளேன் அன்றோ?
(விமலா, ராகு இருவரும் வருகிறார்.)

655

ரா: அம்மையே யாதுவேண்டும்? அதிகவாட் டம்நீர்கொண்டீர்.
என்னநேர்ந்ததுவோ மற்று? யானதை அறியலாமோ
தி: என்னயான் சொல்வேன்! ராகு, இளைஞர்க்குப் போதிக்கின்றார்
மென்முறை கொள்வார்; யாண்டும் கடுநெறி மேவக்காணார்.

656

இன்னஓர் முறையில் யானும் இளையவள், ஆதலாலே
வன்மையான் சகியேன் யாண்டும் (ரா) நேர்ந்தது, யாது அம்மா?
என்னிடம் அதனைக்கூறும்: இழுக் கொன்றும் இதனில் இன்றாம்.

657

வி) வெறுத்த புன்மொழிகள் கூறி, மன்னவர் தமது வாயால்
'ஒருத்திநீ பரத்தை' என்றார் இக்கடு வார்த்தை நல்லோர்

* அகல்கிறாள்.

பொறுப்பரோ? புகல்நீ (தி) ராகு, யானதற் குரியாள்தானே?
ரா: உரியது எதற்கு அம்மா? (தி) இவள் இதோ உரைத்தபேர்க்கு

658

யானுறை நெறிய தாக நாயகர் உரைக்க, இன்னுள்
தான்இங்கு உரைத்த பேர்க்கு. (வி) தன்அறி விழந்து முற்றக்
கான்மது வெறியிலுள்ள கயவனும் தனது வைப்பை
ஈனமார் இஃது சொல்லான்! (ரா) அவர்இவ்வா றுரைத்ததேனோ?

659

தி: அறிகிலேன் யாதும் ஐய, யான் அவர் சொன்ன அந்த
நெறியினள் அல்லள் என்ற ஒன்றுயான் அறிவேன் உண்மை.
ரா: வருவது வந்தேதீரும். காலம்பொல் லாத தாகும்.
வருந்துதல் வேண்டா அம்மா; வருந்திநீர் அழுதல் வேண்டா.

660

வி: பெற்றவர் தமையும் தன்னைப் பிரியமாய் மணக்க நாடி
உற்றவர் தமையும், தான்வாழ் ஊரையும் உளங்க வர்ந்த
பற்றுளார் தமையும் நீத்து வந்தும்ஓர் பயன்காணாது
கெட்டஇப் பேரேபெற்றால் யாவரே கவல மாட்டார்!

661

தி: என்ன் தீவினை! பொல்லாக்காலம்
ரா: என்ன கேடிது, ஏன் இவ் வெண்ணம்?
தி: ஒன்றும்யா னறியேன்; ஆண்டவனறிவான்.
வி: ஒன்றுயான் உரைப்பேன்; சற்றே கேண்மின்

662

(இசைப்பா 662—668)

ஒன்று யான் உரைப்பேன் கேளுங்கள்—அது
உண்மையில்லை! என்னைக் கொல்லுங்கள்.

வஞ்சகப் பாதகன் கோழையன்—அவன்
வாழைப் பழத் தூசி இறக்கல்போல்
நெஞ்சில்ஓர் பதவி ா டியே—பெற
நேர்மையா ளன்போல மூட்டினன்.
பொல்லாத வன்செய்த சூழ்ச்சியே—இது
இல்லையா னல்ளனைக் கொல்லுங்கள்.

663

ரா) அப்படி யாருமே இல்லையே—அது
நடக்கக் கூடிய தாகுமோ?

தி) இப்படி ஒருவன் இருப்பினும்—அவனை
இறைவன் மன்னித் தருளுக.

664

வி: மன்னிக்கும் இடமும் கொலைக்களம்!—அவனை
மாவாக அரைக்கும் நரகமே.
என்ன துணிவு! நற் பெண்ணினை—'பரத்தை'
என்று இவர்பெயர் கூறவே.—

665

யாருடன் சென்றாள்?—அவள்
எவ்விடம் நின்றாள்?
எந்த நேரத்தில்?—நேர்ச்சி
என்ன முறையில்?

666

மானம் மதிகெட்ட கீழ்மகன்—ஒருவன்
மன்னன் மனத்தைக் கெடுத்தனன்.
வானசிங் காசனத் தெய்வமே—இந்த
வம்பன்பேர் தெரியச் செய்குவாய்

667

நல்லவர் நாட்டுறை பெரியவர்—அந்த
நீசனைச் சாட்டையால் அடிக்கவே—
நாற்றிசையும் அவன் ஓடவே—இவர்
விட்டிடாது வேட்டை யாடவே

668

தெய்வமே, தெய்வமே, செய்குவாய்.

ரா) ஏ, நீ வாயை அடக்குவாய்.

வி: சண்டா ளப்படுகூட்டம்—உன்னைச்
சந்தே கத்துள் ளாக்க,
காமாலைக் காரன் போல—நீயே
கலங்கினமென் மேலே.
கானவன் எனக்குஉறவு— எனக்
கொள்கிறாய் ஐயுறவு!

ரா) புத்தி யற்றபுன் பேதாய்,
போதும், போதும், நிறுத்து!

669

தி) ராகு, ராகு,
என்பதி யைப்பெற யாதுயான் செய்யலாம்?
கடவுள் அறியச் சொல்கிறேன் ராகு,
அவர்புறக் கணிக்கக் காரணம் அறியேன்.
மனம்மொழி மெய்எனும் மூன்றினும் அவரைப்
பற்றிய தன்றிச் சற்றகன் றறியேன்.
கண்செவி என்ன மன்னிய புலன்கள்
அவர்உரு அன்றிப் பிறிதில் மகிழா.
மகிழின்—

அன்றும் இன்றும் இனியும் என்றும்
அவர்எனை ஒடுக்கி விலக்கி அழிப்பினும்
என்மனக் காதல் விலகா தாகும்!
விலகின்—

கடவுள் அருளை இழந்தவள் ஆவேன்.
வெறுப்பிற் பிறக்கும் கொடுமைகள் கோடி.
மணாளன் காட்டும் வெறுப்பினும் மனைவியை
உயிருடன் வதைக்கும் பெருநோய் பிறிதில்.
ஆயினும் என்மனக் காதல்அழி யாது.
'பரத்தை'என் றுரைக்க என்நா படுக்கும்.
இன்னே சொன்னேன்; புண்படும் உள்ளம்!
இப்பெரும் பட்ட மளிக்கும் புன்செயல்—
தகவிலா அதனை ஆற்றேன், ஆற்றேன்.
உலகெலாம் எனக்கே உறுவ தாயினும்
அதுயான் ஆற்றேன் ஆற்றேன் ஆற்றேன்.

670

ரா. அம்மையே சற்று அமைதி காணுதி
திடீஇர் திடீர்என இவர்இப் படித்தான்.
தொழில்முறைத் தொல்லை; சித்தம் கலங்கி
அதனல் தங்களைச் சினந்துளார்(தி) அவ்வாறு
ஊழிய முறையில் ஊறெதும் இன்றேல்?
ரா. அவ்வா றேஅது: உண்மையான் அறிவேன்

(காளம் ஊதுகிறது)

அந்தி உணவுக் கழைக்கும்இக் காளம்
வஞ்சியின் வந்த நம்பியர் ஆண்டே
உண்ணாதிருப்பர்; சென்று வருவீர்
அழாதீர், யாவும் நன்மை ஆம் அம்மே.

( திலகம் விமலா அகல்கிறார் ருத்திரன் வருகிறான் )

671

ரா) என்ன, ருத்திரா, எப்படி?(ரு) எப்படி?
என்னிடம் நீயே சொன்ன முறையில்
யாதும் ஒழுங்கா நடந்ததா யில்லை!

ரா) ஒழுங்குஇல் லாமல் பிறதான் என்னவோ?

ரு) ஒவ்வொரு நாளும் சிலசில சொல்லி
என்னை மாற்றத் துணிந்துளாய். மேலும்
காரியம் கூடும் எனும்கருத் தழிய—
உறுசில வாய்ப்பும் உன்னால் ஒழிவதாய்க்
கருதுவன் ராகு, இனியான் சகியேன்.
இத்தனை நாளும் சுத்தமுட் டாளாய்
அடங்கி இருந்தேன். இனியான் ஆற்றேன்.

ரா) சரிசரி, ருத்திரா, சற்றே செவிசாய்.

ரு) சாய்த்துச் சாய்த்துச் சலித்தேன் போதும்!
ஒருநாளேனும் உன்வாய்ச் சொல்லும்
செயலும் ஒத்துத் தோன்றிய துண்டோ!

ரா) ஏனோ என்மேல் இத்தகைப் பெரும்பழி?

ரு) உண்மையே அன்றிப் பொய்ம்மைஆங் குளதோ?
என்பெருஞ் செல்வம் யாவையும் அழித்தேன்
திலக வதியிடம் சேர்க்க யான்தந்த
நகைக்குவை காணின் மணிமே கலையரும்
கற்புக் கலங்கிப் பற்றுளம் கொள்வர்.
'அவள்அதைப் பெற்றனள் ஆதர வளித்தாள்
அதிசீக் கிரத்தில் அவள்உற வாகும்'
எனப்பல கூறி மனம்மகிழ் வித்தாய்.
நடப்பு யாதும் இல்லை! (ரா) நல்லது!
நல்லது! போதும். (ரு)'நல்லது! போதும்'
என்ன நல்லது! என்னது போதும்!
யான் இனி வாளா இருப்பது தீதே.
தலைமேல் கைவைத் துண்மை சொல்கிறேன்.
இதுமிகக் கேவலம்; கேவலம் இதில்யான்
முற்றவு மாற்றப் பட்டவன் ஆனேன்.
ஆமாம்! (ரா) நன்று. நன்று. (ரு)அன்று!

'நன்று அன்று' என்றே சொல்கிறேன்.
நேரிற் சென்று யான் இன்னுன்எனத்
திலக வதியாள் தெரியச் சொல்வேன்.
அன்னுள் நகையை என்கை அளிப்பின்
விழைவை ஒழிப்பேன்; விருப்பம் முற்றும்
முறையும் கேடென இரங்குவன்.
இன்றேல் என்வினை
எல்லாம் நின்பால் என்பதும் உணர்தி.
ரா. பேசிநீ முடித்தனை?(ரு) ஆமாம் முடித்தேன்
இனியான் நடத்த வேண்டுவ அன்றி
வேறெதும் இருப்பில் ஈங்கில்லை(ரா) ஓசரி
உணர்ந்தேன்! மானஉணர்ச்சியும் கொண்டனை!
இந்நே ரம்முதல் யாஅன் உன்னை
முன்னினும் சிறந்தோ ஞக உன்னுவேன்.
ருத்திரா, உன்மேல் உண்மை. உரைக்கிறேன்
என்மேல் பெரும்பழி ஏற்றினை; உண்மை!
ஆயினும், என்றும்
உன்வழி உழைப்பில் அறம்பிற ழாதே
நடந்துளேன் என்பதும் உண்மை, உண்மை.
ரு. நடப்பில் அப்படி யாதும் இல்லையே!
ரா. இல்லைதான்!

இல்லை என்பதை யானே ஒப்புவேன்.
அறிவும் விளக்கமும் அதிகம்! ஆனதால்
இவ்வாறு எனைநீ ஐயுறல் ஆனுய்,
சரிசரி ருத்திரா, 'திறமிகுத் தோன்!'என
இன்றுயான் உன்னை எண்ணிய படிநீ
வினைத்திட் பத்துடன் வீரம் ஊக்கம்
உடையவ ஞயின், இன்றிர வொன்று செய்.
அதனல்
நாளை இரவு திலக வதியை
அடைவது உறுதி: அவ்வா றின்றேல்
வஞ்சித் தாயினும் வதைசெய் தாயினும்
என்னைநீ கொல்க(ரு) சரிசரி இரவில்
என்செய வேண்டும்? ஏற்புடைத் தொன்ருே?
என்ஞல் ஆவதோ?(ரா) ஐய, ஒன்றுகேள்
உத்தமன் பதவியைக் கச்சர் ஏற்பதாய்
வஞ்சியி லிருந்து வந்துளது ஆணை.
ரு. ஓ, ஓ, உண்மையாய்? அவ்வாருயின்
உத்தமர் திலக வதியுடன் கூடி
வஞ்சியை நோக்கி மீள்குவர் அன்றே!?

ரா. அன்று அன்று அவன்தான் நேரே
மலையமா நகரே செல்கிறன்; மற்றும்
பெருவினை ஏதும் ஊறுசெய் யாவிடின்
உத்தமன் அவளுடன் அகல்வதும் உறுதி,
மேலும்
கச்சன் கண்மறை வாதல் ஒன்றே
உத்தமனை யிண்டுறையச் செய்யும்.
ரு. 'கண்மறை வாதல்' என்பதன் கருத்து?
ரா. மூளை சிதறத் தலையைத் தட்டி
உத்தமர் நிலைக்கிவன் ஆகான் ஆக்குதல்.
ரு. யான் அது செய்யுமா றெண்ணுகின் றாயோ?

672

ரா. அறம்,இது ஆக்கம் என்று ஆய்ந்துணர் அறிவு கொள்ளின்
உரைப்பது கேள்நீ. இன்று இரவினில் விருந்து உண்ண
உறைகிறன் வேசைவீட்டில்: யானும்ஆங் குடனிருப்பேன்
உறுபெரும் பதவிஇன்னும் உணர்ந்திலன்: கச்சன்உண்டு

673

வருவழி அதனில்நீயே வசதி பார்த் திருக்க வேண்டும்
இரவுபன் னிரண்டின் மேலே ஒருமணிக்குள்ளாய் அன்னன்
புறப்பட வசையான் செய்வேன், பக்கநற் றுணையும் ஆவேன்
விரைவினில் வீழ்த்தி நாமே நினைத்ததை முடிக்கலாகும்
தாமதம் வேண்டா. நெஞ்சம் திகைத்துநீ நிற்க வேண்டா.

674

கடகட மருண்டு ஏனோ நிற்கிறாய்? ஐய என்னைத்
தொடர்ந்துநீ வருவாயாயின் அன்னவன் தொலைவால் ஆகும்
உடனடி நலன்கள் யாவும் உரைக்கின்றேன்; கேட்ட பின்னர்
கடமையே அவனைக் கொல்தல் என்னநீ காண்பாய் ஐய.

675

அருந்தும் வேளை கடந்தது
இரவு வீணே கழிந்தது
கருமம் பற்றிக் கருதுவோம்
விரைவில் செயல்நாம் ஆற்றுவோம்

676

ரு: இதைக்கொண் டொன்று செய்வது
இதமாய்த் தெரியு தில்லையே!

ரா: இதற்கு மேலும் சொல்கிறேன்
அதன்பின் நீயே ஆற்றுவாய் (அகல்தல்)

## களம் 4. காட்சி 3.

677

—அரண்மனையில் ஓர் அறை உத்தமன் உலூகர், திலகம், விமலா, இவர்கள் சிலர் தொடர வருகின்றனர்—

உலூ: ஏனோ சிரமம்? இருங்கள், யான் செல்கிறேன்.
உ: சிரமம் சிறிதுமில். உண்டபின் சற்று
உலாவுதல் மிக்க உறுதியே நல்கும்.
உலூ: அம்மையே வருகிறேன் நல்லேன் நல்லேன்.
தி: தங்களின் வருகையால் சிறந்தேம், மகிழ்ந்தேம்.
உ: ஐய, தாங்கள் சென்று வாருங்கள்.
திலக வதியே! (தி) தேவா, இதோ.
உ: உடனே சென்று படுக்கை அறைசேர்.
யானும் இதோ வருகிறேன். மற்று
யாருமே அங்கு இருக்க வேண்டா.
ஆகுக உடனே! (தி) அஃதே தேவா.
(உத், உலூ, ஊழியர் அகல்தல்)
விம: அம்மா அவர்தாம்—முன்னினும் சற்று
சாந்தமுற் றார்எனத் தோன்று கின்றதே!
தி: அவர்தம் நடப்புஎவ் வாறே! நவில்வேன்
இப்பொழுது உடனே வருவதாய்ச் சொன்னார்.
பள்ளி யறையையான் சேரப் பணித்தார்
உன்னையே அப்பால் அகற்றச் சொன்னார்
வி: என்னை அகற்ற! (தி) இது அவர் ஆணை:
ஆதலின் விமலா படுக்கைத் துணிமணி
எடுத்துத் தந்துநீ ஏகுவாய் உடனே.
அவர்சின முறநாம் ஆற்றலா காது!
வி: ஏனோ இவரைநீர் பார்க்க நேர்ந்தது
என்றே என்மனம் எண்ணிநோ கின்றது.
தி: யானோ விமலா, அவ்வாறு கவலேன்.
என் உளக் காதல் மலிய, அவர் தரு
விருப்பால் அவர்தம் முரணும் சினமும்
கடுமையும் யானே சிறிதும் காண்கிலன்.

அன்பும் அருளும் ஆங்குறக் காண்டலின்
உடல் பூரிக்கும் உடையும் நெகிழும்.

வி: குறித்த துணிகளைப் படுக்கையில் விரித்துளேன்.

தி: எல்லாம் சமமே எனக்கு. சரிதான்—
மனம்என் பதுவே மடமையின் உறையுள்.
விமலா,
உனக்குமுன் யானே இறப்பதா யின்நீ
இதேதுணி கொண்டுஎன் சவத்தை மூடுக.

வி: சூ. சூ. இதென்ன பேச்சு! (தி) விமலா,
என் நற்றாயார்—
பாப்பா என்ஞேர் பணிப்பெண் கொண்டாள்.
அவள்வய தாகி ஒருவனை அடைய
விரும்பினள். அவனே கிறுக்குற் றவனாய்
விட்டு விலகிச் சென்றனன். அவள்தான்
புல்பாட் டொன்று பாடினள். அதுதான்
பழைய ஓர் பாட்டே ஆயினும் அவட்கு
அது மிகப் பொருத்தம்!
அதனைப் பாடியே அவளும் இறந்தாள்.
இன்றுஅப் பாட்டு என்மனத் துள்ளே
நின்றுலாம். அதனை மறக்கவும் அறியேன்.
பாப்பா எனும்அப் பணிப்பெண் போலத்
தலைசாய்த் திருந்து தாழ்ந்து நோக்கிப்
பாடி யிருக்கிறேன். போய்வா, போநீ.

வி: அம்மணி,
இரவணி துணிமணி எடுத்து வரட்டுமோ?

தி: வேண்டா. நீஇதைச் சற்றே தளர்த்து.
உலூகர் மிக்க நல்லுருப் படைத்தோர்!

வி: அழகு மிக்க ஆண்மகன் அவர்தாம்!
பேச்சும் மிக்க பண்பட் டுள்ளது.
வஞ்சியில் யானறி வனிதை ஒருத்தி—
இவர் இதழ் உறவு அவாவி அவள்தான்—
காத தூரமும் நடந்துநேர் செல்வாள்

678

(திலகவதி பாடுகிறுள் 678—680 இசை.)

அத்திமரத்தடியில்—அமர்ந்துவங் கியிருந்து
பெருமூச்சு விடுவதாகப்—பசும்புல்லே பாடு, பாடு

கைகள் பிணைத்து முழங்—காலின்மேல் தலைசாய்த்து
ஐயோ என்றிருப்பதாக—அணிபுல்லே பாடுபாடு!

---

சிற்றோடை ஒலி எந்தன்—சிந்தைக் கலக்கம் என்று
சற்றே நீ வாய்திறந்து—சிறுபுல்லே பாடுபாடு!

---

கண்ணீர்பெருக, அங்கு—கல்லும்கரையும் என்று
பெண்ணிலை கண்டதுபோல்—பசும்புல்லே பாடுபாடு!

---

இத் துணி மணிகளை அப்பால் எடுப்பாய்
எனக்குஇனியமாலை—புல்தழை நீள் மாலை
எனக்கவர் வசை இசை—பாரும்அவர்ப் பழித்தல் வேண்டா
விரைவாய்; விரைந்துசெய்; அவர்வரு நேரம்—

679

வேண்டா, வேண்டா. இனிமேல் வேறு—
கதவைத் தட்டுவ தியாவர்? (வி) காற்று

680

தி:

உம்உறவு பொய்யுறவு என்றுஉரைத்தேன்—அதற்
குற்றபதில் யாதுசொன்னார் புல்லே பாடுவாய்.

---

பெண்ணே, உன்னை அன்றிவேறோர் பெண்ணை யான்சேரின்—என்
கண்ணே வேறு மாந்தரின்மெய் சேர்தல் நிற்கறம்:

681

போய்வா விமலா போய்வா. எந்தன்
வலக்கண் துடிக்கும்: இடர்வரு குறியோ?
வி. இடரும் இன்று, இனிமையும் இன்று!
தி. விமலா,
பிறர்வாய் மொழியாய் யான்ஒன் றறிவேன்—
ஐயோ ஐயோ ஏமாந்த ஆண்கள்!—
விமலா,

உள்ளத் துறைவதை ஒழியா தேசொல்.
கட்டிய கணவன் வெட்கி மறையவை
இழுக்கு நடையுடை மாதரும் உளரோ?

வி. உளர்சிலர். இதனில் ஐயுற வென்ன!

தி. இப்பெரு வுலகம் கிடைப்ப தாயின்நீ
இப்படி ஒன்றுக் கியைவாய் சொல்லோ?

வி. இயையீர் சொல்லோ நீவிர்?! (தி) யா அன்!?

வி. திருவிளக் கறியச் சொல்கிறேன்:. புரியேன்.

வி. இருளில்-ஆமாம், நிறையப் புரிகுவென்.

தி. உலகம் உன்கைக் கிடைப்ப தாயின்
கலவி முறைக்குநீ இயைவாய் போலும்!

வி. உலகம் அளவிட முடியாப் பெரும்பொருள்.
சிறுகறை புரிந்து பெரும்பரி செய்தின்
வருகுறை யாதோ? (தி)யா அன் உண்மையாய்
நீஅது செய்யாய் என்றே நினைக்கிறேன்.

வி. நான் அது செய்வேன் என்றே நினைக்கிறேன்.

682

செய்குவன், செய்தபின்னர் சீக்கிரம் அதனை மாற்றி
மையறு நெறியில் நிற்பேன். மணிதுணி உடுப்பு ஆதி
கைவிரல் ஆழிக் காகக் கறைப்படேன் மெய்யே. இந்த
வையகம் வசமாம் என்றால் யாவரே வரைவார் இஃதை.

683

தலைவனை நாட்டை ஆளும் தலைவனே ஆக்க, அன்னான்
தலைகுனி செயலைச் செய்ய யாவள்பின் னிடுவாள், அம்மா!
உலைவிலா மேலைச் செல்வம் கையுறு தொழியுமேனும்
உலகியற் செல்வம் வேண்டி யானதற் கொத்தே நிற்பேன்.

684

தி: எல்லா உலகமும் இயைவ தாயினும்
பொல்லாப் பிதற்கு யானுடன் படேன்காண்.

வி: பொல்லாப் பென்பது உலகம் புகல்வது.
நல்லாய், உழைப்பின் பயனாய் உலகம்

685

கைவச மாகின் கயமை உதித்த
வையம் நம்முறை வைகலின், அதனைச்
செய்ய நெறியில் திருத்தலும்எ ளிதே.

தி: தையலார் இத்தகைத் திருந்தினோர் உளரோ?

686

வி: பலர்உளர். அவர்தம் கூட்டம் பண்டுதாம் விழைந்த சீர்சால்
உலகினை நிரப்பும் என்ற உண்மையை அறிவீர். மாதர்
விலகிய நெறிய ராஞர் எனின் அது கணவன் மார்செய்
பிழைஎன்றே எண்ணுகின்றேன்: அதன்வகை விளம்பக் கேட்பீர்

687

செய்யவேண் டியனசெய்யார். சேர்த்துள பொருளை எல்லாம்
மையலால் பிறர்கைச் சேர்ப்பார்: முணுமுணுத் தெரிந்துபேசி
ஐயுற்றே அடிப்பார்: கட்டுப் பாடுகள் அதிகம் சொல்வார்
கைநிறை செல்வந் தாரார்; எனின்மனம் கலங்காதோதான்

688

மான உணர்ச்சியும் கொண்டுள்ளோம்—சற்று
மனத்திற் கருணையும் வைத்துள்ளோம்
பழியும் இழிவும் கருதுவோம்—வரின்
பதிலும்செய்ய முன் வருகுவோம்
பெண்ணும்ஐம் புலன்கள் பெற்றவள்—என
ஆணினம் அறிய வேண்டுமே.
பார்க்கிருள் கேட்கிருள் மோர்கிருள்—அவள்
பண்டங் களின்சுவை தேர்கிருள்
காரம் இனிப்பினில் வேற்றுமை—அவள்
கணவனைப் போலவே காண்கிருள்
இன்ன நிலைமையில் ஆடவர்—அவர்கள்
ஏனே பிறர் மனை நாடுதல்?

அஃதே அவர்விளை யாட்டு—அவர்க்கு
அன்னியர் மேல்என்றும் பற்று!
சித்தத் திடமில்லாச் சபலம்!— புத்தி
சிதைந்தது ஆடவர் உலகம்

689

ஆடவ ரைப்போல் ஆட்டவிருப்பு அன்பு சபலங்கள்
மாதர்களுக்கும் உண்டென உணர்ந்து மதித்துஒழுகட்டும்!
கேடுசே ராநெறி நடப்பதைநீத்துக் கீழ்நெறி சென்றக்கால்
ஆடவர்செல்முறை மாதரும் செல்வர் என்பதை அறியட்டும்!

690

தி. நன்று நன்றுநீ போய்வா விமலா,
தீங்கினில் தீங்கு யான்கா ணதே
நன்னெறி காணத் துணைசெய் தெய்வமே

## களம் 5 காட்சி 1

691

—இரவு—முசிறித் தெரு—

(ராகுவும் ருத்திரனும் வருகிறார்கள்)

ரா. ருத்திரா, இப்பொழு திங்கவன் வருவான்.
நீஇத் தூணின் அயலில் மறைந்துநில்.
உறையை நீக்கு: கத்தியைக் கைக்கொள் :
அச்சமே வேண்டா: ஆழச் செலுத்து.
சட்புட் என்று முடிக்க வேண்டும்.
ஆவதும் அழிவதும் இதன்முடி வென்பதை
நினைத்து மனத்தில் உறுதி மிகக்கொள்.

ரு. என்கை அருகுநில்: இன்றேல் ஒருகால்—

ரா. உன்கைப் பக்கமே நிற்கிறேன் உறுதிகொள்.
போநீ. போஉன் இடத்திற் போய் நில்.

692

ரு. (பின்சென்று)

இவ்வினை புரிய என்மனத் தெழுச்சி இல்.
பலபல சொல்லி எனைச்சரிப் படுத்தி
வைத்துளான், சரிசரி-ஒருஉயிர் போக்கு!—
கத்தியை நீட்டினேன்-அவன்உயிர் அழிவுதான்!

(தன் இடத்தில் நிற்கிறான்)

ரா.

விரல்படப் பொறுக்கா முகப்பருபோல
முருகிய நிலையினன் ஆயினன் ருத்திரன்.
கச்சன் ருத்ரனைக் கொல்வதும் சரியே:
ருத்ரன் கச்சனை ஒழிப்பினும் சரியே.
இன்றேல் இருவரும்

ஒருவரை ஒருவர் மாய்ப்பினும் சரியே.
யானே நன்மை எய்துதல் உறுதி.
ருத்திரன் வாழின்;—திலக வதிகைக்

கொடுப்பதாய் அவனை ஏமாற்றி எடுத்துள
பொன் அணி மணிகளைப் பின்னும் கொடுக்கும்
பொறுப்பெனைச் சேருமே! அது ஆகாது!
கச்சன் வாழின்;—கண்கவர் வனப்பும்
வேலைச் சிறப்பும் எனை வீழ்த்துமே!
மேலும், கானவன் என்வினை எல்லாம்
சாலவே சொல்லவும் கூடும், அதனுல்
எல்லை இல்லாத் தொல்லையே ஆகும்!
ஆமாம் அவன்தான் இறக்கவே வேண்டும்.
ஆஅம்! ஓ அவன் வருகிறுன் போலும்!

(கச்சிதன் வருகிறுன்)

ருத்: அவன் நடை அறிவேன். அவனே: செத்தான்!
(ருத்திரன் பாய்ந்து அவனைக்கத்தியால் குத்துதல்)

கச்: இருப்புக் கவசம்மேல் இருப்பதை அறிந்திலன்!
இப்பெருங் கவச உறுதிபெற் றிலனேல்
குத்து எனக்கோர் கோள்செய் திருக்கும்!
பார்இதோ. அறிவேன் நின்திறம்* (ரு) ஆஅஅ.
இறந்தேன்—ஐயோ—யாரும் இல்லையா.
(இராகுஓடிக கச்சன்காலை வெட்டி மறைதல்)

கச்: கொலைஇ-கொலைஇ- முடம்பட் டேன்யான்.

(வீழ்கிறுன். தூரத்தில் உத்தமன் வருதல்)

உ: ஆம், இது கச்சிதன் குரலே ஆகும்.
இராகுதன் வாக்கை நிறைவேற் றுகிறுன்!

ரு: யான்சண் டாளன் (உ) ஆம் அது சரிதான்!

க: யாரு மில்லையா? யாரு மில்லையா?
விளக்கு இல்லையே, வைத்தியர் இல்லையே,

693

உ: அவன்தான்! ராகு! ஆண்மையின் உருவம்!
அன்பர்க் குற்ற துன்பந் துடைக்கும்
நற்குணன். உண்மையன்: தன்பால் கற்க
நமக்கு நல்வழி நடாத்திக் காட்டினுன்—
பேதாய், உந்தன் காதலன் ஒழிந்தான்!
நீ அழி சாவும் நெருங்கு கின்றது!
வேசையே, இதோஓ வருகிறேன். வசீகர

* கத்தியால் குத்துகிறுன்.

மதர்த்த விழிகளின் மயக்கம் ஒழித்தேன்.
சோர உறவினால் கறைப்படுடன் படுக்கை
கோரக் குருதியால் கறைப்படக் காண்டி.
(சேய்மையில் உலூகர். கருணைகரர் வருதல்)

க: ஐயோ ஒ கொலை!கொலை! ஒருதுணை இல்லையே!

கரு: ஏதோ பேரிடர்!
அழுகுரல் இதனில் அச்சம் பிறக்குமால்!
க: உதவி இல்லையே (உலூ) ஒஒ—அதோ ஒ-
ரு: ஆஅ—கீழ்மகன், கயவன்: (உலூ) ஆங்கு
இருவரோ மூவரோ புலம்புகின் றூர்கள்.
இருளோ மிகவும் அடர்ந்திருக் கின்றது.
போலிப் புலம்ப லாகவும் இருக்கலாம்.
தக்க நற்றுணை இன்றிநாம் அங்கு
செல்வது பொல்லாங் காயினும் ஆகும்.

ரு. யாருந் துணையிலை.
இரத்தம் கழிய இறக்கின் றேனே!

694

உலூ: ஒஒ அதோ—(கரு) அதோஒ ஒருவன்
தரித்தமேல் துணியுடன் விளக்கு ஆயுதம்
எடுத்த கையனுய் இவண்வரு கின்றுன்.

(ராகு விளக்கேந்தி வருதல்)

ரா: யார் அவர்? அங்கு—
கொலைகொலை என்ற கூக்குரல் யாரது?
உலூ: யாம்அது அறியோம் (ரா) ஒருகுரல் நம்செவிப்
பட்டதும் இல்லையோ? (க) இருப்பது இவ்விடம்:
உதவி ஆற்றுங்கள், கடவுள்காப் பாற்றுவார்.
ரா: என்ன நடந்தது? (கரு) இவன்உத் தமரின்
கட்டியங் காரன் எனவே கருதுவன்.

உலூ: அவன்தான். மிக்க ஆண்மையன், வீரன்
ரா: நொந்து புலம்பும் நீவிர் யாவிரோ?

கச்: ராகுவோ! ராகு, யான் இனி ஆகேன்.
வம்பர் சிதைத்தனர்: வந்துசற் றுதவு.

ரா: ஆஅ—துணைப்பதி,
யாவர் இப்படிச் செய்த பாதகர்?

கரு: அவர்களில் ஒருவன் ஆற்றல்அற் றவனுய்
அண்மையில் கிடக்கிறுன் என்றே அறிகிறேன்.

## 695

ரா: வஞ்சப் பாதகர்![A] யாவரோ நீவிர்?
வருவீர், சற்றே உதவிநீர் புரிவீர்.
ரு: இங்குக் கிடக்கும் எனக்கும் உதவும்.
கச்: வம்பர் குழுவில் இவனும் ஒருவன்.
ரா: கொலைசெய் கயவன் பாதகன்.[B]
ரு: சண்டாள ராகு, நன்றிகெட்ட நாயே.
ரா: திருடர் குழு இது உறைவது யாங்கோ?—
இரவில் வந்து கொலைபுரி கின்றார்—
கொலைகொலை என்ற கூக்குரல் யாண்டும்—
நாட்டில் நிலவும் அமைதி நன்று!
நீவிர்தாம் யாவர்? நல்லரோ? புல்லரோ?
உலூ: யார்என அறிந்து பின்னர் மொழிவீர்.
ரா: உலூகப் பெருமான்! (உலூ) ஆமாம் அவர்தாம்!
ரா: ஐயோ, அறியேன் அறியேன். கச்சிதர்
வம்பரால் ஈண்டு வீழ்ந்து கிடக்கிறார்
கரு: கச்சிதர்? (ரா) அண்ணா, நும்கால் எப்படி?
க: துண்டு இரண்டாய் ஒடிந்துளது ராகு,
ரா: ஐயோ, கடவுளே,
பெரியீர், சற்று விளக்கைப் பிடியும்.
சட்டையால் அதனைக் கட்டிப் பார்க்கிறேன்[C]

## 696

ர: என்ன நடந்தது? கூக்குரல் இட்டதார்?
ரா: யாஅர் கூக்குரல் இட்டார்! ஊஹூம்,
ர: ஆ என் கச்சிதர் அருமைசால் கச்சிதர்
அழகுசேர் கச்சிதர் ஐயோ—கச்சிதர்
கச்சிதர்; கச்சிதர்!
ரா: சீசீ சீர்கெட்ட சிறுக்கி! கச்சரே
உம்மை இப்படி ஊறு செய்தவன்
இன்னான் எனநீர் யூகிப் பீரோ?
க: ஒன்றும் அறியேன். (கரு) உம்மைஇந் நிலையில்
காண என்மனம் கவல்கிற தைய,
யான்உமைத் தேடி அங்குசென் றிருந்தேன்.

---

A. உலூகர், கருணாகரர் இருவரையும் பார்த்து.
B. ருத்திரனைக் குத்தி வீழ்த்து ரூன்.
C. (ரம்பை வருகிறாள்)

ரா: பட்டை நாடாக் கயிறு பாருங்கள் *
போதும் இனிமேல் நாற்கா லிஒன்று—
மெல்லத் தூக்கி அப்புறம் நகர்த்துவோம்.

ர: ஐயோ உணர்வு அற்றவர் ஆனார்:
கச்சிதர்! கச்சிதர்! (ரா) மிக்கநற் பெரியீர்—

697

உற்றஇக் கொடுமை நேர உடந்தையா யிருந்தா ளிந்தப்
பட்டியும் என்றே நெஞ்சம் பகர்கிற தெனக்கு. கச்சர்,
சற்றுநீர் பொறுமைகொள்ளும், எனக்கொரு விளக்குத் தந்து
பற்றிஎன் னுடன் வாருங்கள் கிடப்பவன் யாவன் பார்ப்போம்.

698

முன்னறி முகமா னவனோ? இல்லையோ, ஐயோ, இன்னான்
என்பெரு நண்பன் மேலும் எனதுநல் லூரனுவான்
அன்பன் ருத்திரனோ! இல்லை. ஆமிது அவனே அவன்தான்
என்செய்வேன் தெய்வ மேயான்! ருத்திரா (கரு) வஞ்சியான்கொல்?

699

ரா: அவனை நீர்தாம் அறிவீர் கொல்லோ?

கரு: ஆம் யான் அறிவேன். (ரா) கருணைப் பெருமான்!,
கவனித் திலன், இவ் அவப்படு வினையால்—
ஒன்றும் உணர்வில் அறியேன் ஆனேன்.

கரு: யான்உமைக் கண்டதே என்நற் பேறு.

ரா: கச்சித ரே, கால் குணமா யுளதோ?
நாற்கா லிஒன்று கொண்டுவா ருங்கள்

கரு: ருத்திரா? (ரா) அதுதான் அவன்தான், அவனே
சரி; அது முடிந்தது. ஒருநாற் காலி.? A
உங்களில் ஒருவர் மெல்ல இவரை
எடுத்துச் செல்வீர்: யான்உடன் சென்று
கச்சர்க் குற்ற வைத்தியர் கொணர்வேன்

700

பெண்ணே, ரம்பா பேசாது ஓய்வோ:
கச்சிதர் எனக்கு மிக்கநல் லன்பர்
உனக்கும் அவர்க்கும் என்ன உள் வெறுப்பு?

கச்: வெறுப்பே கிடையாது. மேலும் இவ்வினை

A நாற்காலி வருகிறது. * நாடா கொடுக்கப் படுகிறது.

செய்தவன் யாவன் என்றும் தேர்கிலேன்.
ரா  [S] முகமெலாம் மாறி வெளிறி நிற்பதேன் ?—
காற்ரேட் டத்தில் அவரை அமர்த்துவீர்.
(கச், ருத் இருவரையும் தூக்கிச் செல்கிறார்கள்)
நற்பெருஞ்சான் றீர், சற்றே நின்மின்
பெண்ணே, முகம்ஏன் வெளிறிய தோற்றம் ?
காற்ரேட் டம்உற அவர்களைக் கடத்தும்.—
கண்களின் வெளிறிய காட்சிகண் டீரோ ?
உற்று நோக்குவீர்; உண்மையை உணர்வீர்.
நீவிர் நோக்குமின்; நன்ருய் நோக்குமின்.
உண்மை தெரிந்ததோ ?—இல்லை ?
நா அப் படுப்பினும் நெஞ்சறி குற்றம்
மீப்படும் தன்னை முகத்தில் மொழியுமால்,

(விமலா வருகிருள்)

701

வி: நாயக, ஆங்கு நடந்தது என்ன ?
ரா: ருத்திரன் மற்றும் வம்பர் சிலரால்
கச்சிதர் பலமாய்த் தாக்குண் டார்தாம்.
ஆவியும் நிலையில் தளர்ந்தது. அடுத்து
ருத்திரன் செத்தான். (வி) மிக்கநற்பெரியீர்,
ஐயோ ஐயோ அருமைக் கச்சரே!
ரா: சோரம் தந்த கோரம் இதுகாண்—

விமலா, கச்சிதர் உண்டதெவ் விடம்எனச்
சற்றே தெரிந்துவா:* நீஇந் நடுக்கமேன் ?
ர: என்மனை யகத்தே உண்டனர் கச்சிதர்.
அதனல் என்ன? நடுங்கயா துண்டு?
ரா: அங்குஉண் டனரோ ? சரி நீ நட, நட.
வாநீ என்னுடன். (வி) வெட்கம்! வெட்கம்
சீசீ பரக்கழி. (ர) யாரடி பரக்கழி?
தெருவினில் நின்று திட்டி நிற்கிற
உன்னைப் போல யானும் உத்தமி.
வி: என்னைப் போல? வெட்கம் வெட்கம்!
மானங் கெட்டவள்! (ரா) நற்பெரு மக்காள்,
கச்சரைச் சென்று கவனிப் போம்யாம்.
பெண்ணே, விமலா, பிறிதொரு காரியம்.
நேரே சென்றுநீ கூறுதல் வேண்டும்.

* ரம்பையை நோக்கி.

அரண்மனைக் கோடி நடந்ததை எல்லாம்
உத்தமர் தம்பதிக் குரைத்துவா விமலா.
(விமலா போகிருள்)

ஆளா வதும்யான் பாழா வதூஉம்
எல்லா நடப்பும் கொண்டதிவ் விரவே.
(ராகு அகல்கிருன்)

## களம். 5. காட்சி. 2.

### 702

உ: உம்பரி லமர்ந்து தூய ஒளிதரு மீன்காள், நேர்ந்த
வம்புநீர் அறிவீர்: யானே வாய்திறந் துரையேன்: நெஞ்சே,
தன்பெரு மானம் நீத்து வாழ்வது தகுதி யன்ருல்!
தன்பெரு மானம் நீத்து வாழ்வது தகுதியன்ருல்!

### 703

பனியினும் தூயதாகிப் பளிங்கென மிளிர்ந்து செம்பொன்
கனிஎனத் திகழும் அந்தக் காயத்தைக் காயஞ்செய்யேன்.
இனிஅவள் வாழின் வையத் திருப்பவர் பலரைத் தீர்ப்பாள்.
நனிஅவள் கொல்வேன் ஆனல் குருதிகீழ் கொட்ட மாட்டேன்.

### 704

விளக்கொளி அவிக. ஆமாம் விளக்கிது அழிக! நல்ல
ஒளிதரு விளக்கே உன்னை அவித்து,யான் இருளில் நெஞ்சம்
அழிவுறின் மீண்டும் நின்னை அடைதலும் கூடும்: ஆனல்
அழகெலாந்திரண்டு நல்லோர் உருக்கொடு வந்ததொத்த—

### 705

பேரெழி லுடையோய், உன்னிற் பிறங்குஉள் ஒளியை நீப்பின்
வேருெளி நல்க ஈண்டோர் திருவிளக் குளதோ, காணேன்.
சீர்நறு மலரைக் கொய்தால் சிதைவுறு ததனைக்காக்க
ஓர்வழி அறியேன்; அஃது வாடியே உலர்ந்து போகும்.

### 706

நல்லஓர் மலரைப் பேண மரத்திலே மோத்தல் வேண்டும்.
சில்என ஊர்ந்து உள்ளம் உடலெலாம் செல்லும் மோப்பம்
நல்லறம் பிறழச் செய்யும். இன்னுமோன் றின்னும் ஒன்று*
சொல்லுவேன்; இறந்தபின்னும் கேளமள வனப்பை ஓம்பு.

* மோந்து வருகிருன்.

707

இன்னும்ஓர் முத்தம் ஆமாம், இஃதுதான் கடைசியாகும்.
இன்னஓர் சுகமே கூற்று! இதுவரை இல்லா ஒன்று!
கண்கள்நீர் காணுமேனும் வன்கண்ணீர் அவைதா மாகும்,
என்சினம்தூய தாகும் இறைநெறி நிற்ப தாகும்.

708

அன்புள்ள இடத்தி லன்றோ அடிதடி ஆர்ப்பு எல்லாம்
கண்விழிக் கின்றாள் (தி) அங்கு யார்அது? தேவர் தாமோ?
உ: என்ன! ஆம். திலகம் (தி) தாங்கள் படுக்கசங் குற்றலென்ன?
(சிறிது காலந்தாழ்த்தி)

709

உ: தொழுகையும் முடித்தாய் கொல்லோ? (தி) முடித்தனன்
தேவா (உ) நன்று.
வழுவென ஒன்று கொண்டு இன்னும்நீ அதனின் மீள
முழுமுதற் பொருளை நெஞ்சில் நேர்ந்திலை என்னின், ஈண்டே
கழுமுறை வணக்கம் ஆற்று. (தி) காரணம் என்ன தேவா?

710

உ: சரிசரி ஒல்லை ஆற்று. சற்றுயான் உலாவி நிற்பேன்
திருவருள் நேர்ச்சி யின்றி உன்னையான் கொல்ல மாட்டேன்.
முறையில்லை! தெய்வம் வந்து தடுக்கட்டும்: கொல்லேன்
(அங்கு.
தி: உரைப்பது கொலைகுறித்தோ? (உ) ஆம்அது கொலைகு றித்தே

711

தி: தெய்வமே எனைக்காப் பாற்று. (உ) ஆகுக அவ்வா றேதான்!
தி: இவ்வரு மொழியால் என்னைக் கொல்லீரென் றெண்ணு
(கின்றேன்
உ: எய்ய—! (தி) நும்மைக்காண அச்சமே எய்துகின்றேன்.
வெய்யதீக் கூற்றம் போல்வீர்; சுழல்தரும் தழல்நேர் கண்கள்!

712

ஒருசிறு குற்றமேனும் புரிந்ததாய் எனது நெஞ்சம்
அறிகில ததனால் அச்சம் பிறக்கவே வேண்டா: ஆனால்
பிறக்கிற இதன்கா ரணம்என்! (உ) பாவத்தை நினைந்து
தி) சிறக்க நின்மீது கொண்ட காதலை நினைத்தற்குண்டு [கொள்க

713

தான தான—தான தான—தன்ன தன்ன தானா—

உ: ஆமாம் காதல் காரணத் தாலே
நீதான் இன்றே சாகின்றாய்!

தி: காதல் காரண மாகச் சாதல்
என்பது இயற்கை விரோதமே!

714

ஏனோ பல்லை நெறுநெறு என்று
கடிக்கிறீர் அதுக்குறீர்?
ஏதோதீய வெறியால் நீவிர்
தேகம் எல்லாம் நடுக்குவீர்.

ஆஅம்! இவைதாம் கெட்டதீக் குறிகள்;
ஆனாலும் எனக்கெதி
ராக யாதும் இல்லை என்றே
எண்ணி யேஇ ருக்கிறேன்

715

உ: வாயை மூடு. வாளா யிருநீ.
தி: இருக்கின் றேன்நட ப்பென்ன?
உ: நேய மாய்நான் கொண்ட; அந்த
நின்பால் தந்த கைத்துணி—
கச்சன் கையில் அளித்தா யன்றோ?
தி: அன்று, அன்று, என் னுயிர்

716

உடலின் மீது சத்தியம்அவ்வா
றில்லை என்றே சொல்கிறேன்;
உடனே அவரை இவண்ண் அழைத்து
உண்மை தெரியக் கேளுங்கள்.

717

உ: பிரிய மாதே. உன்னு, உன்னு.
ஆவி பிரியும் நேரம்காண்:
அறவே வேண்டா கள்ள ஆணை!
தி: யான் இப் பொழுது சாகிறதில்.

718

உ: இப்போ தேநீ சாகின் றாய்.முன்
செய்த பாவம் யாவையும்

செப்பு வாய்.உள் ஒப்ப வே,நீ
செய்த பாவங் கள்தமை.

719

சத்தி யங்கள் செய்துநீஇ ம
றுப்பி னும்இங் கேற்குமோ?
உற்ற மாக ளங்கம் உள்வ
ருத்தம் சற்றும் குறையுமோ?

720

உன்னைக் கொல்வ தென்றே உறுதி
கொண்ட னன்(தி)அவ் வாறெனின்
மன்னு தெய்வ மே எனக்கு
இரங்கி நீஅ ருள்புரி

721

உ: யானும் இஃதே வேண்டு கின்றேன்.
தி: இரக்கம் அநகு உண்டுகொலோ!
யானே யாதும் தீங்கு எந்த
நாளும் செய்த தில்லையே.

722

கடவுள் படைப்பில் ஒருவர்க் கொருவர்
காட்டும் அன்பு முறையன்றி
கடந்த முறையில் கச்சன் மீது
இச்சை சற்றும் கொண்டிலேன்.

723

சின்னம் யாதும் அளித்திலன். (உ) ஆ ஆ!
தெய்வ மே,யான் கண்டனன்.
அன்ன வன்கை என்கைத் துணியை:
கள்ள ஆணை இடுகின்றாய்.

724

மனத்தை இரும்பாய் மாற்றுகின் றாய்நீ
மற்றும் அதனல் என்உள்ளம்
நினைத்த தான அறப்பலி அதனை
நெடுவன் கொலையாய் மாற்றுகிறாய்

725

அவன்கைக் கைத்துணி யானே கண்டேன்.
(தி) மற்றவன் அதனை எடுத்ததும்
அயலிட மாக இருக்கலாம்: அவனைக்
கேளுமின் உண்மை கூஉறுவான்

726

உ: உண்மையை உரைத்தனன்! (தி) யாதவன் உரைத்தது!
உன்னை அவன்பயன் படுத்தியதாய்.
தி: நன்னெறி விலகியோ? (உ) ஆமாம் (தி) இல்லை.
அவன்தான் நவிலான் அவ்வாறே:

727

உ: பேசநா இலனாய் அடைபட் டான் அவன்
புண்ணியன் ராகுவின் ஏற்பாட்டால்!
தி: மோசம் விளைந்தது! ஓபெரு மோசம்!
ஆமாம் கச்சிதர் இறந்தனரோ?

728

உ: உடம்பின் ஒவ்வொரு முடியும் தனித்தனி
உயிர்நிலை அவற்குக் கொண்டாலும்
திடமுற அவற்றைக் கொன்றே பழிதீர்த்
தென்பெரு பாழி வயிறடைப்பேன்

729

தி: ஐயோ! அவர்தாம் மோசம் போனார்:
யானும் அழிந்தேன் (உ) அடிவேசை:
அவனுக் காக என்கண் முன்னே
அழுகின் றாயே (தி) எனைநாதா

730

வெளியே துரத்துக, கொல்லுதல் வேண்டா
(உ) வேசை, வாயை மூடிக் கிட.
தி: நாளைக் கொல்வீர். இன்றோர் இரவு
யான்உயிர் வாழ வகைசெய்வீர்

731

உ: இல்லை, இல்லை. என்னநீ எதிர்த்தல்?
(தி) சரி.ஓர் அரைமணிப் பொழுதேனும்?

உ: எடுத்த வினையை நிறுத்துவ தில்லை.
(தி) ஒருசிறு தொழுகை புரிவதற்கு—.

732

உ: அதற்கும் நேரமில் * (வி A) தேவா, தேவா.
தேவா (உ) இஃது ஏதுகுரல்!

733

இருக்கிற துயிர்தான். முற்றும்
இறந்ததாய்ச் சொல்தற்கில்லை.
அரக்கனைக் கொல்வேன் நெஞ்சில்
இரக்கம்ஒன் றுதித்தல் நன்று!

734

இன்னுமிவள் குற்றுயிர் கொண்
டின்னலுறச் சகியேன் யான்
ஒன்றுசெய்வேன் A (வி) எம்தேவா,
எம்தேவா (உத்) யாரங்கே?

வி: எம்பெருந்தலைவா, நின்பால் இயம்ப ஓர் வார்த்தை உண்டு
உ: நன்றிது! விமலாவேதான்: வருகிறேன். வருகிறேன்நில்.
சென்றது ஆவி! கச்சன் இறப்பினைச் செப்ப வேதான்
வந்துளாள்: அந்தச் சத்தம் அலறியே நின்றதன்றோ?

735

இனிஒரு அசைவுமில்லை, இறந்துகல் லறையைப் போலத்
தனிமையில் அசைவு இன்றிக் கிடக்கிறாள்—அவளை உள்ளே
அனுமதித் திடலா கும்மோ? அதுஅது நல்ல தாமோ?
என்ன,ஓர் அசைவு ஆங்கு இருக்குமால்! இல்லை, இல்லை!

736

என்ன,யான் செய்வது நல்லது?
இன்னவள் மனையறை உள்வரின்
என்மனை யாளுடன் பேசுவாள்—
என்மனை யாள்எவள்? மனையவள்!

737

மனையவள் யாவளும் ஈண்டிலை!
எனக்கெவள் மனைவி?யாரும் இலை.
எனதுபொல் லாதகா லம்இதே
நினைவினில் தாங்கவே ஆற்றகிலேன்!

* கயிறுகொண்டு கழுத்தை இறுக்கினன். A திரைக்குள் நின்று.

738

திங்கள்வெங் கதிரெனும் இரண்டுமே
பொங்குவெங் கோள்வாய்ப் பட்டன்ன
எங்கிலும் இருள்மயம் ஆவதாய்க்
கண்களும் நுகர்வன காட்சியே.

739

மாறுபா டிலைதின்—நேர்வினை அஞ்சிப்
பேருல கெல்லாம்—சோர்வுறும் அயரும்

740

வி: (உள் நின்று)
எம்பெருந் தலைவா, சற்றே இரண்டொரு வார்த்தை சொல்லத்
தங்களின் தயவுவேண்டும் (உ) யானுனை மறந்து விட்டேன்!
இங்குவா விமலா, இந்தத்திரைகளை இழுத்துமூடி—*
எங்கிருக்கின்றாய்? நீதான்[S] யாதுகாரணமாய் வந்தாய்?

741

வி: எம்பெருந்தலைவா, அங்குக் கொடுங்கொலை நடந்ததுண்டு.
உ: எங்கு,எப் பொழுது? (வி) தேவா, இப்பொழுதேதான் நேர்வு
உ: திங்கள்தன் வழக்கம் மாறிப் பூமியை அண்ம லாலே
இங்குளார் பித்துக்கொள்ள இக்கொடுஞ் செயல்கள் நேர்வ.

742

வி: நற்பெரு வஞ்சி யூரான் ருத்திரன் என்னும் பேரான்
கச்சிதன் செயலால்இன்று பட்டிறந்துள்ளான் தேவா.
உ: ருத்திரன் இறந்தான் கொல்லோ? கச்சிதன் இறந்தான்
கொல்லோ?
வி: கச்சிதன் இறந்தானல்லன்.(உ) கச்சிதன் இறந்தான் அல்லன்?

743

உ: நிலைமாறிய கொலைதான் இது.
பழிவாங்கியான் களியாடலும்
வழிமாறி,நெஞ் சழிவானது.
தி: கொலைதான் இது முறைகெட்டது!

744

தி: முறைகெட்டது (வி) குரல் யாதது?
உ: குரல் ஏதிவண்? (வி) ஓஓஇது

---

* திரையை இழுத்துப் படுக்கையை மறைத்தல்.
S. கதவைத் திறக்கிறான்.

பெருமாட்டியின் குரலே; துணை
புரிவார், ஒரு வருமே இலர்!

745

(இசைபெற்ற உரைநடைச் செய்யுள்)

வி: அம்மா, மீண்டும் பேசுங்கள்—அருமை
அம்மா, மீண்டும் பேசுங்கள்—திலக
அம்மா, மீண்டும் பேசுங்கள்.(தி)—குற்றம்
இன்றி யானே சாகின்றேன்.

---

வி: ஐயை யோ இது யார்வேலை?
தி: யாரும் இல்லை யானே தான்.
புறப்பட் டேன்யான் என்பிரிய
இறைவர்க் கிதனை அறிவிப்பாய்.

---

விடைபெறு கின்றேன்* (உ) என்ன இது?
எவ்வா றேஇவள் கொலைப் பட்டாள்?
வி: ஐயோ ஐயோ யார் அறிவார்?
உத்: 'யானல் லன்'என அவள்சொல்ல
நீஇ கேட்டுநின் ருய்அன்ரே?

---

வி: ஆமாம். அவள்அவ் வாறுசொன்னுள்.
உண்மையைச் சொல்வதில் குற்றமென்ன?
உ: பொய்ம்மையே பேசிப் பெருநிரயம்
அடைவார் கதியே அவள் கதியும்.
அவளைக் கொன்றவன் யான், யானே.

---

வி: இன்னும் நல்லவள் அவள்ஆனுள்!
பின்னும் பேயாய்க் கெட்டாய் நீ!

---

உ: அவநெறிப் பட்டனள் வேசையு மானுன்!
வி: பேய்மகன்! அவள்மேல் பொய்ப்பழி சுமத்தேல்

* இறக்கிருள்.

உ: நீர்என மாறும் நெஞ்சத்தள்!
வி: நெருப்பென எரியும் வெறியோய்,கேள்!
பொய்யள் என்ருய் நீ அவளை,
புனிதமா தெய்வம் என்றுணர்க.

---

உ: கச்சித னுடனே காதலுற
வில்லையோ என்றுன் கணவனைக்கேள்.

---

தக்க காரண காரியங்கள்
கண்டே இத்துணை செய்யேனல்—
எல்லா நரகும் சேர்ந்தாலும்
என்னை வருத்தப் போதாவே.

---

உன்கண வனைக்கேள். உற்ற எல்லாம்
அவனே நன்கு அறிவான்காண்.

---

வி: என்ன் கணவர்?
உ: உன்ன் கணவர்!

---

வி: கற்பு வரம்பைக் கடந்தனள் என்ருே?
உ: கச்சனு டன் அவள்கடந்தனள் என்றே.

746

சரிசம யீடாய் நல்க; தெய்வம்பல் லூழி ஆய்ந்து
புரையிலா வைரத் தால்ஓர் பூமிஉண் டாக்கி அஃதைத்
தரினும்யான் கொள்ளேன் அன்ருே தையலாள் தூயளாயின்!
வி: உரைத்ததென் கணவர்? (உ) ஆமாம் முதல்முதல்
அவனே சொன்னுன்

747

உ. உத்தமன் அவன்!
குப்பை கூளமாம்
அற்ப வினைகளுக்
கப்பா லானவன்!

748

வி: என்கணவர்? (உ) 'என்கணவர்
என்கணவர்' என்றேநீ
சொன்னதையே சொல்வதுதான்
என்னமுறை? உன் கணவன்!

749

வி: அம்மையே அம்மா
வஞ்சமே காதலைப்
பங்கம் செய்தது!
நங்கை பிறழ்ந்ததாய்ச்—

750

சொன்னதென் கணவரோ?
உ: என்ன, நீ பெண்ணே,
உன்னருங் கணவனே!
நன்கறிந் தனையோ?

751

என்பெரு நண்பன்
நின்னருங் கணவன்:
நன்மகன் ராகோ
சொன்னான் சொன்னான்:

752

வி: இப்படிச் சொன்ன அந்தப் பாவியின் பாழ்த்த நெஞ்சம்
நித்தமும் குன்றிப் பாதிஅளவினில் நிரயத் தாழ்ந்து
வெப்புறும்: அவர்தாம் வேண்டுமென்றுபொய் சொல்லு கின்றார்.
குப்பையை விரும்பும் உள்ளம் களித்தவள் கூடிநின்றாள்!

753

உ: எய்யய் (வி) ஆமாம்
செய்கிறதைச்செய்.

754

என்ன பொருத்தம் இவட்கும் உனக்கும்—
அன்ன பொருத்தமே நீசெய் வினைக்கும்

மன்னுபே ரின்ப மோட்ச பூமிக்கும்—
உ: நன்மையை நாடி வாயை அடக்கு.

755

வி: தீங்கு நூறு நேரி னும்யான்
தாங்கும் ஆற்றல் பெற்றுளேன்.
ஈங்க வற்றில் பாதி செய்ய
நீயே ஆற்றல் பெற்றிலை.

756

மூடம்! மூடம்! அறிவு கெட்ட
மூடமே,எ அற்பமே;
கேடா, என்ன வேலை இஃது
வாளுக் கியானே அஞ்சுவேன்!

757

ஒன் றிரண்டு அல்ல பத்து
இருப தைநீ கொல்லினும்
இங்கு கூவி யாவருக்கும்
உன்கொ டூரம் சொல்லுவேன்.

758

ஐயோஒ கொலை ஐயோஒ கொலை
உதவி செய்ய வாருங்கள்.
ஐயோ ஐயோ கொலைஎம் தலைவி:
கானவன் கை பாருங்கள்.

759

## (ஆறுசீர்த் தனி அடிகள்)

(—மாதேவர், கருணாகரர்! இராகு வருகிறார்கள்—)

மாதே: தளபதி, நலமோ? மற்று நடப்புயா தேனும் உண்டோ
வி: நீவிரும் வந்துள் ளீரோ? நேர்ந்துள்ள பழியை எல்லாம்
நம்தலை சுமத்து மாறு நன்குநீர் ஆற்றி யுள்ளீர்!
கரு: அப்படி நடந்ததென்ன? (வி) தாங்கள்ஆண் மகனே ஆனல்
இப்பெரு வம்பர் சொல்லைப் பொய்என நாட்டல்வேண்டும்.
கானவர் மனைவி கற்பை இழந்ததாய் அவர்பால் தாங்கள்*
உரைத்ததாய் இவர்சொல் கின்றார். இன்னவா றுரையீர் நீவிர்

* ராகுலை.

என்று யான் அறிவேன் நன்கு. இந்தவீண் வம்புக்கெல்லாம்
நீர்தலையிடவே மாட்டீர்; நிலைமையை உரைப்பீர் இங்கு:
என்மனம் பொங்குகின்ற தாதலால் நீர்தாம் சொல்லும்

ரா: என்மனம் பட்ட ஒன்றை அவருக்கு நானே சொன்னேன்!
கண்டனர் அவர்தாம், முற்றும் உண்மையே சரியே என்று
கொண்டனர், அதற்கு மேலாய் யானொன்றும் கூறிற்றில்லேன்

வி: அவள்நெறி தவறி யுள்ளாள் என்றுநீர் புகன்றதுண்டோ?

ரா: புகன்றனன். (வி) நீர்தாம் பொய்த்தீர். பாழ்த்தமா பொய்யே
(சொன்னீர்
என்னுயிர்ஆணை சொல்வேன், இதுபெரும் பொய்யே மிக்க
கீழ்த்தரமான; கேட்டோர் வெறுத்திடும் பொய்யே: ஐயோ
கச்சிதனுடனே கள்ள உறவவள் கொண்டாள், நீர்தாம்
'கச்சிதன் உறவு' என்று கூறியதுண்டோ (ரா) பெண்ணே
கச்சிதன் உறவே. போதும்! நாவினை அடக்கி நிற்பாய்.

வி: நாவையான் அடக்குவானேன்? யானின்னும் பேசவேண்டும்.
என்பெருந் தலைவி மாண்டு கிடக்கின்றாள் படுக்கை மீது.
(யாவரும்) கடவுளே காக்கவேண்டும், கடவுளேகாக்க
(வேண்டும்.

வி: உமதுவாய்ச் சொற்களாலே உற்றதிக் கொலைதான் காண்பீர்-

உத்: நற்பெருந் தகையீர், அஃது உண்மையே: திகைத்தல்வேண்டா.

கரு புதியஓர் உண்மை இங்கு புலப்படு கிறதே (மா) இஃது
அரக்கர்தீச் செயல்போ லாகும்.(வி)வஞ்சகம் வஞ்சம்!வஞ்சம்
வஞ்சத்தை உணர்ந்தேன் இன்னே! வஞ்சம்மா வஞ்சம்!
(வஞ்சம்!
இன்னவா றுரைப்பாரென்று முன்னரே நினைத்தேன் ஐயோ
நெஞ்சமோ குமுறும். சாவேன். வஞ்சம்மா வஞ்சம் வஞ்சம்!

ரா: பைத்திய முற்றாய் கொல்லோ? என்னநீ போபோ போ நீ.

வி: நற்பெருந் தகையீர், இங்கு நான்சற்று பேசவேண்டும்.
கணவனுக் கடங்கி நிற்றல் காரிகை கடன்என் றாலும்
அஃதுஇப் பொழுது அல்ல: அகலவே மாட்டேன்மாட்டேன்

உ: ஐயகோ! ஐயோ! ஐயோ! * (வி) அமளிமேல் உமக்கு என்ன?
இனியவள் நல்லள், தூயள், இறைவழி பாட்டில் மிக்க
புனிதையைக் கொன்ற கிழோன்! கீழிருந் தழுவா, கீழ்நில்

உ: B அவள்நடை தவறிவிட்டாள்-அருமைசால் மாமா, தாங்கள்
இருந்ததை அறியேன். சற்று முன்னரே இனிய தங்கள்

* படுக்கைமேல் சாய்கிறான்.
B எழுந்து நின்று

பெண் அவள் இறந்து ஆங்கு கிடக்கின்றாள் என்கை வேலை.
வினை இது கொடிது, பொல்லாப்பானதாய் எவர்க்குந்
(தோன்றும்

760

கரு: ஐயோ, நற் றிலகவதி, அன்றே உன்
தந்தையும்விண் அடைந்த தாலே
மெய்யாக மகிழுகிறேன்; நின்மணமே
அவர்மரண ஏது வாகும்:
வெய்யமனக் கவலைஎனும் வாளறுக்க
முதுகிழவர் வாழ்வைத் தீர்த்தார்.
உய்ந்து அவர் இன்றிருந்தால் இதைக்காண
உளங்கொதித்துச் சாடி நிற்பார்.

761

தெய்வத்தை யும்சபிப்பார், தீநரகில்
வீழவைப்பார் (உ) வருந்தற் குண்டு!
பொய்நெறியில் கச்சனுடன் ஆயிரம் நாள்
அவள்உறவு பூண்ட எல்லாம்
ஐய, ராகு நன்கறிவான். கச்சனுமே
ஒத்துள்ளான். இதற்கு மேலாய்:
கையினில்யான் முதல்முதலாய்க் காதலின் நற்
சின்னமெனக் கொடுத்த ஒன்றை—

762

லீலைக் குரிய பரிசாக
அதனை அவனுக் கேகொடுத்தாள்.
மேலை நெடுநாள் பொருள் அதுதான்
எந்தை என் தாய்க் களித்ததுவே.
வேலைப் பாடு அமைந்துள்ள
கைத்துணி யதனை யான் அவன் கை
மேவக் கண்டேன் (வி) தெய்வதங்காள்!
ஐயோ, ஐயோ தெய்வதங்காள்!

763

ரா ஏஎன் நிறுத்து, வாயை மூடு.
வி ஏன்நான் வாயை மூடுவது?—

மாட்டேன் மாட்டேன் வடவாடைக்
காற்றைப் போல வீசி நிற்பேன்.

அதுவெளிப் படுமே! அதுவெளிப்படுமே!

## 764

மக்கள் தேவர் நாகர் யாவரும்
ஒக்கக் கூடி என்னை இகழ்ந்து
மிக்க கேவல மாகப் பேசினும்
நிற்பேன் இங்கு; பேசுவேன் நன்கு.

## 765

ரா: அறிவோடுநட—வீட்டை யடை.
வி: அதுதான் மாட்டேன்: யான்மாட்டேன்
(ராகு அவளைக்குத்தப் போகிறான்)
கரு: நுதிவா ளுக்கிரை பெண்பாலோ ?

## 786

(ஆறு சீர்த்தனி அடிகள்)

வி: மதிஎனும் அதுசற் றில்லாக் கானவ, நீ மொழிந்த
சிறுதுணி அதனை நானே எடுத்துஎன் காதன் கையில்
கொடுத்தனன்: அவர்தாம் இந்தச் சிறுபொருள் பெறுதல் வேண்டி
உருகினார், மருகி நின்றார், களவினும் கொள்க என்றார்

## 767

ரா: அடி, பெரு வம்பி, வேசி! (வி) அவள் அதைக் கச்சர் கையில்
கொடுத்தனள்?! இல்லை இல்லை! எடுத்ததும் கச்சர் கையில்
கொடுத்ததும் யானே, நான்தான். (ரா) அசடு, என் பொய் சொல் கின்றாய்
வி: கடவுளே சான்று. நானே பொய்சொல்லேன் நான்பொய் சொல்லேன்

## 768

ஏ பழி காரமூடம்! இத்தகை முட்டாள் தான்ஓர்
மாபெரும் நல்லா ளாத்தன் மனைவியாக்கோடல் ஏனோ?
(ராகு விமலாவைக் கத்தியால் குத்தி ஓடுகிறான்)

## 769

உத்: இடிஎனும் ஒன்று நீக்கி; வானத்தில் இவன்மேல் வீழ
நெடும்பெருங் கற்கள்தாமும் இல்லைகொல்! கொடியவஞ்சன்!
கரு: மடவால் வீழ்ந்தாள்! ஐயோ மனைவியைக் கொன்றான் பாவி!
வி. அடியவள் என்னை என்றன் தலைவியின் அருகில் வைப்பீர்.

## 770

(ஆறு சீர்த்தனி அடிகள்)

மா: மனைவியைக் கொன்றுதானும் அயலிடம் மறைந்து விட்டான்
அவன்பெரு வம்பன் தீயோன். நீவிர் தாம் முன்பு யாம்அக்
கானவ னிடம்ப றித்த கத்தியைக் கையில் ஏந்தி
வாயிலில் நின்று அன்னன் வெளியுறா வண்ணம் காப்பீர்.
வெளிவிடு வதினும் கொன்று விடுவதே நன்மையாகும்.
இழிஞன்அக் கயவ னைக்கைப் பற்றயான் பின்செல்கின்றேன்.

(இருவரும் வெளிச் செல்தல்)

## 771

உ: ஏறுக்கும் நடையின் பீடு என்னிடம் இல்லையாக—
பேர்,தனிப்பெருமை யில்லாப் புல்லர் என் வாளைத்தூக்க—
சீர்எலாம் இழந்து, முந்தைச் சிறப்பினைத் தாங்க லாமோ?
சேர்ந்தஎன் சிறப்பு எல்லாம் ஒக்கவே அழிவ தாக.

## 772

வி: அம்மணி! உனது பாட்டில் அடங்கிய கருத்து யாதோ?
என்மொழி உனது காதுக்கெட்டுமோ? பாடி ஆடி
அன்னம்போல் சாகின்றேன்யான்: அணிபசும் புல்லே,புல்லே!
வன்மனத் தவனே, காட, கானவா, அவள்தான் தூயள்.

## 773

உனையே எண்ணி வாழ்ந்தாள் என்றுயான் சொல்வ தெல்லாம்
உண்மையே யானால் யானே உம்பர்வா மோட்சம் சேர்வேன்.
என்பெரு எண்ணம் இஃதை ஈண்டியான் உனக்குச் சொல்லி
என்னுயிர் நீத்துக் கொண்டேன் யானுயிர் நீத்துக் கொண்டேன்.

## 774

உ: மற்றொரு கட்கம் இங்கு கொண்டுளேன்: அம்மான் அஃதே
பானிய நாட்டு வார்ப்பு பனிப்புறம் பெற்ற தாகும்.
கையுறும் அதுதான்: ஈண்டு—யான்வெளி வருதல்வேண்டும்.

## 775

கிரு: அப்படிச் செய்வீரானால் ஆபத்தே ஆகும். நுந்தம்
கைத்தலத் தியாது மில்லை ஆகவே படுவீர் திண்ணம்.

உ: உட்புறம் நோக்கிப் பின்னர் பேசுகி ன்னும்: யாதும்
பெற்றிலேன் எனினும் நம்மைத் தாக்குவேன் (கரு)
[என்ன, ஏனே?

776

உத்: கைத்தலம் பார்மின், கட்கம்: இதனினும் சிறந்த ஒன்று
இப்பெரு வுலகில் எந்த வீரனும் கொண்ட தில்லை.
நற்பெருந் தோளும் இந்த வாளும்மே துணையாக் கொண்டு
இற்றைநாள் தடையைப்போல இருபது பங்கு விஞ்சு—

777

பெரும்பெருந் தடையை எல்லாம் பொருட்படுத் தாதவாழ்வும்
இருந்தது: அதுஓர் காலம் என்னவீண் பெருமை! ஐயோ!
உரத்தது விதியே அஃதை வெல்லுவார் யாரு மில்லை.
இருக்கும்என் நிலையே வேறு. எனக்குநீர் அஞ்ச வேண்டா.

778

பிடித்தனென் கத்தி என்று பேதுறவேண்டா. இங்கு
முடிந்ததென் வாழ்வின் ஓட்டம். முடிவுறு இடமும் இஃதே.
மடிக்கலம் இறுதியாகக் கரைபெறு துறையும் இஃதே:
நடுக்குற வேண்டா. வீணே அச்சமேன்? பின்னி டாநீர்.

779

ஒருசிறு துரும்பைத் தூக்கி உத்தமன்மீது நீங்கள்
எறியினும் அவன்பின் செல்வான். புகலிடம் அவனுக்கில்லை.
வருந்தநீ பிறந்தாய் பெண்ணே, இன்றுஉன் வண்ணமேனி
நிறமெலாம் வெளிறித் தோன்றும், நீஅணி துணியைப் போன்றே.

780

தேவசந் நிதியிற் கூடுங் காலையில், உனது தூய
பார்வையே என்னைத் தள்ளிப் படுகுழி நரகில் வீழ்த்தப்,
பேய்களே தடுத்துத் தாங்கும். பிரியநீ சில்லென் றுளாய்:
தூயஉன் கற்பே போலக் குளிர்ந்தனை! தீயன்! தீயன்!—

781

பாவியேன் திவ்யஇந்தக் காட்சியைப் பார்க்கா வண்ணம்
பேய்களே, சாட்டை தூக்கி அடித்தெனைக் கீழே வீழ்த்தும்;
வாயினால் ஊதி மேலே காற்றிலே பறக்க வையும்:
தீஎரி குழம்பாய் நிற்கும் கயங்களில் போட்டு மூழ்க்கும்.

782

இறந்தாள்! திலகம்.
இறந்தாள்! ஐயோ!
இறந்தாள்! ஐயோ!
சிறந்தஎன் திலகம்

(உலூகர், மாதேவர், காயத்துடன் நாற்காலியில் கச்சிதர்; அதிகாரிகளால் கைதியாக்கப்பட்ட ராகு—இவர்கள் வருகின்றனர்)

783

(இசை)

உலூ: ஆத்திரக் காரன், கொடுத்துலைவக் காதவன், அவன்தான் [எங்கு உளான்?
உத்: அவனே அந்த உத்தமன் என்பான் அவன் இதோ இங்கு [உளான்.
உலூ: நச்சரா வானஅப்பெரு வம்பன்எங்கே? அவன் வரட்டும்.
உத்: கொச்சை மானிடன் அடிகளைப் பார்க்கிறேன். [மேலும் பழங்கதையாய்—

784

மற்றவன் காலிலாப் பேயினம் ஆனல்
உற்றஎன் கைகளால் உயிரிழ வானே!*
உலூ: பற்றுமின் வாளை: பற்றுமின் நீவிர்,
ரா: உற்றது குருதி: உயிர்க்கூறு இல்லை.

785

உத்: இறப்பிலை என்று
வருத்தமு றேன். நீ
இருப்பதே எனது
விருப்பமு மாகும்.

786

ஏனெனில், இறந்து
வாழு டுறுதல்
மேன்முறை யாக
யான்கரு துவனல்.

* ராகுவை வாளால் தாக்குகிறன்.

787

உலா: உத்தம ரே,முன்
மிக்கநல் லவர்நீர்.
இப்பொழு தோ,ஓர்
துச்சனின் உறவினல்—

788

மாறினீர். உமக்குக்
கூறயா துளது?
உத்: "கூறயா துளது"
யாதும்நீர் கூறலாம்.

789

நற்கொலை காரன் எனும்ஓர் பெயரை
எற்கிடல் நன்றே, ஏனெனில் முற்பட
உற்றதீ வினைதான் பகைமையா லன்று.
நற்பெரு மானம் ஓம்புநன் னெறியால்.

790

உலா: இப்படு பாவி
முற்படச் செய்த
குற்றங் களிற்சில
ஒத்துளான். மற்று—

791

கச்சிதற் கூறுசெய்ய நீவிரும் கலந்த துண்டோ?
உ: நிச்சய மாகஉண்டு (கச்) நான்புரி குற்றம்? தேவா.
உ: குற்றமே இல்லை. யான்செய் குற்றம்நீ பொறுத்தல் வேண்டும்:
துச்சமா னிடப்பே யாகத் தோன்றிநல் லுடலோ டுயிரை

792

மாயஓர் வலையில் வீழ்த்தி, என்னையே மயக்கு வித்த
பேயனைக் கேட்பாய் இஃதை. (ரா) என்னைநீர் யாதும் கேளீர்.
ஆயதில் அறிந்த மட்டும் அறியநீர் வல்லீர். யானே
வாய்இனித் திறந்து பேசேன் (உலா) கடவுளை வணங்குங் காலை?!

793

கரு: சித்திர வதைசெய் தாலேதிறக்கும்உன்வாய்தான் (உ) ஆமாம்
உத்தமமுறையே சொன்னீர் (உலா) உற்றதை உணரீர் தாங்கள்

சற்றுயான் சொல்வேன், கேட்டு நடந்ததின் உண்மை ஒரும்.
செத்தவனுன் ருத்ரகோட்டியின் சட்டைப் பையில்—

794

இருந்தஓர் கடிதம் இஃது, மற்றொன்றும் ஈண்டே உண்டு.
வரைந்துள திபாது என்னின் கச்சிதன் உயிர்துறக்கத்
திறம்பட ருத்ரன் வேலை செய்யவேண் டியதே யாகும்.
உத்: அறந்திறம் பியபா தகனே! (கச்) அளப்பருங் கொடியோன்!
(நீசன்!

795

உலா:
மற்றொரு கடிதம், இஃது மனம்வெறுத் தெழுதப் பட்டுச்
சட்டையுள் இருக்கக் கண்டோம். இதனையே ருத்ரன் இந்தக்
கெட்டமா வஞ்சன் கையில் சேர்ப்பதன்முன்னே, கிழோன்
மற்றவன் மனம்திருப்தி கொள்ளவே செய்தான் போலும்.

796

உத்: பெரும்பழிகாரப் புல்லன் !:—
பிரியகச் சிதர், என் மனையாள்
சிறுதுணி உமது கையில்
வருவதற் கேது யாது ?

797

கச்: எனதுசிற் றறையினுள் கிடந்தது அத்துணி,
தனதுஉட் கருத்தினை முடிப்பதற் காங்கவன்
மனத்துணி வுடன்விட் டொழிந்தனன் என்றுதான்
பகர்ந்தனன் (உத்) பேதையான் பேதையன்! பேதையன் !

798

கச்: "கச்சிதன் காவல்செய்வான். கடிதுநீ சென்று ஆங்கே
மிக்கஓர் கலக்கமாக்கு, என்றதும் முறையோ" என்றே
ருத்திர கோட்டி கொண்ட கடிதமும் கூறும்: தேரின்
இக்கடு வினையா லன்றோ வேலையின் நீக்கப் பட்டேன்.

799

செத்தவ னுன் ருத்ரன் சாவதன் சிறிது முன்பே
சொற்றனன் ராகுதன்னைத் தூண்டினன் என்றே. தன்கைக்
கத்தியால் வெட்டிச் சென்ற தாகவும் கூறி னுல்.

உலா:
உத்தம, உமதாதிக்கம், உயர்வெலாம் ஒழிய; இன்று

800

கச்சிதர் நாட்டிற் குற்ற காவலைத் தாங்கு கின்றார்,
இச்சிறு அறையை நீக்கி எம்முடன் வருவீர் நீர்தாம்.
இப்பயல் அழிதற்கில்லை: இருந்தவன் பன்னு ளாகச்
சித்திர வதைக்குள் ளாகிச் சிதைவதே அவற்கு ரித்து!

801

வஞ்சிமா நகரின் ஆட்சி
மன்றுளார்க் குந்தீ வினையைச்
சென்றுயாம் கூறுங் காறும்
இங்குளம் காவற் காவீர்.

802

உத்: சற்றேள நில்லும். ஒன்றிரண்டுரைப்பேன்.
திருச்செவி ஏற்றுநீர் செல்லும்.
உற்றநல் லாட்சி முறையினிற் சிறிது
உழைத்துளேன்: அவர் அதை அறிவார்.
மற்றினி அதனைப் பற்றியான் பேசேன்,
மன் அவைக் கிங்குநேர் வுற்ற
கெட்டதீ ஊழின் வினைகளை நீவிற்
குறிப்பிடும் பொழுதுஎன் கதையை—

803

உள்ளதை எல்லாம்
உள்ள படிநீர்
சொல்லுவீர்: மழுப்பி
மெல்லுதல் வேண்டா.

804

புல்லிய பகையால் அழுத்தவு வேண்டா.
அம்முறை புகலுவீ ராயின்:—
நல்லறிவிழந்து காதலுற் றவனாய்;
நிலைத்ததில் மோகமா னவனாய்;
கள்ளமே அறியா நெஞ்சுடையவனாய்;
கரவென அறிவுறுங் காலை
உள்ளமே கொதித்து ஒழித்தழிப் பவனாய்
உரைப்பதே உம்கடன் ஆகும்.

805

தன் இனமெல்லாம் சேரினும், விலையில்
தகுதிகொள் ளாப் பெரு மணியை
மண்ணினில் வீசி எறிந்தபுன் மூட,
மதியிலாக் கயவனாய்—மேலும்
கண்ணினில் நீரே கசிந்தறி யாவன்
கண்மைய னாயினும், பாலை
வன்னில மரங்கள் வடிக்கும்நன் னீர்போல்
புன்கணீர் பொழிந்துநின் றவனாய்—

806

என்னைநீர் உரைப்பீர். இன்னமொன் றுரைப்பேன்
ஏலப்ப புரியினில் ஒருவன்,
வன்மைசேர் உடலன், பாகையன் நமது
வஞ்சிமா நகரனை அடித்து
மன்முறை பழித்துப் பலபல பகர
மற்றவன் கழுத்தையான் பிடித்து
இன்ன ஓர் குத்துக்[A]குத்தினென் (உஆ) என்ன!
குருதிசேர் களரியாகியதே!

807

கரு: பேச்சுப்பேச் சென்றே பகர்ந்த பலவும்ஓர்
வீச்சின் மறைந்தன வே.

808

உத்: முத்தமிட்டே உனைக்கொன்றேன்:
மற்றொருநல் வகையறியேன் [B]
முத்தமிட்டே சாகின்றேன் [C]

கச்: இஃதையான் எதிர்பார்த்தேன்—

809

பெருமித உளத்தினர்: மற்றும்
கருவிகைக் கொண்டிலர் எனயான்
கருதியே வறிதா யிருந்தேன்.

உ-ஆ: [D] திருட்டுவஞ் சகப்புன்னையே,

---

A தற்கொலை செய்கிறான். B அவள் மீது சாய்கிறான் C சாகிறான்.
D ராகுவை நோக்கி.

## 810

உள்ளக் கொதிப்பு, உறுபசி, ஆழ்கடல்,
யாவினும் கொடியோய், கொடியோய் பார்நீ.
பார்க்கொணா முறையில் படுக்கையில்
(பிணக்குவை.
கொடுவினை ஆற்றினை: பழிபடர் நெறியே
பார்வையிற் பிறத்தலின் போர்வைமே விடுவல்.
கருணா கரரே, இம்மனைக் காவல்
உம்கடன்: மேலும் உத்தமர் பொருள்களை
நேர்உரி மையுடன் நீர்கைக் கொள்வீர்.
[B] மாட்சிமை மிக்க, ஆட்சியின் அதிபரே,

## 811

எப்பொழுது எவ்விடத்தில் எம்முறைஇக் கீழ்மகனை
நைப்பதுஎன் பனஎல்லாம் நீர்தெரிந்து நிறைவேற்றும்.
தப்பாதே நிறைவேற்றும்! கடுவினையை, உள்வருந்திக்
கப்பலில்யான் நேர்சென்றே காவலருக் கறிவிப்பேன்.

முற்றிற்று.

பாக்களெண் ணூற்றுப் பதின்மூன்றும் :* நான்முகஞ்சேர்
வாக்கும் இருபத் திரண்டாகும். ஷேக்ஸ்பியரின்
ஒத்தல்லோ செந்தமிழில் உத்தமனாய் ஆக்கிவைத்தார்
முத்தமிழ்தேர் ஆதித்தர் தாம்.

**இனிவரும் நூல்கள் தாமே அப்பல்லோ எனப்பேர் தாங்கும்.**

---

B. கச்சிதரை நோக்கி.

* **537, 784** இவற்றை அடுத்த இரண்டும் எண் பெறுமல் விடுபட்டன.

# தெய்வப் புலவரின் திருவரலாறு

இங்கிலாந்து தேசத்தின் "ஆவன்" நதிக்கரையி லுள்ள "சுராப்போர்டு" என்னும் ஊரில் ஜான்ஷேக்ஸ் பியர்—மேரி ஆர்டன் என்பாரின் தவக்குழந்தையாக வான்பெருங்கவி வில்லியம் ஷேக்ஸ்பியர் 1564-ஆம் ஆண்டில் ஏப்பிரல் மாதம் தோன்றினர்.

அஃது எலிசபெத்து மகாராணியார் காலம் குழந்தை வளர்ந்து கற்றுத் தேர்ந்து பதினெட்டாம் பிரா யத்தில் "அனிகத்வே" என்னும் மாதினை மணந்து; உலகமாகிய நாடக மேடையில் நடைபெறும் பலவித கூத்துக்களையும் கண்டு களித்துக் கருத்துள் கொண்டது.

1583-ஆம் ஆண்டில் நமது கவிஞர் ஒரு தந்தையா னார். தக்க வருமானமின்றி இன்னலுற்று ஊரைவிட்டு வெளியோடவும் நேர்ந்தது. கதைகள் காவியங்கள் எழுதி யும் நடித்தும் அவ்வருவாயால் வாழ்வை நடத்தியும் வந் தார். ஆயினும் திரண்ட பொருளை என்றும் கண்டிலர்; அதனால் நெஞ்சமும் கவன்றிலர்.

1594-ஆம் ஆண்டில் இவர்தம் நண்பர் சவுதாம்டன் பிரபு இவரது கவித்திறனை வியந்து இவருக்கு 1000 பவுன் பரிசளித்தார். இத்தொகை கொண்டு நமது கவி ஒரு நாடகசாலை அமைத்து; அதிலும் பிற இடங்களி லும் நாடகமாடி வந்தார். தமது அசைவிலா ஊக்கத் தால் திருமகளின் துணைவரானர். நூறு ஏக்கருக்கு மேற் பட்ட நிலம், பல மனைகள் வாங்கி ஒரு கனவானக வாழும் பேறு பெற்றார்.

1612-ஆம் ஆண்டில் தமது சொந்த ஊரில் குடிபுகுந் தார். 1616-ஆம் ஆண்டில் ஏப்பிரல் 23-ஆம் நாளில் மண்ணுலகை நீத்தார். இந்நாளே அவர் பிறந்த தின மாகவும் கருதப்படுகிறது. ஆங்கில நாட்டார் தம் அரும் புலவரைக் கவுரவிக்க அவர் இருந்த இடம், அவர் பற்றிய பல்வேறு பொருட்களைப் பேணுதல் செய்து ஒரு காட்சி மாடம் நிறுவியுள்ளார்கள். அவரோ அழியாப் புகழுடன் உலக மகாகவி என்று யாவரும் போற்ற, அறிஞர் பலர் உள்ளத்திலும் வாழுகிறார்.

# சிறந்த சில கட்டங்கள்

உத்தமன் கதையில் ஆங்காங்கு தொடர் நெறியில் நீதியும், கற்பனையுமாகச் சுவை தரும் இடங்கள் மிகப் பல. அவற்றுடன் தனித்தனிச் செய்யுட்களாகச் சுவை தருவன பல. அவற்றுட் சிலவற்றை அடியிற் காட்டுவாம்:—

**அவையடக்கம்**

74, 88, 128, 154, 155, 158, 160, 161, 180, 190, 198—201, 208, 237, 250, 355, 477, 483, 488, 489, 510, 511, 532—534, 547, 557—61, 578, 611, 612, 621, 637, 643, 644, 647—653, 660, 682, 683, 686, 687, 712, 722, 746, 777—781, 789, 804, 805,

| பக்கம் | பாட்டு | வரி | திருத்தமுறை. |
|---|---|---|---|
| 9 | | 10 | யானை பிழைத்த வேல் |
| 15 | 31 | 112 | அம்பலவாணர், அம்பலவாணர் |
| 19 | 53 | 4 | பெரிய சழக்கு |
| ,, | 55 | 1 | இங்கிருப்பின் |
| ,, | ,, | 3 | இருப்பின் யான் |
| ,, | 57 | 3 | மூள்மல்லர் |
| 21 | | 4 | உணர்வாய்கொல்லோ? |
| 28 | 100 | 4 | சேர்ந்த தூதன் |
| 40 | 177 | 2 | கலக்குறும் |
| 43 | 192 | 2 | பேதைதான் |
| 51 | 235 | 2 | மொழியினும் |
| 54 | 252 | 1 | விளையாட முன்வருவார் |
| 57 | 270 | 3 | இயமனை எழுப்பும் |
| 63 | 310 | 13 | பதினொன்று அறையும்வரை |
| 67 | 329 | | 329—341 வரை |
| 68 | 336 | 3 | பிழைபட்டில்லேன் |
| 72 | 360 | 6 | தாம்பெறு பெருமை |
| 79 | 396 | 1 | அத்துணை தனைக்கெடுத்து |
| 93 | 482 | 1 | என்ன உரைக்கின்றாய் |
| 95 | 491 | 12 | நடனத்தால் |
| ,, | ,, | 19 | எள் அளவிடமில் |
| 105 | 547 | 3 | கயமுறுசுழி |
| 132 | 654 | 5 | கொள்வது கற்பெனின் |

PRINTED AT
**FREE PRINTERS**
MADRAS 1.